ரிஜிஸ்டர் நெ. 2041

தனிப் பிரதிவிலை | வெளி நாடு 0-1-6 | உள் நாடு 0-1.0

# குடி அரசு

| | |
|---|---|
| வருட சந்தா முன்பணம் — | ரூ. 3—0 |
| 6-மாத சந்தா ,, — | ,, 1-12 |
| வெளி நாட்டிற்கு ,, — | ,, 4—0 |

வாரப்பதிப்பு.

ஆசிரியர் ஈ. வே. ராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங். 1க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2.
☞ நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 5 | ஈரோடு, சுக்கில ஹு பங்குனி மீ 24உ (6—4—1930) ஞாயிற்றுக்கிழமை | மலர் 45

சென்னை, திருச்சி, மதுரை, கொழும்பு முதலிய பல இடங்களில் நடைபெற்ற வைத்திய மகாநாடுகளிலும், மருந்து கண் காட்சிகளிலும், அரசாங்க அதிகாரிகளாலும் பரீட்சிக்கப்பட்டு முதல்தரமான மருந்துகளென்று அநேக தங்க பதக்கங்கள் பரிசு பெற்றவரும், வைத்திய சிம்மம், வைத்திய பூபதி, வைத்திய ஆசிரியர், ஸ்பெஷலிஸ்ட் என்று பல பட்டங்களைப் பெற்றவருமாகிய,

## டாக்டர் சிங்காரம் அவர்களின்

# மிகவும் குணமுள்ள மருந்துகள்.

[ஓர்யோகீஸ்வாரின் அநுபவ முறைப்படி தயார்செய்யப்பட்டது.

உலகப் பிரசித்தி பெற்ற

### மஹா சந்தனாதித் தைலம்.

அநேக பச்சிலை மூலிகைகள் சேர்ந்தது. கண்பார்வை குறைவாயிருந்த அநேகருக்கு இந்தத் தைலத்தின் உபயோகத்தினால் நல்ல பார்வை ஏற்பட்டிருக்கிறது.

கை, கால், கண் எரிச்சல், கண் சிகப்பு. கண்ணில் நீர்வடிதல், கண் பூ. பீளை சாருதல், மேக நீர், வெள்ளெழுத்து, நித்திரையின்மை, ஒருதலை நோய் பீனிசம், காதிரைச்சல், காதுமந்தம், மண்டை குத்து முதலிய சிரசிலுண்டாகும் பல நோய்களைக் குணம் செய்யும். வெட்டை சூடு, தேக காங்கை முதலிய எல்லாவித உஷ்ணத்தையும் போக்கி சரீரத்திற்கு குளிர்ச்சியையும் நல்ல சுகத்தையும் கொடுக்கும்.

ஒரு முறை இந்தத் தைலத்தை உபயோகித்தவர்கள், அவர்களே மற்றவர்களுக்கும் சிபார்சு செய்து வருகிறார்கள். இதன் உண்மையை நீங்களும் ஒருமுறை பரீட்சித்துப் பார்க்கவும். ஆண், பெண் யாவரும் ஸ்நானம் செய்யலாம்.

24 அவுன்ஸ் டின் ரூ. 4. 12 அவுன்ஸ் டின் ரூ. 2—2—0

### சலாமிசிரி லேகியம்.

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

கைகால் அசதி, சோம்பல், இடுப்பு வலி, நரம்புத் தளர்ச்சி, சொப்பனஸ்கலிதம், சம்போக காலத்தில் ஏற்படும் துரிதஸ்கலிதம், முதலிய கொடிய வியாதிகளை நீக்கி தளர்ந்த நரம்புகளை கெட்டிப்படுத்தி வீரிய விருத்தியை உண்டாக்கும். மனதுக்கு உற்சாகத்தையும், சுறு சுறுப்பையும் உண்டாக்கும். எவ்வளவு கடின வேலைசெய்தாலும் யாதொரு களைப்பும் உண்டாகாது. சம்போக இன்பத்தை முற்றிலும் அநுபவிக்கச் செய்யும்; சாப்பிட மதுரமுள்ளது.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2—8—0

### மகா வில்வாதி லேகியம்.

அஜீர்ணம், வயிற்றுப்பிசம், பசிமந்தம், நெஞ்சில் கரகரப்பு, குலை எரிவு, வாயில் ஜலம் ஊரல், நெஞ்செரிவு, வாந்தி, தலைசுற்றல் வயிற்றுவலி, அஜீர்ணத்தால் ஏற்படும் வயிற்றுப்போக்குகள், நாவரோசிகம், மயக்கம், கை கால் குடைச்சல் முதலிய பித்தம், பித்த வாய்வு சம்பந்தமான பலவித வியாதிகளை நிவர்த்தி செய்து நல்ல பசிதீபனத்தையும், ஜீர்ண சக்தியையும் உண்டாக்கும். பத்தியமில்லை.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2.

### அமிர்த சஞ்சீவி லேகியம்.

மனிதருக்குண்டாகும் நோய்களுக்குப் பல காரணங்கள் இருந்தாலும் மலச்சிக்கல் ஓர் முக்கிய காரணமாயிருக்கிறது. ஆதலால் மலச்சிக்கலை உடனே நிவர்த்திக்கவேண்டும். இந்த லேகியம் எவ்வித மலச்சிக்கலையும் நீக்கி, தாராளமாய் காலை, மாலை மலம் வெளியாகும்படி செய்வதுடன், வாய்வு, தொந்தரவுகளையும் போக்கும்.

பலவித பழச் சத்துக்களும், சிறந்த மூலிகைகளும் சேர்த்து தயார் செய்யப்பட்டது. சாப்பிட மதுரமுள்ளது. பாலர் விருத்தாப்பியர் யாவரும் சாப்பிடலாம்.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2.

### குழந்தை மருந்துகள்.

கோரோஜனை மாத்திரை பாட்டல் அணா 8. கஸ்தூரி மாத்திரை பாட்டில் அணா 8. கட்டுவாதி மாத்திரை அணா 8. காரமாத்திரை அணா 8. சுகபேதி மாத்திரை அணா. 8. க்ரப்பான் எண்ணெய் ரூ. 2—0—0 மாந்தக்குடோரி எண்ணெய் ரூ. 1—0—0.

இன்னும் வல்லாவித நோய்களுக்கும் மிகவும் குணமுள்ள மருந்துகள் கிடைக்கும்.

எல்லா மருந்துகளுக்கும் பாக்கிங் தபால் செலவு பிரத்தியேகம். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவேண்டும் விலாசம் தெரிவித்தால் முழு விவரமடங்கிய கேட்லாக் இனாமாய் அனுப்பப்படும். கமிஷன் ஏஜெண்டுகள் தேவை.

**டி. சி. சிங்காரம் அண்டு கோ,**

தெப்பக்குளம்போஸ்டு, திருச்சினாப்பள்ளி

## தாது புஷ்டியில் மன்மதனுக்கு ஒப்பாவீர்கள்

நீங்கள் என்றுமழியாத இளமைப்பருவத்தை அடைய
வேண்டுமானுல் பழனி, ஆர் எம் கே

# தங்க பஸ்பம்

## நரசிங்க லேகியத்தில் சாப்பிடுங்கள்

### தாது புஷ்டிக்கு இதற்கு நிகரான மருந்து ஒன்றுமே இல்லை

இது பிரபுக்கள் சாப்பிட வேண்டிய மருந்து மற்றவர்கள் சாப்பிட்டு தாங்க முடியாது:
ஒரே வேளையில் கொடுக்கும் பலனைப் பார்த்தால் உங்கள் மனதை அப்படியே சுவாச் செய்து விடுகிறது

### தாது புஷ்டியில் மன்மதனேனவென மயங்குவார்கள்

இதிலமைந்திருக்கும் ஓர் ரகசிய அபூர்வ சக்தி உபயோகித்தவர்களுக்குத்தான் தெரியும்

இதை காலை மாலை கோய் பலம்போல் 1 அல்லது 2 மண்டலம் உட்கொண்டால் வெகு சீக்கிரத்தில் தாதைக் கட்டி விரியத்தையும் பலத்தையும் கொடுத்து இழந்துபோன ஆண்மைத்தனம் முழுமையும் திரும்ப வரும்படி செய்கிறது. இக்குணம் இதிலமைந்திருப்பது மகா ஆச்சரியமாயிருக்கிறது. இப்படியும் ஒரு மருந்துண்டாவென்று பிரமிக்கச் செய்கிறது. தாதுவைக்கட்டி இல்வாழ்க்கையில் இன்பத்தைக்கொடுத்து பால்யம், யௌவனம், விருத்தாப்பியம் இந்தப் பருவங்களில் அடையவேண்டிய காலத்திற்கு முன் அடைந்த விபரீதங்களை நிவர்த்தி செய்யும். கிழத்தனத்தை நீக்கி வல்லமையடையச் செய்வதில் பேர் பெற்றது. நீர்ழிவு, பிளவை, குன்மம், காசம், க்ஷயம், ஈளை, இருமல், கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு, கிரந்தி முதலிய சகலவித கர்ம வியாதிகளும் நீரும். தளர்ந்துபோன நரம்புகளுக்கு முறுக்கேற்றும். விரியத்தைக் கெட்டிப்படுத்தி ஆண்மைக்குறைவை நீக்கி தாது புஷ்டியை உண்டாக்குவதில் இதற்கு மிஞ்சின ஔஷதம் இல்லை. 100 நாளைக்கு தங்க பஸ்பமும், நரசிங்க லேகியமும் ரூ. 100. 50 நாளைக்கு ரூ. 50. 25 நாளைக்கு ரூ. 25. சிங்கப்பூர் வாசகள் சார்ஜு ரூ. 2-ம் சேர்த்து முன்பணம் அனுப்பவேண்டும்.

### நற்சாக்ஷி

நான் உட்லேண்டு ஸ்டேஷன் மாஸ்டர் மூலமாய் தங்களிடமிருந்து நரசிங்க லேகியமும், தங்க பஸ்பமும் வாங்கி சாப்பிட்டதில் இப்போது புதிய பலம் அடைந்திருக்கிறேன்.

S. Jesudasan Railway Overseer, Woodlands, Singapore

## புத்திர சந்தானம் உண்டாகிவிட்டது.

நற்சாட்சி:—எனக்கு விவாகம் நடந்து ஆறு வருடம் வரை புத்திரசந்தானமில்லாமலிருந்தது. தங்கள் தங்க பஸ்பமும், நரசிங்க லேகியமும் தருவித்து 25 நாட்கள் சாப்பிட்டதில் என் குறைகள் பூராவும் நீர்ந்து புத்திரசந்தானமுண்டாகி விட்டது. இந்த உண்மையை உலகத்தாருக்கு எடுத்தோத முன் வந்திருக்கிறேன். இம்மருந்துகள் தேவ ஔஷதங்கள் என்று சொல்வது மிகையாகாது. சரீர திடத்தையோ, புத்திக்கூர்மையையோ, மனமகிழ்ச்சியையோ மேலாய புத்திரப் பேற்றையோ விரும்பும் ஒவ்வொருவரும் இம்மருந்துகளை வாங்கிச் சாப்பிட்டால் நினைத்தது லபிக்குமென்பதே எமது துணிபு. தாங்கள் நீண்ட ஆயுளைப் பெற்று வாழ எல்லாம் வல்லபிரான் இன்னருள் புரிவாராக.

(Sd.) நல்லதம்பி, கட்டுப்பட்டை, சிலோன், 22—2—27

## ஒரு அஸிஸ்டெண்ட் ஸர்ஜன்.

1—9—24ல் கோலாசெலங்கர் டிஸ்டிரிக்ட் ஹாஸ்பிட்டல் அசிஸ்டெண்ட் சர்ஜன் தமது தங்க பஸ்பத்தைப் பற்றி புகழ்வதைக்கவனியுங்கள்:—அன்பார்ந்த வைத்திய ஆசிரியர் ஆர். எம். கே. வேலுசாமி பிள்ளை அவர்களுக்கு அதிக பக்தியுடன் எழுதுவது யாதெனில், தங்கள் தங்க பஸ்பமும் நரசிங்க லேகியமும் இரு நோயாளர்களுக்கு 50 நாட்களுக்குக்கொடுக்கப்பட்டது. இருவரும் தங்கள் குறைகள் நீங்கி சௌக்கியத்துடனிருக்கிறார்கள். தாங்கள் அருமையாகச்செய்த பஸ்பமும், லேகியமும் யாவராலும் கொண்டாடத்தக்கதே. இன்னும் 100-நாள் தங்கபஸ்பமும், சாலாமிசிரி அல்வாவும் ரூ. 50க்கு வி. பி. செய்யவும்.

Nagalingam Hospital C/o District Hospital, Kualaselenger.

## வைத்திய ஆசிரியர்:

## ஆர். எம். கே. வேலுசாமி பிள்ளை

தந்தி விலாசம் "வேலுசாமி" பழனி — சித்த வைத்தியசாலை, பழனி — S I Ry

# சுயமரியாதைத் தலைவருக்கு எனது மூன்றாம் கடிதம்

கைவல்யம்.

தங்களுக்கு இதற்கு முன் இரண்டு கடிதமெழுதினேன். இந்த சமயத்திலில்லாத தீண்டாமையை அருமையினால் ஏற்படுத்திக் கொண்ட அஞ்ஞானத்தை நீக்குவதற்குசிவபெருமானேபரமாசாரியன்வேஷமாகவந்து தீண்டாமையில்லையென்றுபிரம்ம ஸ்ரீ சங்கராச்சாரிக்குஉபதேசம்செய்தார்.பிரம்மஸ்ரீ சங்கராச்சாரியும் ஒத்துக்கொண்டு மனம் தெளிந்தார் என்னும் ஆதி சங்கராருடையகதையைப்பற்றினவிஷயம் முதற் கடிதத்திலும்.

தபசால் மெலிந்த சந்நியாசிகளுக்கும் பசியால் வாடின ஏழைகளுக்கும் அன்னதானம செய்யவேண்டுமே யல்லாமல் வக்கீல் உத்தியோகஸ்தன் அவர்கள் குமஸ்தாக்கள், வியாபாரி, தூதன், அன்னத்தை விற்பவன், செய்த நன்றி மறந்தவன், தன் பயனையே தேடிக்கொள்ளுகிறவன் முதலிய பார்ப்பார்களுக்கு சங்கராச்சாரி அன்னதானம் செய்வது சனாதன தரும சாஸ்திரத்திற்கு விரோதமென்றும் சர்வம் பிரம்மமயம் ஜகத் தென்னும் ஆச்சாரி பீடத்திற்கு ஒத்து பொருந்தாதென்பதுமான நியாயங்களை இரண்டாம் கடிதத்திலுமெழுதினேன். தாங்கள் ஆச்சாரி சுவாமிகளிடம் போவதாயிருந்தால் இந்த மூன்றாம் கடிதத்திலுள்ள விஷயங்களையும் சுவாமிகளின் சந்நிதானத்தில் தெரியப்படுத்தவே இதை எழுதி தங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

சங்கராச்சாரியார் லோகத்தில் எல்லோருடைய க்ஷேமத்தைக் கருதித்து தபஸ் செய்து கொண்டிருப்பதாக ஸ்ரீ முகத்திலிருக்கிறது.

பொன்னுக்கும் பிரக்யாதிக்கும் மற்றுஞ் சில இன்பத்திற்கும் தமமுடைய சக்தியை மாற்று பேரம் செய்வதே லட்சியமாக உடையவர்களுக்கும் அணி வகுத்த சைநியத்தோடு பிரயாணம் செய்வதே தமது வல்லமையைக் காண்பிக்கிறவகை என்று நினைக்கிறவர்களுக்கும், இந்திரியங்களால் அனுபவிக்கிற இன்பங்களை நாம் அனுபவிக்கக்கூடிய சுகமென்று நினைக்கிறவர்களுக்கும், நமது தேசமானது பொன் குவியலாகத் தோன்றுகிறது. இந்திரிய உலகத்திற்கு வெகு தூரத்தில் பாய்ந்து கொண்டிருக்கும் நித்தியத்துவமாகிற நதியானது ஜலம் பருகி வருவதினால் ஜன்மம் வேண்டுமென்கிற எவருடையதாகமானது அடங்கிற்றோ, பாம்பானது மேல் தோல் நீக்குவது போல எவருடைய ஆணவமானது காமம், காஞ்சனம், கீர்த்தி யென்கிற மூப்பாசங்களை விலக்கி விட்டதோ, பாசத்தால் கட்டுப்பட்டவர்களால் இன்பமென்று மதிக்கப்பெற்றவையும் உள்ளே ரம்பப் பொடியை நிறைத்து வெளியே பொன்முலாம் பூசப்பெற்றவையுமான போலி உண்டைகளுக்காகச் செய்யும் அற்பமான சண்டைகளையும் எவர்கள் நிசலமென்கிற உந்நத ஸ்தானத்தினின்று அன்புடனும் பிரியத்துடனும் பார்க்கிறார்களோ. யாருடைய சஞ்சித சற்கருமங்கள் அவர்களுடைய சிருஷ்டியினின்றும் அஞ்ஞானத்தை நீக்கிவிட்டு உண்மையைப்பார்க்கும்படி செய்கிறதோ அவர்களுக்கு நமது தேசமானது சுவர்க்க பூமியாக விருக்கிறது. நமது தேசத்தைப்பற்றின பெருமைகளில் இவை யிரண்டும் முக்கிய பெருமையுடையவைகளாகும்.

ஆச்சாரி சுவாமிகளுக்கு நமது தேசம் சுவர்க்க பூமியாய்த் தோன்றிக் கொண்டிருப்பதிலும் அந்த சுவர்க்க பூமியில் தபசு செய்வதிலும் அந்த தத்துவத்தால் எல்லோரையும் சுவர்க்கத்திற்கு அனுப்புவதிலும் நமக்கு விவகாரமில்லை ஆனால் அந்தத்தபசு சிஷ்ய கோடிகளுக்கு எவ்வளவுபயன் பட்டிருக்கிறது? என்பதையும்சுவர்க்கத்திற்குப் போகும் மத்தியில் சிஷ்ய கோடிகள் படும் அலங்கோலமும்துன்பமும் தரித்திரமும் எவ்வளவு தூரம் பரிகரிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் சுவாமிகளிடமிருந்து நீங்கள் தெரிந்து கொண்டு வர வேண்டும்.

பணம் வாங்குவதில் மாத்திரம் உலகத்திலுள்ளவர்கள் எல்லாம் சுவாமிகளுக்கு சிஷ்யகோடிகளாய்க் கொள்வதும்சோறுபோடுவதில் பார்ப்பான் மட்டுமே சிஷ்யர்களாவதும் அந்தப்படி பார்ப்பாரச் சிஷ்யர்களுக்குச சோறுபோட்ட மிச்சப்பணத்தை மடத்துச் சர்வாதிகாரிகளென்றும் தன் பந்துக்களுக்குச் சர்வ மானியமாய் விட்டு விடுவதும், காணிக்கை சம்பம் வாங்குவதும் பூஜை செய்வதும் ஆளறிந்து பணக்காரனைக்கண்டு குருஞ் சிறிப்புக் கொள்வதும் கீழ் மேல் கற்பத்துப் பிரசாதம் கொடுத்து சாஸ்திரப்பிரசங்கம் செய்வதுமான தபசாலும் அதற்கு மேற்பட்டதபசு ஏதாவதிருந்தால் அதாலும், சுவாமிகள் ஞான பூமியை அடைந்தாலும் அடையலாம். பார்ப்பார சிஷ்ய கோடிகளும் விருந்துண்ட மயக்கத்தால் சுவர்க்கத்தின் சுகத்தைப்போலத் தூங்கிக்கொண்டிருக்கலாம். அதனால் மற்றவர்களுக்கு கிடைத்த லாபமென்ன? இந்தலோகத்தில் சுவாமிகளின் சிஷ்ய கோடிகள் பசியால் வாடிக் கொண்டிருக்க அந்த ஒரு சிறு பசியைத் தீர்த்துவைக்க முடியாத தபசு பசியே இல்லாத சுவர்க்க பூமியை உண்டாக்கித்தரும் என்பதற்கு ஆதாரமென்ன?

"இந்த லோகத்தில் உள்ள அற்ப சுகங்களைப்பற்றின கவலை கூடாது" "சுவர்க்கத்திற்கே யெல்லோரும் ஆசைப்படவேண்டு"மென்று சுவாமிகளின் உபதேசம் சொல்லும். ஆனால் சுவாமிகளுக்கு வேண்டிய அன்னம் பால், பழம், பலகாரம், சுவாமிகளின் தெய்வங்களுக்கு ஆறுகால நைவேத்தியம், மடத்துச் 'சர்வாதிகாரிகள், சாஸ்திரிகள், கூடயிருக்கும் பார்ப்பார்கள், ஸ்ரீ முகம் கொண்டுபோகும் தூதர்கள், சுவாமிகளின் பிரபல கதைப்பிரசாரம் பண்ணும் சிஷ்யர்கள் இவர்களெல்லாம்; சுவாமிகளின் காலக்ஷேபத்தைக் கேட்டும்கூட காலக்காப்பிக்குடியில்லாமலிருக்க முடியவில்லையே? மேற்றிசைவாசிகளாயுள்ள பற்பல ஜாதியாருடைய மனோவிர்த்திகள் திசைதோரும் அவர்களது குணம், போக்கு, சிரமம், கல்வி முயற்சி இவைகளின் முன்னேற்றத்திற்கு முன்னால் சுவாமிகளின் தபசும் சுவாமிகளின் சிஷ்ய கோடிகள் கேட்ட உபதேசங்களும் நிற்க முடியாமல் வலியற்று, ஒளி மழுங்கி ஒன்றுக்கு முதவாமல் போகிறது. சுவாமிகளின் குரு பீடத்து எந்த ஞான சாஸ்திரத்தை ஈடாகக் காட்டினாலும் அவர்களால் உண்டாக்கப்பட்ட ஒரு சிறு பொருளிலும் சுவாமிகளின் சிஷ்யர்களுக்கு ஆசை போகாமல் அவர்கள் நிழலில் பல்லைக்காட்டிப் பரிதவித்து நிற்க ஏற்பட்டது மன்றி அப்பொருள் அவசியத்திலும் அவசியமாக வந்து முடிந்து மிருக்கிறதே.

நமது தெய்வங்கள் ஆச்சாரி சுவாமிகளின் தபசை ஏற்று அத்தபசின் பயனைச் சிஷ்யகோடிகள் கண்டுகளிக்கும் வெளிச்சத்திற்குத் தீவட்டிபோட கொட்டைமுத்து விளைவதற்குக் கூடப் போதுமான மழையைப் பெய்விக்காமல் விளைந்த சிறிது பொருளில் சில பாகம் மேனூடு போக மிச்ச எண்ணெயில் போடும் தீவட்டி வெளிச்சம் போதாமையால் மின்சார விளக்கும் கியாஸ் லைட்டும் மண்ணெண்ணெய்த் தீவட்டியுமல்லவா நமது தெய்வங்களுக்கே விருப்பமாகி விட்டது. நமது தெய்வத்தின் ஜோதி ரூபத்தை நமக்குக் காட்டுவதற்கு அன்னிய நாட்டு கற்பூரத்தையல்லவா யாஜித்து நிற்கிறது. ஆச்சாரி சுவாமிகளுக்கோ சீமை பனாரஸ் ரகங்கள் வில்வெட்டுகள் இன்னும் பல அன்னிய நாட்டுச் சாமான்களும் சிஷ்ய கோடிகளிடம் தபசைக் காட்டுவதற்கு அவசியமாகவேண்டும். மடத்துச் சர்வ அதிகாரிகளுக்கோ சுவாமிகளின் தபசின் பெருமையைப் பணக்காரர்களிடம் தெரியப்படுத்துவதற்கு மோட்டார் சவாரி முதற்கொண்டுதற்காலத்து நாகரீகங்களெல்லாம் வேண்டும். மடத்து சாஸ்திரிகளோ சுவாமியின் பேரால் சேகரிக்க முடியுமான லௌகீக சுகங்களையெல்லாம் சேகரித்துக்கொள்ளவேண்டும். மோக்ஷத்திற்கே பிறந்து மற்ற விவகாரங்களை யெல்லாம் விட்டுவிடுவதற்கே பிறந்த பார்ப்பாருக்கு மன சாந்திக்காக மேனாட்டு வாசி வஸ்துக்களே வேண்டிய நிலையில் வந்துகொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமையில் நமது தெய்வங்கள், ஆச்சாரிகள், அவர்களுடைய அதீனம் பிரதான சிஷ்யர்கள் ஆகிய இவர்களே இப்படியிருந்தால் இவர்களின் அருளாலும், தபசாலும், ஆசீர்வாதத்தாலும், உபதேசத்தாலும் பாரமார்த்திகத்திற்குப்போகவேண்டிய மற்ற நமது நாட்டு மக்களுக்கு ஆசையில்லாமலிருக்குமா? இந்த ஆசையின் அவசியத்திற்கு சுவாமியின் தபசு எவ்வித நன்மையைச் செய்கிறது?

ஆச்சாரி சுவாமிகள் உலக க்ஷேமத்தின் நிமித்தம் தவசிருப்பதாக அவரைச் சாஸ்திரிகளும் பார்ப்பார்களும் சொல்லி ஊரெல்லாம் பணம் சேகரித்து சுவாமிகளும் அவர்களைச் சேர்ந்தவர்களும் பார்ப்பனர்களும் திருப்தியடைந்து விட்டால் சுவாமிகள் செய்யும் தபசு சுவாமிகளுக்கும் பார்ப்பார்களுக்கும் மாத்திரம் பலிக்கிறதே அல்லாது நமது நாட்டிற்கு எந்த வழியில் எந்த சமூகத்திற்கு நன்மை செய்கிறது. ?

பருவங்களில் பெய்யும் மழையைக் கூட ஆச்சாரி சுவாமிகள் வந்ததினால் தான் பெய்ததென்று "சுதேசமித்திரன்" பத்திரிகையில் பிரசுரிக்கிறார்கள். சுவாமிகள் போய் வந்த ஊர்களில் குடிக்க இன்னும் தண்ணீரும் மழையுமில்லாத ஊர்கள் பல. பத்துப்பணக்காரனிடம் பாதகாணிக்கை வாங்கி ஒரு பணக்காரன் க்ஷேமமாக விருந்தால் சுவாமிகளின் கடாக்ஷமென்று பார்ப்பார்கள் பிரசாரம் செய்கிறார்கள். சுவாமிகளுக்குப் பாதகாணிக்கையும் தங்கத்தாம்பாளமும் வெள்ளிக்கொப்பரையும் இன்னும் அநேகம் கொடுத்த பணக்காரர்களில் பலர் ஏழையானதும் குடும்பத்தில் கலகம் வந்து கோர்ட்டுக்குப் பணம் செலவு செய்து குடும்பம் பாகமாகி கஷ்டப்படுவதுமான சம்பவம் இப்பொழுது அநேகமிருக்கிறது. சுவாமிகளுக்குப் பணக்காரன் விசேட உபசாரனை செய்து அதில் ஒரு பணக்காரனுக்குக் குழந்தை பிறந்தால் சுவாமிகளின் ஆசீர்வாதமென்று பார்ப்பார்கள் சொல்லுவார்கள். சுவாமிகள் போய் வந்த வீட்டில் இருந்த குழந்தைகள் செத்துப்போனதும் குழந்தையே இல்லாமல் போனதும் ஏனென்றால் பிராமண துவேஷியென்பார்கள். சங்கராச்சாரிக்கு வேண்டிய மானியம் விட்டு மடத்திற்குப் பிரதம சிஷ்யராகவிருக்கும் மைசூர் மஹா ராஜாவிற்குஏன் குழந்தையில்லை? ஆச்சாரி சுவாமிகளின் ஆசீர்வாதம் மைசூர் ராஜாவிடம் ஏன் போகவில்லை? என்று கேட்டால் மைசூர் ராஜாவிடம் போகாவிட்டாலும் ராஜா தம்பிக்கு குழந்தையிருப்பது சுவாமிகளின்

இதன் தொடர்ச்சி 18-ம்பக்கம் பார்க்க

# இதிகாசங்கள்

## இராமாயணம்—உயுத்த காண்டம்

– கட்டுரை—5

திரு. சந்திரசேகரப்பாவலர்)

[சருக்கங்கள் 21 முதல் 24 முடிய

நளன் இராமனைநோக்கி, "எனது தந்தையாகிய விஸ்வகர்மா என் தாயாருக்குக் கொடுத்த வரத்தால் எனக்கு அவரைப்போலும் திறமை உண்டு. கடலரசன் கூறியது உண்மையே! நான் கடலில் அணை கட்டுகிறேன்" என மொழிந்தான். இராமனுடைய ஆணைப்படி வானரர் மரங்களையும் மலைகளையும் பிடுங்கிக் கடலில் போட்டார்கள். நளன் ஐந்து நாட்களில் அணைக்கட்டினான். அந்த அணை நூறு யோசனை நீளமும் பத்து யோசனை அகலமுமாக இருந்தது. கடலின் தென்கரையில் வீடணன் காவல் செய்திருந்தான். எல்லாரும் அக்கரையை அடைந்தார்கள். இராமன் நல்ல சகுனங்களைக் கண்டான். இலங்கையைக் கண்டவுடன் இராமன் சீதையை நினைந்து ஏங்கினான். பின், அவன் இலக்குவனைப் பார்த்து இலங்கையின் பெருமைகளை விவரித்துக் கூறினான். வானர சேனை கருடனைப்போல அணிவகுக்கப்பட்டது. உடனே இராமன், "சுக்கிரீவ! சேனையை அணிவகுத்தோம். இனி சுகன் என்ற அரக்கனை விட்டுவிடலாம்." என்றுசொன்னான். உடனே சுகன் விடுதலை பெற்றான். அவன் ஓடிப்போய் இராவணனை அடைந்து பணிந்து நடந்த செய்திகளைப் புகன்று, "சீதையை விட்டுவிடு, இல்லையானால் போருக்குத் தயாராக இரு." என்றான். அதைக் கேட்டமாத்திரத்தில் இராவணன் சினமடைந்து, "என்னைக்கண்டு அஞ்சி ஓடின தசரதனுடைய மகனுக்கா நான் அஞ்சவேண்டும்? சீதையை விடேன். எப்படியாவது இராமனைக் கொல்வேன்." என்று சொன்னான்.

பின், இராவணன் தனது அமைச்சராகிய சுகனையும் சாரனையும் வானர சேனையின் நிலைமைகளையெல்லாம் அறிந்து வரும்படி அனுப்பினான். அவர்கள் வானர உருவெடுத்து வானர சேனையுள் நுழைந்தார்கள். அவர்களை வீடணன் கண்டுபிடித்து இராமன் முன் நிறுத்தினான். அவர்கள் தம்மைக் காப்பாற்ற இராமனை வேண்டினர். இராமன் அவர்களைத் தொந்திரவு செய்யாமல் விட்டுவிடும்படி கட்டளையிட்டு இராவணனிடம் சென்று தான் மறுநாள் காலையில் போர் தொடங்குவதாகச் சொல்லச் சொன்னான். அவர்கள் ஓடிப்போய் இராவணனைக்கண்டு நடந்ததைச் சொன்னதோடு சீதையை இராமனிடம் கொண்டுபோய் விடும்படி கூறினார்கள். இவ்வரலாற்றை ஆராய்வோம்.

நளன் என்ற வானரன் தேவர்களுடைய தச்சனாகிய விசுவகர்மாவின் மகனும். வானரர்கள் ஒருவராவது அவருடைய தகப்பனுக்குப் பிறந்தவர்களாகச் சொல்லப்படவில்லை. வேண்டுமென்றே தமக்கு உதவி செய்தார்களா தமிழரான? சுக்கிரீவனுறியவரைக் கூட குரங்குகளென்றும் அதிலும் அவனுக்குப் பிறந்தான் இவனுக்குப் பிறந்தான் என்று தம் தம் தகப்பனுக்குப் பிறக்காமல் வேறு நடியர்களுக்குப் பிறந்த விபசாரி பிள்ளைகளென்றும் கூறப்படுகிறது. ஆரியர் செய்யும் பித்தலாட்டங்களுக்கு அளவும் உண்டோ? பிறபெண்களைச் சோரம் செய்யும் ஒழுக்கங் கெட்டவனாகிய தடியன் விசுவகர்மனுக்கு வரம் கொடுக்கும் பெருமையும் உண்டோ? மிக அழகு!

நளன் போட்ட அணை நூறுயோசனை நீளமும் பத்து யோசனை அகலமுமாக இருந்ததாம்! நூறு யோசனை அகன்றிருந்த கடலுக்கு நூறு யோசனை நீளமுள்ள அணை போடப்பட்டது போலும்! அந்த அணை நீளத்தில் பத்தில் ஒருபங்கு அகலமுள்ளதாம்! பொய்மைக்கும் கணக்கில்லைபோலும்! பாவியாகிய கோடரிக்காம்பு வீடணன் தெற்குக் கரையில் காவல் காத்திருந்தானும்!

தெற்குக் கரையை அடைந்த பின்னர் வானர சேனை அணிவகுக்கப் பெற்றது. அதன் பின்னரே சுகன் என்ற அரக்கன் இராமனால் விடுதலை பெறுகிறான். இதனால் சுகன் என்றவன் எங்கே இராவணனிடம் போய் தாங்கள் கடலைத் தாண்டும் செய்தி சொல்லி அதனால் தமக்கு இடையூறு விளையுமோ என்று அஞ்சியவனே இராமன்! இல்லையானால் பின்னால் வந்த சுகசாரணர்களை இராமன் உடனே விட்டுவிடுகிறான். இந்த சுகனிடம் அப்படி நடந்து கொள்ளவில்லை. மொழிபெயர்ப்பினர் சீனிவாசய்யங்கார் பக்கம் 105ல் "சுகனிடத்தில் இராமன் இப்படி நடக்கவில்லை" என்று எழுதுகிறார். நாம் முன்னர் சுகனைப்பற்றிய வரலாறே முன் பின் பொருத்தமில்லாமல் இருப்பதால் இராவணனை இழிவுபடுத்த வந்த இடைச் செருக்கன் என்று நாம் முன்னரே வரம்பு கட்டினோம். மேலும் சுகனையனுப்பி சுகன் பிடிபட்டபின்னரே இராமன் மூன்றுநாள் கடலரசனைநோக்கித் தவம்செய்கிறான். பின்னர் ஐந்து நாட்களில் பெரிய அணை கட்டப்பெற்றது. அவர்கள் அக்கரை சென்றபின் சுகன் விடுதலைப்பெறுகிறான். இவ்வளவுக்கும் இடையில் பத்து நாட்கள் கழிந்தன. இப்பத்து நாட்களாக இராவணன் தான் அனுப்பிய சுகனுடைய நிலைமை ஆராயாமலா இருந்திருப்பான்? சுகனைத் தவிர அவனுக்கு வேறு ஆட்கள் இல்லையாதோ? என்னே அறிவில்லா தகூற்று? பூனைதான் கண்ணை மூடிக்கொண்டு பாலைக் குடித்தால் உலகம் எல்லாம் அழிந்துவிட்டது என்று நினைத்துக்கொள்வதுபோல இந்த ஆரியர் தாங்கள் அளக்கும் பொய்புரைகளைப் பிறர் அறிய முடியாதென நினைக்கின்றார்கள் போலும்!

இராவணனுடைய பேச்சால் முன் தசரதன் அவனைக்கண்டு நடுங்கி ஓடியிருக்கிறானென்ற தெரியவருகிறது. அதனாலே அவன் விசுவாமித்திரன் இராமனைத் தன்னோடு அனுப்பச் சொன்னபோது முடியாதென்னக் கதறுகிறான். மேலும் தன்னால் இராவணன் முன் நிற்கவும் முடியாதே எனப் புலம்புகிறான்.

சுகசாரணர்களையும் வீடணனே கண்டுபிடித்தானும்! இத்தகைய பாவிக்கு இராமன் ஏன் முடிசூட்டியிருக்க மாட்டான்? கடலில் அழுந்துகிறவனுக்கு புல்லும் கட்டைபோலத்தானுமல்லவா? வீடணன் சுகனையும் சாரணனையும் இராமன் முன் கொண்டு வந்து விடுகிறான். இதனால் வீடணன் இராவணனிடமிருந்து அரசைக்கைப் பற்றும் வஞ்சகப் பேராசையாலே தான் அனுமானோடு சூழ்ச்சி செய்து இராமனை வந்து அடைந்தான் என்பதற்கு என்ன ஐயம்? சுக சாரணர்கள் இராவணனிடம் சீதையைவிட்டு விடும்படி சொன்னார்களாம் இது எவ்வாறு பொருந்தும்? இராவணனைக் கண்டால் அஞ்சி நடுங்குபவர்களும் அவனுடைய இயல்பு முழுதும் தெரிந்த அமைச்சர்களுமாகிய அவர்கள் வீடணனால் பிடிக்கப்பட்டார்களென்பதும் இராவணனிடம்சீதையைவிட்டு விடக்கூறினார்களென்பதும் பொருந்தாப் போலி உரைகளே! இனி கம்பர் போக்கை ஆராய்வோம்.

கம்பர் சுகனுடைய வரலாற்றைக் கூறவில்லையென்று முன்னரே கூறினோம். அவருக்கு இராமன் அணை கட்டியதைப்பாடும்போதுகூட பெண்களைப்பற்றிக் கூறவேண்டும் என ஆசை உண்டாகிறது. அதனால் அவர் கடல் நீர் விண்ணில் போய் அரம்பையருடைய சிவந்த ஆடைகளை நனைத்ததாகவும் நனைந்த சிவந்தஆடை அல்குலில் பொருந்தியதென்றும் அதனால் அப்பெண்கள் நாணினர் என்றும் கூறுகிறார். இது எவ்வளவு அருவருக்கத் தகுந்த பாட்டு! அது வருமாறு:

[சேது வந்தனப்படலம் 14ம் பாடல்]

"வேணுவின் நெடுவரை வீச
மீமிசை
சேண்உறு திவலையால் நனைந்த
செந்துகில்
பூணுறும் அல்குலில்பொருந்திப்
போதலால்
நாணினர் வானவர் நாட்டு
நங்கையர்."

அணை ஐந்து நாளில் கட்டிமுடிந்ததென வான்மீகி கூற அது மூன்று நாளில் முடிந்ததெனக் கம்பர் கூறுகிறார் பாடல் [66] இராமன் நளனை மார்புடன் தழுவிக்கொண்டு அவனைப்புகழ்ந்தான். எனக கம்பர் புதுக்கதை கூறுகிறார்.

இராமன் இலங்கைக் கரையில் சேர்ந்தான் என்று சொல்ல வந்த கம்பர் ஒற்றுக் கேள்விப் படலம் பாடல் 13ல் "மருங்கு அட வளர்ந்த மூலை மங்கை மணம் உன்னு வரும் கடக மங்கையினில் வள்ளல் நினைக்கின்றான்" என்று கூறுகிறார் பாடல்களில் தம்மனம்போல் பாடவில்லையானால் கம்பருக்குப்பாடவே முடியாது போலும்!

அணைகட்டியதோடு இராமனுடைய ஆணையால் நளன் வானரர்கட்கெல்லாம் பாடிகள் அமைத்ததாகவும் கம்பர் கூறுகிறார். இனிமேல்செல்லுதும்

---

## சுயமரியாதை மகாநாடு
### தொண்டர் கமிட்டி அறிக்கை 1.

நாளிது வருஷம் மே மாதம் 10, 11 தேதிகளில் ஈரோட்டில் நடைபெறும் சுயமரியாதை மகாநாட்டை சிறப்பாக நடத்திவைப்பதற்கு இளைஞர்களின் உதவி தேவையிருப்பதால் தமிழ் நாட்டின் மாணவர்களும், மாணவிகளும், மற்றும் சுயமரியாதை இயக்கத்தில் பற்றுடன் தொண்டாற்ற விரும்பும் இளைஞர்களும் மகாநாட்டுத்தொண்டர் படையில் சேர்ந்து கொள்ள வேண்டுமாய்க்கேட்டுக் கொள்ளுகிறோம். சேர இஷ்டமுள்ளவர்கள் கடித மூலமாகவாவது நேரிலாவது அடியில் கண்ட விலாசத்தில் தங்கள் பெயர்களை பதிவுசெய்துகொள்ள வேண்டும். தொண்டர்களுக்கு முன்னதாகவே பயிற்சி செய்விக்க வேண்டியிருப்பதால்கால தாமதமில்லாமல் பதிவு செய்து கொள்ளவேண்டியது அவசியமாகும். பதிவுசெய்து கொண்ட தொண்டர்களின் கூட்டம் கூடுவதின் தேதி பிறகு பிரசுரிக்கப்படும்.

M. S. சுப்பண்ணன்
தொண்டர் இலாகா காரியதரிசி.

E. S. ஆறுமுகம்,
E. A. வரதப்பன்,
தொண்டர் படைத்தலைவர்
Y. M. R. கிளப்
ஆஸ்பத்திரி ரோட், ஈரோடு.

## திருவாரூர்.

### ஓங்காரத்தின் ஆபாசமும் பூசாரிகளின் கொலைக்களமும்.

(விஜயபுரம் ப. நா. ஈ. எழுதுவது)

மேலே எடுத்துக்கொண்ட ஓங்காரத்தின் ஆபாசமென்பது திருவாரூரில் சமீபத்தில் நடந்த திருவிழா ஆகும். இவ்விஷயத்தை முற்றிலும் வாசகர்கள் மனம் தளராது படிக்கும்படி கோறப்படுகிறது. ஏனென்றால் நேரில் கண்ட உண்மையாதலால் வியாசம் விரிந்துவிட்டது. ஓங்காரம் என்று சொல்லப்பட்ட தேவதையின் திருவிழா தொன்றுதொட்டு நடைபெற்றுவரும் கொலைபாதக மூடவொழுக்கை முற்றிலும் சம்பந்தப்பட்டதொரு திருவிழாவாகும். அம்மன் பெயரைக் கேட்ட மாத்திரத்திலேயே ஜனங்கள் நடுங்குகிற நடுக்கமும், ஆரவாரமும், இவ்வூர் வாசிகள் திருவிழா முடியும்வரையிலும் அடைகிற பீதியும், ராக்காலங்களில் ஓங்காரம் வரும் வீதிகளில் போகக்கூடாதென்றும் எதிர்ப்படின் பட்டால்பிராணபத்தாய் முடியுமென்றும் சொல்லிக்கொள்வதைப் பார்த்தால் அறிவு வளர்ச்சியுள்ள இக்காலத்தில் யாரும் நகைக்காமல் இருக்க முடியாது. இக்கோயிலின் ஆரம்ப முதல் திருவிழா முடியும்வரையில் நடக்கும் விபரீத செயல் எங்குமே இல்லையென்று சொல்லிவிடலாம். வாசகர்கள் வாசிக்க கீழே உண்மை விளங்கும். குறிப்பிட்ட பத்துபேருக்குள் அடங்கிய பிழைப்புக்கு வழியற்ற சோம்பேறி மதுவெறியர்கள் மிதமிஞ்சி குடித்துவிட்டு கையில் மழுவாயுதங்கள் எரிந்தும் காரிருள் சேர்ந்த இராத்திரி ஒருமணிக்குமேல் கிளம்பி யாவரும் அஞ்சும்படியாய் ஓ என்ற பயங்கர ஓர்ஸைக்குரலுடன் யாதொரு வெளிச்சமில்லாமலும் முச்சந்திகளில் தாமதித்தும் மீண்டும் ஓ என்ற சத்தத்தை உரக்கக் கூவியும் வருஷா வருஷம் வெட்டும் கிடா ரெத்தத்தை அப்படியே வைத்திருப்பதாயும், அவ்வித ரெத்தத்துடன் சாதத்தைக் கலந்து முச்சந்திகளில் தூக்கி வீசியும், வீசும்போது ஓங்காரம் காவு வாங்குகிறதாகவும் சொல்லப்பட்டு வருகிறது. என்ன அறிவீனம். எருமை ரெத்தம் உறிஞ்சும் ஓர் தெய்வம் இருக்க முடியுமா? இதனால் மக்கள் அடைந்த நன்மை என்ன. ஆட்டின் இரத்தம் உறிஞ்சும்தெய்வங்களுக்கோ கணக்கில்லை. எருமை இரத்தம் உறிஞ்சும் தெய்வங்களாவன. மலையாளத்தில் சிலபாகத்தில் தென் தேசங்களிலும், திண்டுக்கல் அம்பகரத்தூர் குளிக்கரை இன்னும் நமக்குத் தெரியாத எவ்வளவோ இடங்களிலெல்லாம் நடக்கிறதாக தெரியவருகிறது. இவ்வித இரத்தம் சாப்பிடும் தெய்வத்தால் மேலும் கல்வியறிவில்லா மக்களைப் பயமெனும் அந்தகாரத்தில் அழுத்தியும் கோர ரூபங்களை கற்பனையாக சிலையாலும் ரூபத்தாலும் வர்ணித்து மக்களையும் நாட்டையும் பாழ்ப்படுத்துவதல்லாமல் அணுவளவேனும் பக்தியோ மெய் உணர்ச்சியோ இருக்க முடியுமென்று எந்த அறிவாளியும் சொல்ல முடியுமா? ஓங்காரத்தை வருஷம்தோறும் பார்த்து இதன் அசீத செயலை உணர்ந்த இங்குள்ள சுயமரியாதை வீர இளைஞர்கள் எதிர் வரும்போது அம்மனை எதிர்நோக்கி மறைந்தும் இவ்வித சக்திவாய்ந்த தெய்வம் மறைத்தவர்களுக்கு ஏனோ சோதனை காட்டவில்லை. ஓர்நாள் நான் கோயிலுக்குச் சென்றபோது அங்குள்ள ஒன்பதுபேரும் அம்மனை பார்க்கக்கூடாது கோபமாயிருக்கிறது. பார்த்து பயந்தால் பரிகாரம் ஒன்றும் செய்யமுடியாதென்று போகச் சொல்லிவிட்டார்கள். பொதுவாக சுவாமியை யாரும் பார்க்கஇருக்க. மனிதன் பார்த்தால் கோபப்படும் அம்மனும், உயிர்க்குபங்கம் நேரிடும் அம்மனுக்கு வேறு என்ன நன்மை கிட்டும். கொடியேற்று அன்று வாழை சமுத்த தோரணங்களும் கொட்டகை அலங்கரிக்கப்பட்டும். அழுக்குப்பிடித்த அலர்ந்துகிடக்க கல்லுருவங்களுக்கு எண்ணெய்க் காப்பிட்டும், கொடியுடுத்தி மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டும். கோயிலின் வாசலில் உள்ள கோர ரூபங்களுக்கு மை தீட்டியும். பார்ப்பவர்கள் நடுங்கும்படி இருந்த காட்சியும், மூலவிக்ரஹத்தின் கோலத்தை சொல்லிமுடியாது. நீண்ட கோரைப் பற்களும் கண்ணடக்கம் முதலியதும் கையில் சூலமேந்திய பாவனையும் அஞ்சா நெஞ்சத்தையும் திடுக்கிடும். இவ்விதமான சமயத்தில் கொடிய காரிருள் சூழ்ந்த நடுநிசியில் நித்திராதேவியின் வசப்பட்டிருந்த அவ்விரவை ஓர் நன்னாளாகக் கருதியும் ஆச்சரியத்துடனும் அச்சத்துடனும் ஏராளமான மக்கள் வந்திருந்தும் ஒவ்வொருவரும் ஒரே வெட்டில் தலை விழுந்துவிட வேண்டுமென்றும், தவறி தொங்கவிட்டால் ஊருக்கு ஆகாதென்றும், என்ன தீங்கு நேருமோ என்றும். தலை வெட்டினவுடன் நிற்கக்கூடாதென்றும் அப்படி நின்றால், ஆபத்தாய் முடியுமென்றும், வீட்டுக்கு ஓட்டம் பிடிக்கும் சிலரும் தைரியப்பட்ட சிலரும் ஓங்காரத்தை நேரேதான் பார்க்கக் கூடாதென்றும், வீட்டுத் திண்ணைகளில் இருந்து மறைவாக பார்க்கலாமென்றும் ஒவ்வொரு ஆணும் பெண்ணும் பேசினதைப் பார்த்தால் வருந்தாமல் இருக்க முடியாது. இதை விவரித்தால் பெருகுமென்றும் வாசகர்கள் கஷ்டத்தை முன்னிட்டும் சுருக்கிவிட்டேன். இவ்வித அலங்கோல கோர கொலைக்களத்தைப் பார்த்த வண்ணமாகவும் ஜனங்கள் நடுங்கின நடுக்கமும் நேரில் கண்ணுற்றவர்களுக்கல்லவோ விளங்கும். இந்த சமயத்தில் சண்டாள கொலைபாதகர்கள் ஆட்டின் பருமனையொத்த எருமை கிடாவை முன்னும் பின்னும் பிடித்த வண்ணமாக சன்னதிக்கு எதிரில் நிறுத்தியும் கண்டோர் அஞ்சும்படியான அரிவாள் தாங்கி வெட்ட சமயம்பார்க்கும்போது தலையை தூக்கி நிறுத்தியும தின் பண்டங்களை காட்டி வெட்டப்போகும் சமயத்தில் தலையை ஆட்டிவிட்டது. சுமார் அரைமணி நேரமாக எவ்வளவோ கஷ்டப்பட்டும் முடியாமல் மிருக சுபாவமானதாலும் ஜனங்கள் ஆறவாரத்தாலும் தீபவெளிச்சத்தாலும் சன்னதிக்கு எதிரே இருந்ததாலும் தலைதூக்கி பார்க்கும்போது வெட்ட எத்தனிக்கும்போது தலையை ஆட்டி முடியாமல் பிறகு தற்செயலாய் தலையை தூக்கும் சண்டாள கொலைக்காரன் வெட்டினான். வெட்டின தலையை பலிபீடத்தில் வைத்திருந்தது. இரத்தத்தையும் பிடித்து வைத்துக்கொண்டார்கள். என்ன அக்கிரமம். நெஞ்சம் துடிக்கிறது. கொலைக்காட்சி அம்மனுக்கு ரெத்தப்பிரியமானால் தானாக என் வந்து குடிக்கக் கூடாது. வாயில்லா ஜீவனை நம்பிக் கட்டபோல் வெட்டலாமே. அரைமணிக்குமேல் ஆகியும் வெட்டப்பட்டபாடு செப்புத்தகரமல்லவே. வெட்டுகிறதற்கு அம்மனை உத்திரவு கேட்டதும் பூசாரிகள் எவ்வளவோ கதறியும் அம்மன் உத்திரவு கொடுத்ததா? புத்தூர் குழுமியாயி வெள்ளைரோமம் இல்லாத குட்டியின் இரத்தம் கேட்பதுபோல் [illegible] குழுமிக்கும் ரெத்தப் [illegible] இருப்பேரும் சொந்தம்போலும். குழுமி அம்மனுக்கு சர்க்கார் குட்டி கொடுக்கிறதாக மூட ஜனங்கள் நம்பிவந்ததையும் ஆங்கிலேயர்கள் வெகுகாலத்திற்கு முன் குட்டி குடிக்கும்போது பூதக்கண்ணாடியால் பரீட்சைபார்த்து இரு கிளிகள் குடிப்பதாய் அண்டமூழுகை நம்பிவந்ததை ஜீவகாருண்ய பிரசாரத்தாரும் பொதுஜன ஊழிய சங்கத்தாரும் உண்மையை நிரூபித்துக்காட்டியும் சர்க்கார் குட்டி என்பது புத்தூர்சோம்பேறிகள்வஞ்சகச்செய்து குட்டி குடிக்கும் மோசமென்பதை தெரிந்து சர்க்கார் குட்டியென்பது சுத்தப்பொய் என்று தெரிந்துவிட்டதுபோல் ஓங்காரம் என்பது கட்டுக்கதையென்றும் சுயநல சோம்பேறிகள் செய்யும் சூழ்ச்சியென்றும் தெரிகிறது காலம் செல்ல செல்ல இதன் உண்மையும் வெளிச்சமாய்விடும். சுயமரியாதை இயக்கம் இச்சோம்பேறிகளுக்கு எமன்போல் தோன்றியிருக்கிறது. சுயமரியாதை வாழ்க!

— —

## போளூர்.

போளூர் ஒத்தவாடைத்தெருவின் முகப்பில் இரண்டேரிபட்டு மணியம் தம்பி கனம் ஜெயராவ் நயினர் வைத்தியசாலையில் சுயமரியாதை சங்கத்தின் சகலவிதமான பத்திரிகைகளும் பிரசுரங்களும், கனம் பாக்கியநாத பிரசாரகரால் கிடைக்கும். போளூர் வாசிகள் இவ்விடத்தில் இலவசமாய் அடையலாமென்பதைவைத்தியசாலையார் தெரிவித்துக் கொள்ளுகின்றனர்.

[வைத்தியர் ஜயராவ் நயினர்]

## ஜெர்மனியில்சுயமரியாதை.

உதயம்

சுயமரியாதை இயக்கம் நம் தமிழ் நாட்டில் ஆரம்பித்த 4, 5 வருஷங்களுக்குப் பின்னால் உலகத்திலுள்ள மற்ற அநேக தேசங்களில் ஆரம்பிக்கப்பட்டு அவைகள் அமுலில் வந்துவிட்டன.

உதாரணமாக இப்போது ஜெர்மனியிலும் ஆரம்பித்து அங்குள்ள கோவில்களை யெல்லாம் பள்ளிக்கூடங்களாகவும் தொழிற்சாலைகளாகவும் செய்யப் பிரசாரங்கள் செய்யப்பட்டு சமீபத்தில் பேர்லின் என்னும் நகரத்திலுள்ள கோவில்களின் முன்பக்கம் "மதம் மக்களுக்கு அபின்" அதாவது (மக்கள் தம் அறிவைக் கெடுக்கும் போதைவஸ்து) என்னும் விளம்பரங்கள் ஒட்டப்பட்டு பள்ளிக்கூடங்களாக்கப்படுகின்றனவாம் அதுபோலவே 4 வருஷகாலமாகவே ருஷியாவிலும் இவ்வியக்கம் தோன்றி அநேக கோவில்கள் இடிக்கப்பட்டும், பாதிரிமார்கள் தண்டிக்கப்பட்டும் வருவது யாவரும் அறிந்ததாகும்.

எனவே சுயமரியாதை உணர்ச்சி உலக முழுவதுமே பரவி ஜெயபேரிகை முழக்கிக் கொண்டிருக்கையில் இந்தியாவில் மட்டும் தங்கள் பிழைப்புக்குக் கேடு வந்து விட்டதேயென்ற எண்ணத்தையுடைய ஒரு கூட்டத்தார் (பார்ப்பனர்) இவ்வியக்கத்துக்குப் பெரும் முட்டுக்கட்டை போட்டு பாமர மக்கள் தம் சுய அறிவைப்பெற்று நல்லது கெட்டது தெரிந்து கொள்ளாமலே யிருந்து காலத்துக்கும் தங்கள் மானம் மரியாதை பொருள் முதலியவைகளை இழந்து அடிமைகளாகவே இருக்கவேண்டுமென்ற கெட்டசுயநலஎண்ணத்தைக்கொண்டு பாமர மக்களிடம் எதிர்பிரசாரங்கள் செய்துவருகின்றனர். இவர்கள்பிரசாரங்கள் இன்னும்நமதுநாட்டில்இருந்து கொண்டிருக்க நம்மக்களின் பாமர நிலையே காரணம் என்றாலும் இவர்கள் புரட்டும் ஏமாற்றலும் எத்தனை நாளைக்குத்தான் செல்லும்?

மேல் நாடுகளில் மக்களை மக்கள் ஏமாற்றிப் பொருள் பறித்து வயிறு வளர்க்கும் ஒரு கூட்டத்தார் [சாதியார்] பிறவியிலில்லை யாதலால் மேல் நாட்டார் துடங்கியிருக்கும் அறிவு இயக்கப் பிரசாரம் எதிர்ப்பின்றி சுலபத்தில் வெற்றி பெற்று வருகின்றது. எனவே அறிவும் ஆற்றலும் பெருமிதமாகப் பெற்றுள்ளஜெர்மனி ருஷியா மக்கள் உணர்ச்சியையும் பிரசாரத்தையும் கவனித்தாவது நமது நாட்டு மக்களுக்கு அறிவுவராதா? என்று கேள்க்கிறோம்.

## அநுதாபம்

வதுவார்பட்டி முதலாளி திரு. சு. ஆ. ஷண்முக சுந்திர நாடார் 25-3-30 தேதி மரணமடைந்தார்.

இவரது அகாலமரணத்தைக் குறித்து வருந்துவதுவோடு அவருடைய குடும்பத்தாருக்கும் அநுதாபத்தைக் காட்டுகிறோம் என்று வதுவாரப்பட்டி சுயமரியாதைச் சங்கக் காரியதரிசி திரு. துரைசாமி எழுதுகிறார்.


# பெண்களுக்கு வேண்டிய சீதனம் யாது?

(பினங்கு, பண்டிதை ஜானகி அம்மாள் எழுதுவது)

மற்ற நாட்டுப் பெண்களெல்லாம் நல்ல கல்வி கற்று நல்லறிவு கொண்டு தம் குடும்பங்களில் என்னாளும் இன்பவாழ்க்கையிலீடுபட்டு வாழ்ந்து வருகின்றார்கள். நம் நாட்டுப் பெண்களோ! கல்வி இல்லாது நல்லறிவு அற்று அடுப்பாங்கறை வேலைகளிலும் இறந்துபோன இழவுவீடுகள்சென்று மாரடித்து ஒப்பாரி வைத்து அழுவதிலும், தாலாட்டுப் பாட்டுப் பாடி பழகுவதிலும், கட்டுக்கதை விடுகதை இவைகள் கேட்பதிலும், வம்புச் சண்டைகளில் தலையிட்டு மண்ணை வாரி இரைப்பதிலும், கும்மி கொட்டி பாட்டுப்பாடுவதிலும், பொறாமை போட்டி கோள் சொல்லல் இவை போன்ற வேலைகளிலேயே நேரத்தை போக்க சிறு வயதிலேயே தாய் தகப்பன்மார்கள் கற்றுக் கொடுத்து விடுவதினாலேயே பெண்கள் நல்லறிவற்று துன்ப வாழ்க்கையிலீடுபட நேரிடுகின்றன. பெண்களை கட்டிக் கொடுத்து கணவன் வீட்டுக்கு அனுப்பும் பொழுது ஏதேனும் நகைகளையும்பித்தளைப்பாத்திரங்களையும் பணக்காரவீட்டுப் பெண்களானால்ஏதேனும் பொருள்களுடன் சீதனமாக கொடுத்து அனுப்பி விடுவார்கள். இவைகளை கொண்டு பெண்கள் அடையும் பலன் யாது? பெற்றோர்கள் பெண்களுக்கு இவவித சீதனங்கள் கொடுப்பதினால் அவர்கள் வாழ் நாள் முழுமையும் இசசீதனங்களைக் கொண்டு வாழ்ந்து விடமுடியுமா? அவ்வித சீதனங்களை பேணி பாதுகாத்துக்கொள்ளபோதிய அறிவாகிலும் இருக்காவிட்டால்அச்சீதனங்களெல்லாம் நிலை நிற்காமல் போய் விடாதா? பெண்களின்செல்வநிலைநிற்கநல்லறிவு வேண்டும். அறிவை வளர்க்க கல்வி வேண்டும். கலவியினால் பெண்களுக்குஅறிவு,நாகரீகம்நல்லொழுக்கம்,நற்குணம்இவையாவும் ஏற்படுகின்றன.கற்றுக்கொடுப்பது இவைதான்பெண்களுக்குவிலை மதியா உயர்ந்த சீதனமாகும் யாவரும்நன்மதிக்கக்கூடியஉயர் ஆபரணமுமாகும். இவைகளை அழித்து விடயாராலும் முடியாதுஎன்பதோடும் இவைக்கு நிகரானசீதனம்உலகத்தில்வேறு ஒன்றுமே இராது இவைகளைத்தான் யாரும் மதிப்பார்கள் போற்றிப் புகழ்வார்கள் உதாரணமாக நம் திரு. ராமசாமி பெரியார் அவர்கள் இந்நாடு வருவதாக பெரிய ஆர்பாட்டமாக இருந்த காலத்தில் பெரியார் அவர்களைக் காண பெரும் ஆவல் கொண்டிருக்கும் பொழுது பெரியார்வரஇரண்டொரு தினத்திற்குமுன் பிரசவ வேதனையால் ஆஸ்பத்திரிநான்செல்ல நேர்ந்தது. பெரியாரைபார்க்ககொடுத்துவைக்காது எங்கு எனது உயிர் போய்விடுமோ! வென்றஞ்சி சஞ்சலப் பட்டுக் கொண்டிருக்கையில் பெரியார் அவர்கள் பினாங்கில் இறங்கிய நாளன்று என்னை விசாரித்து எனது க்ஷேமலாபங்களைக்கேட்டு, ஈப்போவிற்கு அவசரமாகப் போகவேண்டியதிருப்பதால் திரும்புகாயில் என்னைப் பார்ப்பதாய்ச்சொல்லிவிட்டுச்சென்றார் என்றசேதிகிடைத்தது இதனிடையில் ஆண்குழந்தைபிறந்து நற்சுகமடைந்தேன். திரும்ப பெரியார் பினாங்கு வந்தவுடன் பெரியார் அவர்களும், ஸ்ரீமதி நாகம்மையார் அவர்களும் என்னைச் சந்தித்து என் குழந்தையை வாரியெடுத்துமார்போடணைத்து முத்தமிட்டு என் க்ஷேமங்களை கேட்டார்கள். அதன் பின் சுவாமி சிதம்பரனார், திரு. பொன்னம்பலனார், ஸ்ரீமான்நடராஜன் இவர்களெல்லோரும்வந்துஎன்நற்க்ஷேமங்களைக் கேட்டார்கள், இவர்களெல்லாம்என்னைஎதற்காகமதித்து,என்க்ஷேமங்களைக்கேட்கவேண்டும்? நான் அவ்வளவு பெரிய பணக்காரியுமல்ல. என் தாய் தகப்பனார்கள் கருணைவைத்து ஏதோ சிறிது கல்வி என்ற ஆபரணத்தை கற்கவைத்ததினால் அன்றோ! இப்பெரியார்கள் என்னை மதித்தார்கள். நானும் ஏதேனும் பித்தளைப் பாத்திரங்களை சீதனமாய் கொண்டு சட்டி சரண்டவும், அடுப்பூதும் தொழில்களில் மட்டும் இருப்பேனாகில் என்னை அடுப்பாங்கரையைத் தவிர வேறு ஒருவருமே மதியார். ஆனபடியால் பெண்கள் நன்மதிப்பு பெறவேண்டுமானால் கல்வி என்ற கண்ணிறைந்த ஆபரணத்தை அணிய வேண்டும். இவ்வித ஆபரணம் ஒன்றே பெண்களுக்கு அழியாச் செல்வமும் மன்றி பெண்களுக்குள்ள கடமைகளையும் சேவைகளையும் சரிவர நிறைவேற்றிவைப்பதோடும் அவை பெண்களுக்குச் சதா நற்போதனையை அளித்தவண்ணமாகவே இருக்கும். கல்வியறிவு நல்லொழுக்கம் இவைகளையுடைய ஓர் பெண் தம் வீட்டிற்குள் ஓர் அரசியைப் போலாவாள். ஏன்? அவளுடைய கல்வி சிறப்பானதினாலேயே! அவ்வித உயர்ந்த பதவியாகும். கல்வியுடைய பெண் அவள் கொண்ட கணவன் வீட்டினற்கு இன்றியமையாத கம்பீரத்தை உண்டுபண்ணி விடுவதோடும் அதிர்ஷ்டவசமாய் கணவன் வீட்டிலுள்ள பெண்களும் கல்வி கற்று இருப்பார்களாகில் பெண்கள் அடையப்பெரும் மகிழ்சிக்கு அளவே இராது என்பதோடும் சணடை சச்சரவு இல்லாமல் என்னாளும் இன்பவாழ்க்கையிலீடுபடுவார்கள். பதினாயிரக் கணக்காய் பொறுமதியாயுள்ள பொருள்களை பெண்கள் பேற்றோர்களிடமிருந்து சீதனமாய் கொண்டு வந்த பெண் ஒருத்தி கல்வி அறிவு அற்ற மூடத்தனமாக இருப்பாளாகில் அவள் ஒருநாளும் கொண்டு வந்தபொருளை வைத்து செல்வாக்காய் வாழமுடியாது. என்பதோடும் அவள் மாமன், மாமியார், நாத்தி, கொழுந்தன், இவர்களோடு சதாசண்டை சச்சரவுஇட்டு இவர்களுக்கெல்லாம் பகையாளியாகி பல துன்பங்கள் ஏற்படும் மற்றவைகளைக்கொண்டும் எத்தகைய நன்மையும் அடையமுடியாமல் போய்விடுகிறதையும் தவிர நல்லொழுக்கம்,நற்பயிர்ச்சி.இல்லாத பெண்கள் மனிதத்தன்மையடைய முடியாது. ஆகையினால் பெண்களுக்கு கல்வியுடன் நல்லொழுக்கம், நல்லறிவு, நாகரீகம், போதிப்பதுதான் பெற்றோர்களால் பெண்களுக்கு கொடுக்கும் மதிப்பில்லா! சீதனங்களில் ஒன்றாகும், இவ்வித சீதனத்தோடு பெண்கள் கணவன் வீட்டிற்க்கு செல்வார்களாகில் எவ்விதமான காரியங்களிலும் நல்லபெயரும் கீர்த்தியும், எடுக்க ஏதுவுண்டாகும் நெசயல், சமைத்தல், பிள்ளைவளர்ப்பு இவையாவற்றிர்க்கும் கல்விவேண்டியது அவசியமாகும். கல்வி, நாகரீகம் போன்றவைகளை எல்லாம் பெண்கள் பெற்றோர்கள் வீட்டிலேயே கற்றுக் கொள்ளவேண்டிய கடமையாகுமே தவிற கணவன்வீட்டிற்குபோய் கற்று கொள்வதுக் கஷ்டமாகும். அவள் செல்வநிலையை பேணிபாதுகார்க்க அறிவில்லாவிட்டால், கொண்டுவந்த சீதன பொருள்களெல்லாம வீண் விரையமாகி பல சங்கடங்களுக்கு உள்ளாகி பரிதவிக்கும் வழிக்கு ஆளாகுவாள். நம் நாட்டுபெண்களை கல்வி கற்கவைத்தால்கள்ளப்புருஷனுக்கு கடிதாசி எழுதிவிடுவார்கள் என்றும், எந்த உத்தியோகத்திற்கு போக பெண்களுக்கு கல்வி வேண்டும்? என்றும் சிலர் சொல்லத்தலைப்படுகின்றார்கள். அவ்விதமே ஆண்களையும் சொல்வி கல்விகற்கவைக்காது இருப்பார்களாகில் இவர்கள் மூடஅறிவை ஓர் வழியில் ஒப்புக்கொள்ளலாம். பெண்கள் கல்வி கற்று இருப்பார்களாகில் முக்கியமாக குடும்பசண்டைகள் குறைந்துவிடும். குழந்தைகளை நற்போதனையுடன் வளர்க்க ஏதுவாய் இருக்கும் எல்லா நாடுப்பெண்களைப் போல் நம் நாட்டுபெண்களும் நல்லறிவு அடைவார்கள். மனிதத் தன்மையுடையவர்களாகவும் இருப்பார்கள். சகோதரர்களே!, கல்வி என்ற விலைமதியா! சீதனத்தை பெண்களுக்கு கற்றுக்கொடுப்பீர்களாகில் உங்கள் நாட்டுக்கு நல்லறிவுடைய வீரப்புதல்வர்களை ஈன்று தருவார்கள். உங்கள் நாடும் மற்ற நாட்டைப போல் அறிவுடைய நாடாகும். ஸ்ரீமதி மேயோ, அம்மையார்போன்றவர்கள் நம் நாட்டினர்களை பற்றிய கதைகளை எழுதவழியில்லாது போய்விடும். நீங்களும் எங்கள் நாடு பதிவிரதா சிரோன்மனிகள் பிறந்தநாடு கற்புக்கரசி கர்ணகை பிறந்தநாடு என்று ஒப்பாரிவைத்து அழுவதற்கும் இடமிராது. என்பதை மிகதாழ்மையோடு தெறிவித்துக் கொள்ளுகிறேன்,

——


## எக்ஸ்ரே—குழாய்
(X-RAY TUBE)




இது மேல் நாட்டில் புதிதாய்க் கண்டுபிடிக்கப்பட்ட கருவி. மிகவும் உபயோகமானது. இதன் மூலம் கைகளையோ விரல்களையோ பார்த்தால் உள்ளே ஓடும் எலும்புகள் தெரியும். ஒரு பென்சிலைப் பார்ததால் உள்ளே இருக்கும்லெட்தெரியும்செடிகொடிமுதலானவைகளின் அடிப்பாகத்தைப்பார்த்தால்உள்நரம்புகள்தெரியும் முட்டையினுள்இருக்கும்கரு தெரியவரும். இதனால்முட்டைநல்லதா கெட்டுப்போனதாஎன்றும்உடனே சொல்லிவிடலாம். இன்னும் பலவிதங்களிலும்உபயோகமானது. இவ்வளவும் உண்மையில்லையென்று நிரூபிப்பவர்க்குப பணம்வாபீஸ்செய்யப்படும். ஸ்டாக் கொஞ்சம் இன்றே எழுதுங்கள். விலை டியூப் 1-க்கு ரூ. 1-14-0

ஈஸ்டு வேஸ்டு ஏஜன்சி, தபால் பெட்டி 295, மதராஸ்.



இனும்! முற்றிலும் இனும்!!

## காசியில் மூன்று நாள் என்ற ஓர் இனிமையான புத்தகம்

வெளிவந்துவிட்டது

உடனே ஒரு அணு தபால் ஸ்டாம்புடன் தங்கள் முழு விலாசங்களை தெளிவாய் எழுதி அனுப்புங்கள். அடுத்த தபாலில் மேற்படி புத்தகம் தங்களுக்கு இனமாக வந்து சேரும்.

கே. எஸ். முத்தையா அண்டு சன்ஸ்,

சில்க் ஹவுஸ், மதுரை.

# பெண்கள் துயரம்.

(சகோதரி எழுதுவது)

ஓர் நாட்டின் வளர்ச்சிக்கு அந்த நாட்டின் கல்வி அபிவிருத்தியே காரணம் என்று எல்லாரும் அபிப்பிராயப்படுகிறார்கள். ஆனால் ஒரு நாடு கல்வியபிவிருத்தி அடையவேண்டுமானால் அதில் அநேக பண்டிதசிரோன்மணிகள் தோன்றுதல் மாத்திரம் போதாது அந்த நாட்டிலுள்ள ஒவ்வொருவரும் படித்தவர்களாயிருத்தல் வேண்டும் அதிலும் முக்கியமாக அந்த நாட்டு பெண்மணிகள் படித்தவர்களாயிருக்க வேண்டும். அப்படி அவர்கள் கற்றவர்களாயிருந்து பழையன கழிதலும் புதிய புகுதலும் என்னும் சொல்லிற்கிணங்க நாகரீகம் வளரவளர நம் பழைய மூடப்பழக்க வழக்கங்களை நீக்கினுதாரநாடுகளின் முன்னேற்றத்தையும் அதற்குள்ள காரணங்களையும் கண்டறிந்து அதை பின் பற்றுவார்கள்.

படிப்பு இல்லாத தாய்மார்கள் குழந்தைகளுக்குசிறுவயதில் கடவுள்மேல் அநேக கதைகளைச் சொல்லியும் அவனை அன்றி ஓர் அணுவும் அசையாது என்று சொல்லியும்கடவுளுக்கு அடிமையாகி விடுகிறார்கள். அப்படி வளர்க்கப்பட்ட குழந்தை தக்க வயதடைந்ததும் தான் செய்யும் காரியங்களில் ஏதாவது தடையேற்பட்டு விட்டால் அது கடவுள் செயல் என்று நினைத்துக்கொண்டு மேன்மேலும் முயற்சிக்காமல் கடவுள் மேல் பழி போட்டுவிட்டு முழுச்சோம்பேரிகளாய் ஆகிவிடுகிறார்கள். இதற்குக் காரணம் அவர்களுக்கு ஆரம்பத்தில் போதித்த கல்வியே. அப்படியில்லாமல் ஒரு தாய் தான் படித்தவளாய் இருந்து விடாமுயற்சி, தன்மதிப்பு, சுயமரியாதை இவைகளைப் போதிப்பாளாகில் அந்தக்குழந்தையும் கடவுளைப் பற்றிய எண்ணமில்லாமல் தான் சிரமப்பட்டு தன் பகுத்தறிவை உபயோகப்படுத்தி முன்வர முயலுவான். ஆகையால் தாய்மார்கள் படித்தவர்களாயிருந்து குழந்தைகளுக்கு ஆரம்பத்திலேயே சரியான கல்வியை கற்பிக்க வேண்டும். ஆகையால் நமக்கு ஆரம்பக்கல்வி கற்பிக்குந்தாய்மார்கள் விஷயத்தில் ஒவ்வொருவரும் கவலை எடுத்துக் கொள்ளவேண்டும். முதலில் அவர்களை சீர்திருத்தம் அடையச் செய்து விட்டால் பிறகு அவர்கள் வயிற்றில் பிறக்கும் குழந்தைகளைக் கட்டாயம் சீர்திருத்தி சுயமரியாதை வீரர்களாகவே தோற்றுவிப்பார்களென்பதில்யாதொதொரு ஐயப்பாடுமில்லை.

இவ்வாறு நமது முன்னேற்றத்திற்கு முதற்காரணமாய் உள்ள நம் தாய்மார்களின் தற்கால நிலையை சற்று கவனிப்போம். நம் தாய்மார்களையும் அவர்கள் படும் கஷ்டங்களையும் வரைய கை கூச்சமேற்படும். அவர்கள் அடிமைகளாகவே பாவிக்கப்படுகிறார்கள். அவர்களும் அதை ஒப்புக் கொள்ளுகிறார்கள். அவர்களுக்கு ஆரம்பத்திலேயே அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் நான்கு குணங்களை நான்குசுவர்களாகக் கொண்டு அதன்மத்தியில் இருக்க வேண்டுமென்று சொல்லுவதோடு உண்டிசுருங்குதல் பெண்டிர்க்கழகு என்றும் பெண்டிர்க்கழகெதிர் பேசாதிருத்தல் என்றும் போதித்து அவர்களை தாளிட்டு ஒதுக்கிவிடுகிறார்கள். அந்தப் பெண்களும் அதை முழுதும் நம்பி கிணற்றுத்தவளைபோல்வளர்ந்து கடைசியில் உலகப் போக்கே தெரியாதவர்களாகிவிடுகிறாள்.

அப்படி வளரும் அந்தப் பெண்ணுக்கு எட்டு வயது ஆவதற்குள் அவளுக்கு கலியாணமென்றால் இன்னது என்று தெரிவதற்குள் அவளுக்கு மணம் செய்விக்க ஆரம்பித்து விடுகிறார்கள் அப்பொழுது தகப்பன் ஒரு கௌரவ குடும்பத்துப் பிள்ளையையும் தாய் ஓர் தனவந்தன் பிள்ளையையும் சகோதரன் நல்ல அழகு வாய்ந்தவனையும் தனித்தனியே அந்தப் பெண்ணுக்கு வரிக்கிறார்கள். இவ்வளவும் அந்தப்பெண்ணுக்கு ஒரு சிறிதாகிலும் தெரியாது.

கடைசியாக அந்த மூவரும் ஒன்று சேர்ந்து ஒருவனை மாப்பிள்ளையாக தேர்ந்தெடுப்பார்கள். இவர்கள் தேர்ந்தெடுக்கத்தான் அதிகாரம் பெற்றவர்கள் இவர்களுக்கு வேறு ஒரு உரிமையும் கிடையாது. இவர்கள் தேர்ந்தெடுத்தவன் சரியானவனு அல்லவா என்று சீர்தூக்கிப்பார்த்து ஆமோதிக்க அதிகாரம் பெற்றவர் வேறொருவர். அவர் தான் நாம் பணங்கொடுத்தால் பன்றிக்கும் கழுதைக்கும் மும்பத்திரண்டு லட்சணங்களும் பதினறுபொருத்தமும் நிறைந்திருக்கிறது மணம் முடிக்கலாம் என்று சொல்லக்கூடிய பொய்க் களஞ்சியமாகிய சோதிடப் புலி. இவர் வைத்துக்கொடுத்த ஒரு சுபயோக சுபதினத்தில் தான் எந்த கல்யாணமும் நடக்கவேண்டும். இப்படியாக பிரேரேபணையும் ஆமோதிப்பும் ஆன பிறகு அதை (Con-firm) உறுதி செய்ய ஓர் அந்தணன் முன்வருவான் அவன் தான் கல்யாணத்தை நடத்தி வைக்க வேண்டும்; இவ்வளவும் நடக்கிறவரையில் அந்த புருஷனின் முகத்தையாவது நிறத்தையாவது அந்தப் பெண் பார்க்க முடியாது. கல்யாணக் கூட்டத்தில் கூட அந்தப் பெண் தலைகுனிந்தபடி தான் இருக்கவேண்டும்.

இப்படியாக இனிது முடிந்த கல்லியாணத்தின் மணமகன் மணமகள் இவர்களுடைய ஜோடி பொருத்தத்தைச் சற்று கவனிப்போம். எம். ஏ. படித்த நிபுணனுக்கு வாய்ந்தவள் இவன் படிப்பை தள்ளிவிட்டு. நீ எவ்வளவு படித்தால் எனக்கென்ன எந்த உத்தியோகம் செய்தால் எனக்கென்ன நான் சாணந்தான் தட்டுவேன்' எனபாள். அல்லது படித்த பெண்ணுக்கு, 'உனக்கு என்னடி படிப்பு வேண்டி இருக்கிறது' என்று சொல்லி அவள் படித்துக்கொண்டு இருக்கும் புத்தகத்தைக் கிழித்து எரிந்து விட்டு அவள் கற்றைக் குழலைப் பிடித்து இழுத்துக் கீழே தள்ளி அவள் பொன் போன்ற திரேகம் வாடும்படி நையப்புடைக்கும் கணவன் வந்து சேர்வன். இன்னும் உயரமானவனுக்கு மிகவும் குள்ளமான ஒரு பெண்ணும், மலையை ஒத்த பருமன உடையவனுக்கு ஓர் வஞ்சிக்கொடியை ஒத்த மெல்லிய இடையை உடைய ஒரு பூங்கொடி அமைவாள். தங்கத்திருமேனியை உடையவும், முழங்காலளவும் நீண்டு தொடங்கும் கரிய கூந்தலையும், வானவில்லை ஒத்த நெற்றியையும் சேல்கெண்டையை ஒத்தகண்களையும், கோவைப்பழத்தை ஒத்த உதடுகளையும் உடைய பூரண சந்திரன் என்று கண்டோர் அதிசயிக்கும் முகத்தை உடைய ஓர் மடந்தைக்கு, கறுத்தமேனியை உடையவனும், செம்பட்டைமயிர் தலைஉச்சியில் கோழி வால்போல் பறக்க, குறுகிய நெற்றியையும் பிதுங்கின கண்களும், பருத்துக்கறுத்த உதடுகளையும் உடைய கனவிலும் கண்டால் பயப்படக்கூடிய ஒரு அவலட்சணம் வந்து சேர்கப்பட்டதும் அவர்கள எவ்வாறு இல்லறம் நடாத்துகிறார்கள் என்று சற்று கவனிப்போம்

தலைவனும் தலைவியும் ஒருவருக்கொருவர் மாறுபட்ட குணங்களை உடையவர்களாகையால் அவர்களுள் ஒருவர் போனவழிக்கு ஒருவர் போகமால் சதாசச்சரவு இருந்துகொண்டே இருக்கும் அவன் அவளை வாழ்க்கைத்துணையாகக் கொள்ளாமல் படுக்கைத்துணையாகவே கொள்கிறான், மேலும் அவளை பிள்ளைபெறும் ஓர் இயந்திரம் என்று நினைத்து அவள் 15-வயது ஆவதற்குள் அவளை இரண்டு குழந்தைகளுக்கு தாயாராகச் செய்து விடுகிறான். இப்படி செய்தால் அவளுக்குந்தான் என்ன பலம் இருக்கும் அலலது அந்தக்குழந்தைகளுக்குதான் என்ன பலம்இருக்கும். இதனால்தான் நம்மவர்கள் அற்பாயுசாய் இருக்கிறார்கள். நாம் பகுத்தறிவு உடையவர்களாய் இருந்தும், சில தடியர்கள் பெண்களின் சுகத்தைக் கவனியாமலும் குழந்தைகளின் சுகத்தைக் கவனியாமலும் அவர்களை இம்சித்து வருகிறார்கள்.

சிற்சில சிலர் நான் கல்யாணம் செய்து கொண்டது என் பெற்றோர்கள் மனம் கோணமல் இருப்பதற்காகவே, எனக்கு அவளிடம் பிரியமில்லை என்று சொல்லிக்கொண்டு ஓர் ஆசைநாயகியை அணுகுவார்கள். அவர்கள் தாசி வீட்டிலிருந்து வீட்டுக்கு வரும்போது, அதிக வேகமாகவும், மிக்க பரபரப்புடனும் ஏதோ கச்சேரிக்குப் போய்விட்டு வருபவன் போல் கண்கலங்கி நிற்கும் கட்டின பெண்டாட்டியை அதிகாரம் செய்துகொண்டு சாப்பிட்டுவிட்டு உடனே சென்றுவிடுவான் அவள் காலில்விழ: இக்குலஸ்திரீ தன் கணவன் சாப்பிட்டுப் போனபிறகு தான் சாப்பிடுவாள். இதற்கு காரணமென்ன, நம் மூட வழக்கமே. கல் என்றாலும் கணவன், புல் என்றாலும் புருஷன், என்று சொல்லிச் சொல்லி அப்பெண்மணிகளை வளர்த்துவிட்டதால் அப்பெண்மணிகளும் அல்லதையப் பொறுத்துக்கொண்டு இருந்தால்தான் மோட்சம் கிட்டும் என்று நினைத்துக் கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் அப்படி இருப்பதால்தான் இந்த தடியர்களும் இப்படி காடோடியாய திரிகிறார்கள். நீ அவளிடம் போனால் நான் இவளிடம் போவேன் என்று அவள் சொல்ல ஆரம்பித்து விட்டால் தான் இக்காலிகளின் கொட்டம் அடங்கும். (தொடரும்)

## வைக்கம்வீரர் வாசகசாலை திறப்பு விழா

23—3—30 தேதி திருச்சி தேவேந்திர குலவேளாளர் சங்கக் கட்டிடத்தில் திரு டி. வி.சோமசுந்தரம் பிள்ளை அவர்கள் தலைமையில் மேல்படி திறப்புவிழா நடந்தேறியது அது சமயம் திருவாளர்கள்:— கி. பெ. ஆ. விஸ்வநாதம், வீரபத்திர பிள்ளை, அகஸ்தியர் திரவியம், பி. சிவபிச்சை ஸ்ரீரங்கம் அமாவாசி மூப்பனார் எம். வடிவேல, லால்குடி வி. கணபதி முதலானவர்கள் விஜயம் செய்திருந்தனர் தலைவர் பிரசங்கம் முடிந்த பிறகு மதுவிலக்கு, தீண்டாமை, ஒற்றுமை, சிக்கனம் ஆகிய விஷயங்களை முறையே திருவாளர்கள் திரவியம் பிள்ளை, வீரபத்திரபிள்ளை, பொன்னு, சிவபிச்சை ஆகியவர்கள் சொற்பொழிவாற்றிய பின் அடியில் கண்ட தீர்மானம் நிறைவேறியது.

தீர்மானம்:— சிருங்கேரி சங்கராச்சாரி சுவாமியவர்கள் அழைப்புக்கிணங்கி நமது சுயமரியாதைத் தந்தை ராமசாமிப் பெரியாரவர்கள் அங்கு செல்வது சந்தேகத்துக் கிடமாகுமென்பதை மடாதிபதிகளின் சரிதைகளை ருஜுப்படுத்துகிற படியால் மத்தியமான ஓர் இடத்தில் சில்பிரமுகர்கள் முன்னிலையில் கலந்துபேசி முடிவு செய்ய வேண்டுமென்ற தீர்மானம் ஏகமனதாய் நிறைவேறிற்றென்று ஒரு நிருபர் தெரிவிக்கிறார்


# குமரன் டைரி.

(பிரமோதூத வருடம்)

விலை ரூபா ஒன்று

மானேஜர்,
தனவைசியன் கம்பெனி லிமிடெட்,
காரைக்குடி, (இராமநாதபுரம் ஜில்லா)

# பெரிய புராணம்

---

## திருமூலநாயனர் புராணம்.

(லா. கி. சு. எழுதியது)

திருக்கைலாயத்தில் சிவபெருமானது ஆலயத்திற்கு முதல் பெருநாயகராகிய திரு நந்திதேவருடைய திருவருளைப் பெற்ற மாணாக்கர்களில் ஒருவராம் இத் திருமூல நாயனர்.

இவர் அகத்திய மாமுனிவரிடத்தே பொருந்திய நட்பினால் அவருடன் சிலநாள் இருக்க விரும்பி அவர் எழுந்தருளியிருக்கும் பொதிய மலையை அடைதற் பொருட்டுத் திருக்கைலாயத்தை அகன்று திருக்கேதாரம், பசுபதிநேபாளம், காசி, ஸ்ரீ சைலம், காஞ்சி, திருவதிகை, சிதம்பரம் என்னும் ஸ்தலங்களை வணங்கிக்கொண்டு, திருவாவடுதுறையை அடைந்து, அங்கே சுவாமிதரிசனம் செய்து கொண்டிருந்தாரும். ஒரு நாள், அந்த ஸ்தலத்தை அகன்று செல்லும்பொழுது காவேரியாற்றங்கரையிலுள்ள வனத்திலே உள்ள பசுக் கூட்டங்களைக் கண்டாரும். கண்டவர் என் இப்பசுக்கள் அழுங்காரணம் என ஆயுங்காலத்துச் சாத்தனூரில் இருக்கின்ற மூலனென்பவன் அத்தினத்திலே அவ்விடத்திலே இறந்து கிடந்ததே காரணமாம், எனத்தெரிந்து இவ்விடையன் உயிர்ப்பெற்றாலன்றி பசுக்கள் துயர் நீங்கா" என்று திருவுளங்கொண்டு தம் திருமேனிக்குக் காவல்செய்து தாம் அவ்விடையனுடைய சரீரத்தினுள்ளே பிரவேசித்துத் திருமூலராய் எழுந்தனராம். எழுந்தலும் பசுக்களெல்லாம் நாத்தழும்பி நக்கி மோந்து, கனைத்து, மிகுந்த களிப்பினாலே வாலெடுத்துத் துள்ளி பின்பு போய் மேய்ந்தனவாம். திரு மூலநாயனர் அது கண்டு திருவுள மகிழ்ந்து அவைகள் மேயுமிடத்திற்சென்று, அவைகளை நன்றாக மேய்த்து, சூரியன் மேற்குக் கடலில் புகும்சமயம் அறிந்து அவைகளைப் பைய நடத்திக்கொண்டு சாத்தனூரை அடைந்தனராம். அடைந்த யோகியரைக்கண்டு மூலனுடைய மனைவி இல்லத்திற்கழைக்க, இவர் சம்மதியேன் என்று தடுத்து அவளது மனம் ஆற்றாது துயரடையும்படி செய்துவிட்டு, ஒரு பொது மடத்தில் புகுந்து இருந்தாராம். மறுநாள் உதயமாகும்வரையில் மூலனுடைய மனைவி நித்திரை செய்யாது, உதயமானதும் சில பெரியோர்களுக்குச் சொல்ல அவர்கள் வந்து பார்த்து இவர் கருத்துச் சிவயோகத்தினிடத்தேயாம் என, இவ்வார்த்தை கேட்டவுடனே இடிவிழுந்த மரம் போல் பூமியின் கண் விழுந்து பலவாறு புலம்பி அழுகின்றவளை அழைத்துக்கொண்டு போய்விட்டார்களாம். சில பெரியோர்கள்.

– சிவயோகத்தில் இருந்த திரு மூல நாயனர் எழுந்து முதனாளிலே பசுக்கள் வந்தவழியே சென்று தாம் சேமித்துவைத்த சரீரத்தைக் காணாதி ஞானத்தால் ஆராய்ந்து சிவபெருமான் ஆதிகாலத்திலே தம்முடைய பஞ்சவக்திரத்தினின்றும் தோற்றுவித்த காமிக முதலிய சைவாகமங்களிலே பேசப்பட்ட மெய்ப்பொருளை தமிழ் நாட்டில் உள்ளவர்களுந்த உபயோகமாகும்பொருட்டு தமியேனைக்கொண்டு தமிழினாலே ஓர் நூல் செய்வித்தற் பொருட்டு, அச்சரீரத்தை மறைத்தருளினார். எனத் தெரிந்து, திருவருளைத் துதித்து, திருவாவடுதுறையை அடைந்து அங்குள்ள சிவாலயத்திலே பிரவேசித்துச் சிவபெருமானை வணங்கி அதற்கு மேற்பக்கத்தில் இருக்கின்ற அரச விருக்ஷத்தின் கீழ்போய் யோகத்தில் இருந்தாராம். இவ்வாறு மூவாயிர வருடங்கள் வரையிலிருந்து, ஒவ்வொரு திருப்பாட்டாக மூவாயிரந் திருப்பாட்டினால் சைவாகமங்களில், உணர்த்தப்பட்ட ஞானம், யோகம், கிரியை, சரியை என்னும் நான்கு பாதங்களையும் பேசுகின்ற திருமந்திரமென்னும் தமிழ் நூலைப்பாடியருளிய பின் திருக்கைலாயத்தை அடைந்தாராம்.

பொய் புராணங்களைக்கொண்டு பூவுலகத்தைப் புரட்டிப் பொருள் பறிக்குப் புண்ணிய சைவர்களே! பொய் மெய் என்று பகுத்தறியும் அறிவில்லாத பாமரப் பண்டிதர்களே! இந்தத் திருமூலநாயனர் கதையிலுள்ள புரட்டைப் பார்த்தீர்களா? என் பார்க்க வில்லை. பாராவிட்டால் நான் பார்த்துச்சொல்லுகிறேன் சற்றுச் செவியைச் சாய்த்து விடுங்கள். வீணே நீங்கள் அழிந்து போவதுமன்றி உலக மக்களையும் அழிந்து விடச் செய்கிறீர்கள். வேண்டாம். வேண்டாம். உங்களது பொய் புராணங்களையும், மதப் புரட்டுகளையும் வேரோடு களைந்து பெரிய குழிவெட்டி ஆழப்புதைக்க எங்கள் வைக்கம் வீரர் திரு மிகு ராமசாமி பெரியார் இருக்கின்றார்.

உடனே இவ்வியாசத்தைக் கண்டதும், உங்களது குருட்டு நம்பிக்கையை இழந்து சைவமென்னும் அந்தகாரத்தை மறந்து சுயமரியாதையைக்கடைப் பிடியுங்கள். திருமூலநாயனர் கதையிலுள்ள திருட்டுப் புரட்டுகளைச் சிறிது வரைகிறேன்.

சிவபெருமானது முன்னிலையில் இருக்கும் நந்தியினது மாணாக்கர்களில் ஒருவராகிய சிவயோகியார் அகத்தியரது நண்பினால் அவருடன் சில நாள் இருக்க அவர் இருக்கும் பொதிய மலைக்கு எழுந்தருளினார் வழியில் சில திருப்பதிகளில் எழுந்திருக்கும் மூர்த்தங்களைக் கண்டு பணிந்து செல்லுங்காலத்து காவிரியாற்றங்கரையிலுள்ள வனத்தில் பசுக்கூட்டங்கள் அழுதலை எதிர் கண்டு அவைகளை மேய்க்கும் இடையன் இறந்து பட்டதையும் கண்டு மாடுகளின் துயரத்தைத்தீர்ப்பான் வேண்டி அவரது சரீரத்தை மறைத்து விட்டு அவ்விடையனது சரீரத்தில் நுழைந்து அப்பசுக்களை ஓட்டிக்கொண்டு ஊர்சேர்ந்ததாகவும் உங்கள் பெரிய புராணத்தால் அறியக்கிடக்கிறது.

மாட்டினத்தின் துயரைக்கண்டு மாட்டிடையன் உடலில் நுழைந்து மாட்டினத்தைச் சந்தோஷிப்பித்த ஓர் நடுநிலைவாய்ந்தவரும், பிறர் துக்கத்தைத் தன்துக்கமேபோல் பார்த்து தீர்க்கப்பட்டவரும். கூடுவிட்டுக்கூடு பாய்பவரும் சிவபிரானது சீடனுக்குச் சீடனானவரும், சிவயோகிகளில் ஒருவர் என்று சொல்லப்படுபவரும் தனது உடலை யார் கவர்ந்து விடுகின்றனரோ என்று காவிடைவிட்டுக் காவல்வைத்தவருமாகிய ஒரு பகுத்தறிவில்லாத ஒருவர் மாடுகளின் பொருட்டு மாட்டிடையன் உடலில் சென்று மாடுகளோடு ஊர்வந்து சேர்ந்த மூலனைக்கண்டு மனைவி வீட்டுக்கு வா என்று பலவாறு இதவார்த்தைகள் கூறித்தனது நாயகனது சரீரத்தைத் தீண்டினாள் தீண்டவேமூலனது சரீரத்தைக்கவர்ந்த திருமூலனார் தீண்டாதே என்று கூற அதற்கு மனைவியார் 'அச்சுற்று மயங்கி என் செய்தீர்' என்று தளர்ந்து விம்மி விம்மி அழுவதைப் பார்த்துக்கொண்டே இரக்கமில்லாதவராய் அவளது கணவனது சரீரத்தை அபகரித்துக்கொண்டதைக்கூட நினையாதவராய் "என்னைத்தீண்டாதே" "உனக்குஎன்னேடுயாதொருசம்மந்தமுமில்லை" என்று மறுத்து ஒரு பொதுமடத்திலே புகுந்து சிவயோகத்தில் இருந்துவிட்டால் இவரது செய்கை எவ்வளவு கவலைக்கிடமானது பாருங்கள் மூலனது மனைவியோ அன்றிரவு முழுதும் தேம்பித் தேம்பி அழுதவண்ணமாகவே இருந்து சூரியஉதயமான உடனே சில பெரியோர்க்கு விடயத்தைச்சொல்லி அவர்களைக் கொண்டு அழைத்துப் பார்த்தாள். பெரு மூச்சுவிட்டுக் கதறினாள். மன்னா? ஓ! எவ்வாறு உன்னை மறந்திருப்பது என்றும் அலறினாள். யாதும் பயன்படவில்லை. மாட்டினத்திற்கு உருகியவர் இவள்படும் பாட்டிற்கு உருகவில்லையே. இவர் எல்லாம் வல்ல சித்தராயிருப்பின் ஓர் இடத்தில் அருளும் ஓர்இடத்தில் மருளும் வரக் காரணமென்ன? மேய்க்க வைத்துப் பழககியதால் மாடுகளின் ஆற்றாமையைக் கண்டு சகியாத சித்தர் ஒருவரோடொருவர் உண்டு உறங்கவும் உடை உடுக்கவும் இரண்டு உடலிலும் ஓர் உயிரே என்று பிரியாது வாழ்ந்து வந்த மணாளனது உடலில் புகுந்து கொண்டு சிறிதும் உருக்கமில்லாது கண்டித்துப் பேசியதென்னென்று கழலுவது? உன்னுடைய உடலிலிருந்து மூலனது உடலை ஆசியாதிருப்பின் கண்டித்துப் பேசலாம் பேசவுங்கூடும் அவள் சொந்த நாயகன் என்று அண்டினால் பந்தமில்லையோ என்று சொல்வதா? அப்படிச் சொன்னவர் அச்சரீரத்தை விட்டு விட்டுத்தனது சரீரத்தில் புகுந்து கொள்ளலாமன்றோ? சரி தமது சரீரம் தான் கிடைக்காமல் போயிற்றே அப்பொழுதே பிறனுடைய சரீரத்தில் இருக்கப்படாது என்று அவளது வருத்தம் தீரும் பொருட்டு அவளது நாயகனது உடலை விட்டு விட்டிருக்க வேண்டுமல்லவா? அப்படிக்கின்றி உயிர் வைத்திருப்பவர் உடலைச் சொந்தமாக உடைய மூலனது மனைவியின் கருத்துக்குப்பொருத்தமாய் நடந்திருக்கவேண்டுமல்லவா? அலங்கரித்தவை யேறிய தேவடியாள் ஆடித்தான் தீரவேண்டும் என்றபடி ஒருவனது உடலில் நுழைந்து கொண்டு அவனது செய்கை தான் செய்யவேண்டுமே அல்லாது வேறு செய்ய இயலுமோ? அப்படி வேறு செய்ய உடன்பட்டவர் மற்ற நாயன்மார்களைப் போல உயிர் அற்ற உடலின் எலும்புகளை பெண்ணாக்கியது போலவும் முதலையுண்ட பாலகனை அழைத்ததுபோலவும், பாம்புகடித்திறந்தபாலகனையும்வணிக நாய்க்கனையும் உயிர்பெற்று வரச் செய்ததைப் போலவும், செய்து அவளது துக்கத்தை மாற்றிவிடப்படாதா? திருஞான சம்பந்தர் என்றுங்களால் புகழ்படைத்தார் ஒரு பெண்ணின் கூக்குரல் கேட்டு அவளது மணாளனது உயிரற்ற உடலில் உயிர் வருமாறு செய்து அவளது துக்கத்தைத் தீர்த்ததாக எழுதப்பட்டிருப்பதைப்போல் செய்துவிட்டிருந்தால் ஒரு சச்சரவு மில்லையே?

பிறகு இவர் எண்ணி வந்தவாறு தான் சென்று நட்பினை நாட்டினரா? அதுவுமில்லையே? நண்பனாகிய அகத்தியரை மறந்தாரல்லவா? மறவாதிருப்பின் ஆடையே நின்று கொண்ட காரணமென்ன? "எடுத்த காரியத்தை ஓர் இமைப்பில் முடிக்கும் சித்தர்கள் கூட எடுத்த காரியம் இனிது முடிக்காது" நின்றால் என்னவென்று சொல்லுவது? யாதோ பல காரணங்கள் சொல்லாம்" "கொடியில் தேர்ந்தவன் இடரிவிழுந்தாலும் அதுவுமோர் கொடிதான்" என்று சொல்லுவதுபோல இருக்கின்றதே ஒழிய வேறு என்ன இருக்கிறது.

மூவாயிரம் வருடங்கோறு மூளைத்திருந்து வருட மொன்றுக்கு ஒரு பாடலாக மூவாயிரம் பாடல் பாடினரென்றால் சுருதி, யுக்தி, அனுபவம் என்று சொல்லிக்கொள்ளும் வகைகளில் யுக்திக்காவது அல்லது அனுபவத்திற்காவது எட்டுகின்றதா? யோசித்துப் பாருங்கள்.

தற்காலத்துநாவல்களிடம் இருக்கும் புரட்டுகளுக்கும் மேலாக, புராணப் புரட்டுகள் இருக்கின்றதா? இல்லையா என்று தான் கேட்கின்றேன்.

நண்பரகளே இனி மற்றப்புரட்டுக்களைப் பற்றி நீங்களே யோசித்துக் கொள்ளுங்கள்.

---

புரட்சி முன்னேற்றத்திற்கு காரணமாயிருக்கிறது. குழப்பம் சீர்திருத்தத்திற்கு அஸ்திவாரமாயிருக்கிறது. சீர்திருத்தமும் எழுச்சியும், ஜனசமூக விழிப்பை விளக்குகிறது. இது தேச சரித்திரங்களில் கண்ட உண்மை.

ஜி. சுமதிபாய்.

## விரதப் புரட்டு.

### உமாமகேஸ்வர பூஜை விரதம்.

“நைமிசாரண்ய வாசிகளுக்கு சூதபுராணிகர் சொன்னது”.

(சித்திரபுத்திரன்)

ஆனந்த தேசத்தில் வேத விரதன் என்னும் பிராமணனுக்கு சாரதை என்று ஒரு பெண் இருந்தாள். அந்த ஊரில் மனைவியை இழந்த பத்மநாபன் என்னும் கிழப் பார்ப்பான் அந்தப் பெண்ணின் தகப்பனுக்கு நிறைய பணம் கொடுத்து தனக்கு அந்தப் பெண்ணை இரண்டாவது பெண்ஜாதியாக விவாகம் செய்து கொண்டான். அந்தக் கிழப் பார்ப்பான் மணக்கோலம் முடியு முன்பே விஷம் தீண்டி இறந்து போனான். பிறகு அந்தப் பெண் தகப்பன் வீட்டிலேயே இருந்தாள். சிலநாள் பொறுத்து ஒரு முனிவர் சாரதையின் வீட்டிற்கு வந்தார். சாரதை அவருக்கு மரியாதை செய்தாள். உடனே அந்த முனிவர் சாரதையை “நீ புருஷனுடன் இன்பமாய் வாழ்ந்து நல்ல பிள்ளைகளைப் பெறக்கடவாய்” என்று ஆசீர்வாதம் செய்தார். அதற்கு சாரதை “பூர்வ ஜென்ம கருமத்தின் பலனாய் நான் விதவையாகி விட்டதால் தங்களின் ஆசீர்வாதம் பலியாமல் வீணாய் போய்விட்டதே” என்றாள். அதற்கு அந்த ரிஷி “நான் கண் தெரியாத குருடனானதால் அறியாமல் அந்தப்படி ஆசீர்வாதம் செய்ய நேர்ந்து விட்டது. ஆனாலும் அது பலிக்கும்படி செய்கிறேன் பார்” என்று சொன்னார். “என் புருஷன் இறந்து வெகுநாளாய் விட்டதே இனி அது எப்படி பலிக்கும்”? என்று சாரதா கேட்க அதற்கு அவர் “நீ உமாமகேஸ்வர விரதம் அனுஷ்டித்து வந்தால் கண்டிப்பாய் நீ உத்தேசித்த காரியம் கைகூடுமென்று” கூறினார்.

“அவ்விரதம் அனுஷ்டிப்பதெப்படி”? என்று சாரதா கேட்டாள் அதற்கு முனி சொல்லுவதாவது:—

“சித்திரை அல்லது மார்கழி மாதத்தில் ஒரு பிராமணனை அவன் மனைவியுடன் நல்ல பீடத்தில் உட்காரவைத்து அவர்களைப் பார்வதி பரமசிவனாகப் பாவித்து மலர்களால் அர்ச்சித்து தினமும் அன்ன ஆகாரமிட்டு ஒருவருஷக்காலக்காய் பூசை செய்து பார்வதி பரமசிவ உருவத்தை மனதில் நினைத்து அதற்கு விரதத் அபிஷேகம் செய்து ஆராதித்து பஞ்சாக்ஷரத்தை தியானித்துக்கொண்டிருந்தால் நினைத்த காரியமெல்லாம் கைகூடும்” என்றார்.

அதுகேட்ட சாரதையானவள் அந்தப்படியே அதுமுதல் தனக்கு முனிவரின் ஆசீர்வாதம் பலிக்கவேண்டுமென்று கருத்தில் கொண்டு முனிவர் சொன்னபடி உமாமகேஸ்வர விரதத்தை கிரமமாய் அனுஷ்டித்து வந்தாள். உடனே பார்வதி தேவி சாரதைக்கு பிரத்தியட்சமாகி “உனக்கு என்ன வரம் வேண்டும்”? என்று கேட்டாள்.

சாரதை “எனக்கு புருஷன் வேண்டும்” என்றாள்.

பார்வதி “அப்படியே உன்னை ஒரு புருஷன் தினமும் வந்து சொற்பனத்தில் புணருவான் அதனால் நல்ல ஒரு குழந்தைபிறக்கும்” என்று வரம் கொடுத்தாள். அதுமுதல் சாரதையின் சொற்பனத்தில் தினமும் ஒரு புருஷன் வந்து புணர்ந்துகொண்டே இருந்தான். அதனால் சாரதைக்குகர்ப்பமும் உண்டாயிற்று. அதைக்கண்ட அவ் வூரார் எல்லோரும் சாரதை சோரம்போய் கர்ப்பம் ஆய்விட்டாள் என்று பழித்தார்கள். இதைக்கண்டு சாரதை துக்கப்பட்டாள். பிறகு பழித்தவர்கள் வாய் அழுகி அதில் புழுவு திறும்படி பார்வதி செய்து விட்டாள். 10-மீ பொறுத்து சாரதை ஒரு புத்திரனைப் பெற்றாள். அதற்கு சாரதேயன் என்று பெயர் சூட்டி மகா மகிமை பொருந்திய சிவராத்திரியன்று தாயும் பிள்ளையும் கோகர்ணத்திற்கு யாத்திரை சென்றார்கள். செல்லும் வழியில் சொர்ப்பனத்தில் வந்த புருஷன் நேரில்வந்து சாரதையுடன் கலந்துகொண்டான். பிறகு கொஞ்ச காலம் சாரதையும் புருஷனும் சந்தோஷமாய் வாழ்ந்து இன்பமனுபவித்து புருஷன் இறந்துபோனான். புருஷன் இறந்ததும் உடனே சாரதை உடன்கட்டையேறி இருவரும் சிவபதமடைந்தார்கள். என்று நைமிசாரண்யவாசிகளுக்கு சூதகமுனிவர் வியாசரிடம் கேட்டு தெரிந்ததை சொல்லுகிறேன், என்று சொன்னார்.

இந்த சரிதை பிரமோத்திர புராணத்தில் உமாமகேஸ்வர விரத மகிமையும் விரதத்தின் பலனும் என்கின்ற தலைப்பில் சொல்லப்பட்டிருக்கிறது. இதை கவனிப்போம்.

இந்தக்கதையின் ஆபாசம் எவ்வளவு மோசமாயிருக்கிறது என்பதை வாசகர்களே யோசித்துப்பாருங்கள். ஒரு சிறு பெண்ணை ஒரு கிழவன் அந்தக்காலத்திலும் கட்டிக்கொள்ளுகின்ற வழக்கமும், தகப்பன் பணம் வாங்கிக்கொண்டு சாகப்போகும் கிழவனுக்கு தனது சிறு பெண்ணை கட்டிக் கொடுக்கும் வழக்கமும் பார்ப்பனர்களுக்குள் இருந்ததாக வைத்துக் கொண்டாலும் புருஷன் இறந்தவுடன் உடன்கட்டையேறாமல் பெண்ஜாதியான (சாரதை) சிறு பெண் இருந்திருக்க முடியுமா? என்பதை நினைத்துப்பாருங்கள். ஒரு சமயம் உடன்கட்டை ஏறாமல் இருந்திருந்தாலும், ஒரு ரிஷிக்கு இந்தப் பெண் விதவை என்ற சங்கதி தெரியாமல்போகுமா? ரிஷிக்கு ஒருசமயம் அந்தப்படி தெரியாமல் போயிருந்தாலும் ஒரு குருட்டு ரிஷி தெரியாமல் சொல்லிவிட்ட காரியம் ஒரு விரதம் அனுஷ்டிப்பதால் கைகூடிவிடுமா? அந்தப்படிகூடுமானாலும் பார்ப்பனனையும் அவன் பெண்ஜாதியையும் பார்வதி பரமசிவன் போல் எண்ணி பூசை செய்தால் பார்வதி வந்து விடுவாளா? அப்படி வருவதாயிருந்தாலும் பார்வதி நேரில் புருஷனைக் கொடுக்காமல் தூக்கத்தின் போது கனவில் வந்து வந்து புணர்ந்து விட்டு போகும்படி கட்டளையிடுவாளா? அப்படி கட்டளையிடுவதானாலும் கனவில் புணர்வதற்கு கனவில் கர்ப்பமுண்டுபண்ணாமல் விழித்த பிறகுங்கூட அந்தகர்ப்பம் இருக்கும்படிசெய்வாளா? அப்படித்தான் செய்தாலும் அதன் காரணத்தை பொது ஜனங்களுக்கு தெரியப்படுத்தாமல இரகசியமாய் இருக்கச்செய்து இந்த இரகசியம் தெரியாத பொதுஜனங்கள் சாரதையின் கர்ப்பத்தைப்பற்றி சந்தேகப்பட்டால் அதற்கு பார்வதி திருப்தி அடையும்படி சமாதானம் சொல்லாமல் சந்தேகப்பட்டவர்கள் வாய் அழுகிப் புழுவு தள்ளும்படி செய்வது யோக்கியமாகுமா? அன்றியும்கோகர்ணத்திற்கு போகும்வழியில் அந்த சொர்பனப் புருஷனை வரும்படி செய்த பார்வதியும் பரமசிவனும் பொது ஜனங்கள் சந்தேகப்படும் போது வரும்படி செய்திருக்கப்படாதா? அன்றியும் அந்தப்புருஷனும் சாவானேன்? அப்படியே காலம் வந்து செத்து இருந்தாலும் முன்னைய கிழப்புருஷனுக்கு உடன்கட்டை ஏராத குமரிசாரதி இந்தப்புருஷனுக்கு என் கிழவிஆனபின் உடன்கட்டை ஏறினாள்?

வாசகர்களே வேதப்புரட்டு, இதிகாசப்புரட்டுபுராணப்புரட்டு என்பது போல் இந்த விரதப்புரட்டும் எவ்வளவு முட்டாள்தனமானதும் அயோக்கியத்தனமானதும் சுயநல சூழ்ச்சிகொண்டதுமாய் இருக்கின்றதுஎன்பதை நன்றாய் கவனித்துப்பாருங்கள். விரதம் என்றால் ஒரு பார்ப்பனனையும் பார்ப்பனத்தியையும் பார்வதி பரமசிவன் போல் பாவித்து அபிஷேகம் பூசை ஆராதனை செய்தால் விதவைகளுக்கு புருஷன் சுவர்ப்பனத்தில் வருவான் என்பது எவ்வளவு அயோக்கியத்தனமான கதை?

இப்படித்தானே இப்போதுள்ள விதவைகள் புருஷஆசைக்கு விரதமிருந்து “சொர்ப்பனத்தில்” புருஷருடன் புணர்ந்துகொண்டிருபார்கள். சாரதையைப்போல் அநேக விதவைகள் இப்போதும் கர்ப்பமானாலும் பழி சொல்லுகின்றவர்கள் வாயில் பார்வதி புழுக்கள் தள்ளச் செய்யாததால்தான் அந்த விரதமிருக்கும் விதவைகளெல்லாம் கர்ப்பங்களை தாங்களாகவே அழித்து விடுகின்றார்கள் போலும். பார்ப்பன சூழ்ச்சி எவ்வளவு மோசமானது என்பதை இதிலிருந்தாவது விரதமிருக்கும் வைதீகர்களும்,விரதமிருக்கும் பெண்களும் புருஷர்களும் அறிந்து கொள்ளுங்கள்.

மற்ற விரதங்களைப்பற்றி பின்னால் சமயம் நேர்ந்தபோது எழுதுகிறேன்.

---

**கிழிந்த பஞ்சாங்கம் ஒழிந்தால் நன்று**

---

## இளைஞர்களே! எழுமின்!!

(K. N. பொன்னம்பலம் எழுதுவது)

பார்ப்பனரல்லாத வாலிப சகோதரி சகோதரர்களே!

29—3—30 ந் தேதி ஈரோட்டில் தியாகமூர்த்தி ஈ. வெ. ராமசாமிப் பெரியாரில்லத்தில் திருவே. என்.நஞ்சப்ப கவுண்டர் அவர்கள் தலைமையில் கூடிய நிர்வாகக் கழகக் கூட்டத்தில் மே மாதம் 10, 11 தேதிகளில் ஈரோட்டில் 2-வது சுயமரியாதை மகா நாடும், இன்னும்சில மகா நாடுகளும் நடத்துவதாகவும் அதற்கான பூர்வாங்கமாகன பல ஏற்பாடுகளும் திட்டங்களும் நிர்ணயித்து விட்டதோடு மகா நாட்டு முன்னேற்பாட்டு வேலைகற் அதிதீவிரமாக நடந்து வருவதும் நேயர்கள் அறிந்த விஷயம் இத்தருணத்தில் இளைஞர்களாகிய நாம் தூங்கலாகாது ஏனெனில் ஒரு இயக்கம் முன்னேற வேண்டுமானால் அதற்கு வாலிபர் சேவையே முன்னணியில் நிற்க வேண்டும் என்று, நமது பெரியார் அநேக தடவைசொல்லியும் எழுதியும் வந்திருக்கிறார்கள். அதே போல் மேனாட்டில் பல தேசங்கள் வாலிபர்களால் தான்முன்னேறியிருக்கின்றது.

இது காலை நமது மக்களின் மானம் மரியாதை, சுதந்திரம் முதலிய மனிதத் தன்மைகள் யாவும் பிறரால் பரிகரிக்கப்பட்டு மக்கள் சுதந்திரமும் சுயமரியாதையுமற்று மிருகத்துக்கும் கடையான நிலைமையில் வாழ்ந்து வருவதைக் கண்ட நமது பெரியார் இரவு பகலாய் நமக்காகப் பாடுபட்டுக்கொண்டு வருவதையும், அதற்கேற்ப பலனடைந்திருப்பதையும், உலகமறியும். தமிழ் மக்கள் நலனுக்கெனத் தோற்றுவித்த “சுயமரியாதை” இயக்கமும் தோன்றியநாள் முதல் சுடர்விட்டு ஓங்கி வளர்ந்து மக்களுக்குப் போதிய பலனை யளித்திருக்கின்றது போற்றத்தக்கதாகும்.

எனவே ஈரோட்டில் நடைபெறும் மஹாநாட்டிற்கு பெரியார் பலர் உதவியும்ஊழியரும்பெருகி இருந்தபோதிலும்,இளைஞர்கள் உதவியும் ஊழியமுமேமுக்கியமானதாகும்

மஹாநாடானது இன்னும் ஒரு மாதகாலமேஇருக்கிறபடியால்இளைஞர்களே தூங்காதீர்கள்விரைவில்தொண்டர்களாகத் தங்கள் பெயரைப் பதிவுசெய்துகொண்டு மஹாநாட்டுக்கு 10. 15 தினங்களுக்கு முன்னாடியே ஈரோடுவந்து மஹாநாட்டைச்சிறப்புடன் நடத்த அக்கறையோடு தொண்டாற்றிநமதுபெரியார்களுக்கு உற்சாகத்தையும் ஆதரவையும் காட்டி அரிய சேவைசெய்து அன்னவர்களின் ஆசீர்வாதம் பெற்றுய்ய வேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இளைஞர்களே!
எழுமின்! எழுமின்!!

‘அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதா பேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன் றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே”

குடி அரசு

ஈரோடு 1930 ஏப்ரல் மீ 6-உ

## கர்ப்பத்தடை.

கர்ப்பத்தடை என்பதுபற்றி சுமார் 2 வருஷங்களுக்கு முன் நாம் எழுதியது அநேகருக்கு திடுக்கிடும்படியான சேதியாயிருந்தது. ஆனால் இப்போது சிறிது காலமாய் அது எங்கும் பிரஸ்தாபிக்கப்படும் ஒரு சாதாரண சேதியாய் விட்டது. வரவர அது செல்வாக்குப் பெற்றும் வருகின்றது. பெரிய உத்தியோகத்தில் இருந்த சர் பி. சிவசாமி அய்யரும் பெரிய உத்தியோகத்தில் இப்போதும் இருக்கும் ஜஸ்டிஸ் ராமேசம் அவர்களும் மற்றும் பலரும் இது விஷயமாய் அடிக்கடி பேசி வருகின்றதையும் எழுதிவருகின்றதையும்பத்திரிகையில் பார்த்தும் வருகின்றோம். சமீபத்தில் சென்னை சட்ட சபையிலும் கர்ப்பத்தடை விஷயமாய் பிரசாரம் செய்யவேண்டுமென்று பிரஸ்தாபிக்கப்பட்டதையும் நேயர்கள் கவனித்து இருக்கலாம்.

ஆனால் கர்ப்பத்தடையின் அவசியத்தைப்பற்றி நாம் கருதும் காரணங்களுக்கும்மற்றவர்கள் கருதும் காரணங்களுக்கும் அடிப்படையான வித்தியாசமிருக்கின்றன. அதாவது பெண்கள் விடுதலையடையவும் சுயேச்சை பெறவும் கர்ப்பத்தடைஅவசியமென்று நாம்கூறுகின்றோம். மற்றவர்கள் பெண்கள்உடல் நலத்தை உத்தேசித்தும் பிள்ளைகளின் தாஷ்டீகத்தை உத்தேசித்தும் நாட்டின் தரித்திரதிசையை உத்தேசித்தும் குடும்ப சொத்து குலையாமல் இருக்க வேண்டுமென்பதை உத்தேசித்தும் கர்ப்பத்தடை அவசியமென்று கருதுகின்றார்கள். இதை மேல் நாட்டினர் பலர் கூட ஆதரிக்கின்றார்கள். ஆனால் நமது கருத்தோ இவைகள் எதையும் பிரதானமாய்க் கருதியது அல்ல. மற்றெதைக் கருதியென்றால் முன் சொன்னதுபோல்பொதுவாக பெண்களின் விடுதலைக்கும் சுயேச்சைக்குமே கர்ப்பம் விரோதியாய் இருப்பதால் சாதாரணமாய்ப்பெண்கள் பிள்ளைப் பெறுவது என்பதையே அடியோடு நிறுத்திவிடவேண்டும் என்கின்றோம். அதுமாத்திரமல்லாமல் பல பிள்ளைகளைப் பெருகின்ற காரணத்தால் ஆண்களும் கூட சுயேச்சையுடனும், விடுதலையுடனும் இருக்க முடியாதவர்களாகவேயிருக்கின்றார்கள். இதன் உண்மை சாதாரணமாய் ஒவ்வொருமனிதனும் ஸ்திரீயும் தங்கள் சுதந்திரங்களுக்குக்கஷ்டம் வருகின்றகாலத்தில்பேசிக்கொள்வதைப் பார்த்தாலே தெரியும்:

ஒரு மனிதன் தான் கஷ்ட நிலையில் பேசும்போது “நான் தனியாயிருந்தால் ஒரு கை பார்த்து விட்டு விடுவேன். 4, 5 குழந்தையும் குட்டியும் ஏற்பட்டு விட்டதால் இவைகளைக் காப்பாற்றவேண்டுமே என்கின்ற கவலையால் பிறர் சொல்லுவதையெல்லாம் கேட்டுக்கொண்டு ஆளாயிருக்கவேண்டி இருக்கின்றது” என்றே சொல்லுகின்றான். அது போலவே ஒரு ஸ்திரீயும் புருஷனாலோ அல்லது வேறு எதனாலோ சங்கடம் ஏற்படும்போது “நான் தனியாய் இருந்தால் எங்காகிலும் தலையின் மேல் துணியைப் போட்டுக்கொண்டு போய்விடுவேன்: அல்லது ஒரு ஆற்றிலாவது குளத்திலாவது இறங்கிவிடுவேன். இந்தக் கஷ்டத்தை சகித்துக்கொண்டுஅரை நிமிஷமும் இருக்க மாட்டேன். ஆனால் இந்த குழந்தைகளையும், குஞ்சுகளையும் நான் எப்படி விட்டுவிட்டுப் போகமுடியும்” என்றே சொல்லுகின்றாள். ஆகவே இந்த இருவர்களுக்கும் அவர்களது சுயேச்சையையும்விடுதலையையும் கெடுப்பது இந்தக் குழந்தைகளும் குஞ்சுகளும் என்பவைகளே யாகும்.

உலகத்தில் மக்கள் கஷ்டப்பட்டு தன் தன் ஜீவனத்திற்கு பொருள் தேடுவதற்கே சுதந்தரத்தை விற்று அடிமையாக வேண்டிய நிலையில் இருக்கும்போது பிள்ளைகளையும் குட்டிகளையும் காப்பாற்றவேண்டிய அவசியமும் தலைமேல் இருக்குமானால் அந்த இடத்தில் எப்படி சுயேச்சை இருக்கமுடியும்? ஆகையால் ஆண் பெண் இருவர்களின் சுயேச்சைக்குமேகற்பமாவதும் பிள்ளைகளைப்பெறுவதும் இடையூறான காரியமாகிறது அதிலும்பெண்கள் சுயேச்சைக்கு கர்ப்பம் என்பது கொடிய விரோதியாயிருக்கிறது. அதனால்தான் நாம் கண்டிப்பாய் பெண்கள் பிள்ளை பெருவதை நிருத்தியே ஆகவேண்டும் என்கின்றோம். அன்றியும், பெண்கள் வியாதிஸ்தர்கள் ஆவதற்கும் சீக்கிரம் கிழப்பருவம் அடைவதற்கும் ஆயுள் குறைவதற்கும் இந்த கர்ப்பம் என்பதே மூலகாரணமாயிருக்கின்றது. தவிரவும் ஆண்களில் பிரம்மசாரிகளும் சன்யாசிகளும்சங்காச்சாரியார்களும் தம்பிரான்களும் பண்டார சன்னதிகளும் ஏற்பட்டிருப்பதுபோல் பெண்களில் பிரம்மசாரிகளும் சங்காச்சாரி முதலியவர்களும் ஏற்படுவதற்கும் இந்த கர்ப்பமே தடையாயிருந்து வருகின்றது. இந்நிலையில்தான் பெண்கள் விடுதலைக்கும் சுயேச்சைக்கும் முன்னேற்றத்திற்கும் அவர்கள் பிள்ளை பெருவது என்பதை நிருத்த வேண்டும் என்று நாம் சொல்லுகின்றோம். இந்தப்படி நம்மில் ஒருவருக்கொருவர் கருதும் காரணம் எப்படி இருந்தபோதிலும் நமக்கும் மற்ற கர்ப்பத்தடைகாரருக்கும் கர்ப்பத்தடை அவசியம் என்பதில் அபிப்பிராய பேதமில்லாதிருப்பது குறித்து நாம் மகிழ்ச்சியை அடைகின்றோம்.

ஆனால் இந்த முக்கிய காரியங்களில் சமீபகாலத்தில் சட்டசபையில் அரசாங்கத்தினர் சார்பாய் சுகாதார மந்திரி கர்ப்பத்தடை பிரசாரத்தை எதிர்த்ததும் பெண்கள் சார்பாய் சட்டசபைக்குச் சென்ற டாக்டர் முத்துலக்ஷ்மி அம்மாளும்அவருக்கு அனுசரணையாய் இருந்ததும் நமக்கு மிக்க ஏமாற்றத்தையேகொடுத்துவிட்டது. இந்த தேசத்தில் பிறக்கும் குழந்தைகளையெல்லாம் இந்த தேசத்து அரசாங்கமே வளர்த்து அவைகளுக்கு கல்விகொடுத்து மேஜர் ஆக்கி விட வேண்டும் என்கின்ற ஒரு நிபந்தனை இருந்திருக்குமானால் சுகாதாரமந்திரி அரசாங்கத்தின்சார்பாய்கர்ப்பத்தடையை எதிர்த்திருக்கமாட்டார். அப்படிக்கில்லாமல் யாரோபெற்று யாரோ வளர்த்தி மக்களைப்பெருக்கி அடிமைக்கு விடுவதானால்சர்க்கார் அதை எப்படிவேண்டாம் என்று சொல்ல முன்வருவார்கள். உண்மையான சுகாதாரத்தில் பிள்ளைப் பேற்றை தடுப்பது முக்கியமான சுகாதாரம் என்றுசுகாதாரமந்திரிக்கும் பெண்மணியாய் இருந்தும் டாக்டர் பட்டம் பெற்ற வைத்திய அம்மாளுக்கும் தெரியாமல் போனது வருந்தத்தக்க காரியமேயாகும். இந்தவிஷயத்தில் அரசாங்கத்தார் விபரீதமான அபிப்பிராயப்பட்டு விட்டாலும் கூட பொதுஜனங்கள் அதை லக்ஷியம் செய்யாமல் ஒவ்வொருவரும் இதை கவனித்து அவரவர்களே தக்கது செய்துகொள்ளவேண்டியது மிக்க அவசியமான காரியமாகும்.

மதுவிலக்குபிரசாரத்தை விட, தொத்துவியாதிகளை ஒழிக்கும் பிரசாரத்தை விட, இந்த கர்பத்தடை பிரசாரம் மிகவும் முக்கியமானதென்பதே நமது அபிப்பிராயம்.

ஆதலால் இந்தக் கற்பத்தடைக்கு நமது நாட்டில் ஒருஸ்தாபனம் ஏற்படுத்தி அதன்மூலம பிரசாரம் செய்ய பொதுஜனங்களில் சிலராவது இதுசமயம் முன்வர வேண்டுமென்றே வேண்டிக்கொள்ளுகின்றோம்.

## பூரண வெற்றி

சாரதா சட்டம் அமுலுக்கு வந்து விட்டது. சாரதா சட்டம் என்பது:

14 வயதுக்குக் கீழ்பட்ட பெண்களுக்கும் 18 வயதுக்கு கீழ்பட்ட ஆண்களுக்கும் விவாகம் செய்யக்கூடாது செய்தால் தண்டனை என்கின்ற நிபந்தனையைக் கொண்டது.மற்றப்படி இதைத் தவிர இந்தசட்டத்தில் வேறுஎவ்வித ஆபத்தும் கிடையாது என்பது யாவருக்கும் தெரிந்ததே. ஆனால் இந்தசட்டத்திற்குஇருந்துவரும் எதிர்ப்பு பெரிதாயிருந்தாலும் சிறிதாயிருந்தாலும் மதம்என்னும் பேரால் அல்லதுவேறுஎதையும் இதுவரை யாரும் சொன்னதில்லை. மதத்தின் பேராலும் கூட ஆக்ஷேபணை சொல்லுகின்றவர்களும் இருமதங்களின்பேராலேயே சொல்லமுன்வந்துஇருக்கிறார்கள் ஒன்று மகமதிய மதம். மற்றொன்று இந்துமதம்.மகமதிய மதத்தின்பேரால்ஆக்ஷேபம்சொல்லுகின்றவர்கள்14வயதுக்கு மேற்பட்ட பெண்ணை கலியாணம் செய்வதுகூடாதுஎன்றோ அல்லது அது மத விரோதமென்றோ சொல்லவில்லை. அன்றியும் 14 வயதுக்கு கீழ்பட்ட பெண்ணைத்தான் கலியாணம் செய்துகொள்ள வேண்டும் என்கின்ற மத நிர்பந்தமிருப்பதாகவும் அவர்கள் சொல்லுவதில்லை. ஆனால “கலியாணத்திற்கு வயதுநிர்ணயம்கூடாது” என்று மாத்திரம் தான் சொல்லுகின்றார்கள். இதற்கு மற்ற ஜனங்கள் எவ்வளவு மதிப்பு கொடுப்பார்கள் என்பது விளங்கவில்லை. ஆதலால் இதைப்பற்றி நமக்கு லட்சியமில்லை ஆனால் இந்து மதத்தின் பேரால் சொல்லுகின்றவர்கள் பெண்களுக்கு

14 வயதுக்குள் கலியாணம் செய்தாக வேண்டும் என்றும் பெரிய மனுஷி யான பெண்ணை கலியாணம் செய்து கொள்ளக்கூடாது என்றும் இவைகளுக்குவிரோதமாய் செய்தால் மத விரோதம் என்றும் பாபமென்றும் நரகம் கிடைக்குமென்றும் சொல்லுகின்றார்கள்.

இதுசரீர சாஸ்திரக்கூற்றுப்படி எப்படி இருந்தபோதிலும் பெண்களை அடிமையென்றும் பெண்களுக்கு எந்த நிலையிலும் சுதந்திரம் கொடுப்பது கூடாதென்றும் சொல்லுகின்றவர்களுக்கும் அதை அனுமதிக்கும் மதத்திற்கும் வேண்டுமானால் சரியான நியாயமாய் இருக்கலாமேயொழிய ஆனால் பெண்களுக்குசுதந்திரம் கொடுக்கவேண்டும் என்றும் அவர்களும் நம்மைப்போல் மனிதஜன்மம் தான் என்றும் கருதுகின்றவர்களுக்கும் ஒரு சிறிதும் நியாயமாய்த் தோன்றுது? மக்களை நகத்திற்காவது அனுப்பலாமே யொழிய அடிமையாய் இருக்க விடக்கூடாது என்றுதான் தோன்றும். அன்றியும்இந்துமதத்தின் கல்யாண ஒழுங்குமுறை இந்த மார்ச்சு மீ 1௳ முதல் 31 தேதி வரை நடந்த கல்யாணங்களைப் பார்த்தால் அதிலிருந்தே தெரிந்து கொண்டிருக்கலாம். சாதாரணமாக நமது நாட்டில்மட்டும் ஒரு வருஷ வயதிற்குக் கீழ்ப்பட்ட பெண் குழந்தைகளுக்கு மாத்திரம் நூற்றுக் கணக்கான கல்யாணங்கள் நடந்திருக்கின்றன மற்றபடி 1, 2, 3, 4, 5, 6, 7 ,8, 9, 10 வருஷங்களுக்கு உள்பட்ட கல்யாணங்கள் பல பல ஆயிரங்களாக இருக்கலாம். இவற்றுள் பி. ஏ. பி. எல்., எம்: ஏ. எம்.எல். பட்டம் பெற்றவர்களும் இங்கிலாந்து முதலிய மேல்நாடுகளுக்குயாத்திரை சென்று வந்தசீர்திருத்தவாதிகளும் சரீரக் கூற்று அறிந்த டாக்டர்களும் மேடையில் சீர்திருத்தத்தைப்பற்றி பேசுகின்றவர்களும் ஆகிய கூட்டத்தார்களின் வீட்டுக் கலியாணங்களே எண்ணிறந்தனவா யிருக்கின்றன. இவைகளையெல்லாம் பார்க்கும்போது இந்த சட்டம் எவ்வளவு அவசியம் என்பதும்களுக்குஇப்பொழுதாவது விளங்கி இருக்கும்.

இந்தமாதிரி நிலைமை நமது நாட்டில் வெகு காலமாய் இருந்து வந்தும் இந்த அக்கிரமங்களை கவனித்துஇவ்விதமாக ஒரு சட்டம் செய்யப்படுவதற்கு இந்திய அரசியல் வாதிகளாலேயே சுமார் 25 வருஷகாலமாக தடை செய்யப்பட்டு வந்திருக்கும் விஷயம் இந்திய சட்ட சபை நடவடிக்கைகளைக் கவனித்து வந்தவர்களுக்கு நன்றாய் விளங்கும் சிறிது காலமாக நமது நாட்டில் அரசியல் புரட்டுகள் வெளியாக்கி அரசியல் சீர்திருத்த இயல் ஆகிய இயக்கங்களைதங்களுக்கேசொந்தமாக்கிக்கொண்டிருந்த பார்ப்பனர்களின் யோக்கியதையும் சூட்சியையும் வெளியாக்கிஇந்நாட்டுக்கு வேண்டியது அரசியலா? அல்லது மதப்புரட்டு பார்ப்பனப்புரட்டு ஆகியவைகள் ஒழிபடவேண்டிய சமூக சீர்திருத்த இயலா? என்பதை பாமர மக்களை நன்றாய் உணரச் செய்த பிறகே பாலிய விவாகத்தை ஒழிக்கும் சாரதா சட்டத்தின் அவசியமும் பொட்டுக் கட்டும் வழக்கத்தை ஒழிக்கும் டாக்டர் முத்துலட்சுமி அம்மாள் சட்டத்தின் அவசியமும் தீண்டாமை ஒழிக்கவும் பெண்களுக்கு சொத்துரிமை கொடுக்கவும் விதவைகளுக்கு சொத்துரிமை கொடுக்கவும் கொண்டுவரப்பட்டிருக்கும்ஜெயகர் முதலியவர்கள் சட்டத்தின் அவசியமும் ஜனங்கள்உணரவும் அவைவெளிவரவும்செல்வாக்கு பெறவும் இடம் கிடைத்து வந்திருக்கின்றன.

ஆனாலும் இவைகளுக்குபலமான எதிர்ப்புகள் இல்லாமலும் இல்லை. இருந்தாலும்சீர்திருத்தக்காரர்கள் ஒருவாறு பூரணவெற்றி பெற்று வருகின்றார்கள் என்றே சொல்லவேண்டும். எப்படியெனில் சீர்திருத்தக்காரர்கள் 100-க்கு 10 விஷயத்தில் வெற்றி பெற்றால் அதுவே பூரண வெற்றியான 100க்கு 100 பாகம் வெற்றி பெற்றதாகும். ஏனெனில் உண்மை சீர்திருத்தக்காரர்கள் எண்ணிக்கை நமது நாட்டில் 1000-க்கு ஒன்றுகூட இருக்கமாட்டார்கள். சீர்திருத்த விரோதிகள் எண்ணிக்கை பகுதிக்கு மேற்பட்டவர்களாகவே இருக்கின்றார்கள். மீதி உள்ள பாமர மக்களோ தனக்கும் தெரியாமல் பிறர் சொல்வதையும் அறிய சக்தியற்ற மூடர்களாக வைக்கப்பட்டிருப்பவர்கள். இந்த நிலையில் உள்ள ஒருநாட்டில் ஒரு சிறு வெற்றி ஏற்பட்டாலும் அது முழு வெற்றியேயாகும். உதாரணமாக, சீர்திருத்தங்களுக்கு விரோதமாய் இருந்து சீர்திருத்தங்களை எதிர்த்து வெற்றிபெற்றவர்களைப்பற்றி வெற்றிமகிழ்ச்சி கூறுகின்ற உணர்ச்சியுள்ள மக்கள் அடியோடு மறைந்து வருகிறார்கள். ஆனால் சீர்திருத்தத்தில் ஒரு சிறு பாகம் வெற்றியானாலும் அதை புகழ்ந்து வெற்றி மகிழ்ச்சி அடைகின்றவர்கள் தாராளமாயும், வெளிப்படையாயும், ஏற்பட்டுவிட்டார்கள்.

இந்த நிலை மிகவும் மகிழ்ச்சியும் நம்பிக்கையும் அடையத்தக்க நிலையாகும். ஆதலால், சீர்திருத்தக்காரர்கள் தங்களது தோல்விக்கும் தங்களுக்குஏற்பட்டிருக்கும் எதிர்ப்புகளுக்கும் சிறிதும் கவலைகொள்ளக்கூடாது. ஆனால் வெற்றியில் எவ்வளவுமகிழ்ச்சி அடைவதாயிருந்தாலும் அதோடுதிருப்த்தியும்அடைந்து விடக்கூடாது என்று சொல்லுவோம். பொட்டுகட்டு மசோதாசென்ற மாதம் சென்னை சட்டசபையில் நிறைவேறி இருக்கவேண்டியதானது அனாவசியமாய் ஒத்திப் போட நேர்ந்ததானது விசனிக்கத்தக்கதாகும். ஆனாலும் அடுத்த கூட்டத்திலாவது அது நிறைவேறிவிடக் கூடும் என்றே கருதி இருக்கின்றோம்.

---

## இரண்டாவது
## சுயமரியாதை மகாநாடு

### பொருட்காட்சி அறிக்கை நெ. 1

மே மாதம் 10, 11-ம் தேதிகளில், ஈரோட்டில் நடைபெறப் போகும் 2-வது சுயமரியாதை மகாநாட்டை முன்னிட்டு விவசாயம், கைத்தொழில், யந்திரம்,முதலியவைகள் சம்மந்தமான பொருட் கண்காட்சி ஒன்றை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் விஷயம் பத்திரிக்கைகள் வாயிலாக அறிந்திருக்கலாம். சென்ற வருஷம் செங்கல்பட்டில் கூட்டப்பட்ட முதலாவது சுயமரியாதைமகாநாட்டின்போது ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கண்காட்சிசாலையை சென்னை அரசாங்க சுகாதார மந்திரி கனம் எஸ். முத்தையா முதலியார் அவர்கள் திறந்து வைத்ததும் பொருட்காட்சியை பதினாயிரக்கணக்கான மக்கள் கண்டுகளித்ததும் பொருட்காட்சிக்கு வஸ்துக்கள் கொண்டு வந்தவர்களுக்கு நற்சாட்சிபத்திரம் அளிக்கப்பட்டதும் யாவரும் அறிந்த விஷயமே. அதுபோலவே இவ்வருஷமும் முன்னிலும் அதிகமான விசேஷஏற்பாடுகளுடன் நடத்தவேண்டுமென்று கருதியிருப்பதோடு, பொருட்காட்சிசாலையைத் திறந்துவைப்பதற்கு சென்னை அரசாங்க அபிவிருத்தி மந்திரி கனம் M. R. சேதுரத்தினம் அய்யர் அவர்கள் தயவுடன் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

ஆதலால் விவசாயத்தில் அக்கரையும் ஆர்வமும் உள்ளவர்களும் கைத்தொழில் வியாபாரம் முதலியவைகளில் நூதன முறைகளை கைக்கொண்டு தொழில் நடத்துகிறவர்களும், மேற்கண்ட பொருட்காட்சிக்கு விவசாய பொருள்களையும் நூதன கைத்தொழில் பொருள்களையும் அனுப்பி உதவிசெய்வதின் மூலம் நம்முடன் ஒத்துழைக்கவேணுமாய் வேண்டிக் கொள்ளுகிறோம். பொருட்காட்சிக்கு காட்சிப் பொருள்களை அனுப்பவிருப்ப முள்ள கனவான்கள் தயவு செய்து தாங்கள் என்ன பொருளை காட்சிக்கு அனுப்ப உத்தேசித்திருக்கிறார்கள் என்பதையும் அதற்காக எவ்வளவு இடம் தேவை என்கின்ற விஷயத்தையும் மற்றும் வேறு எவ்விதமானவசதிகள் விரும்புகிறார்கள் என்பதையும் விவரமாய் தெரியப்படுத்தினால் அதற்காக வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து மற்ற விவரங்களை தெரிவிக்க அநுகூலமாயிருக்கும் என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

எம். சிக்கையா,
பொருட் காட்சி இலாகா, காரியதரிசி.

---

# இரட்டை வெற்றி.

## பன்னீர்செல்வம்

உயர் திருவாளர் ராவ் பகதூர் ஏ. டி. பன்னீர்செல்வம் அவர்கள் தஞ்சை ஜில்லாபோர்டு தலைவராக மூன்றாம் முறை தேர்ந்தெடுக்கப்பட்ட விஷயம் முன்னமேயே வாசகர்களுக்குத் தெரிவித்திருக் கிறோம். ஆனால் அந்த தேர்தலின் மேல் சில சட்டசம்மந்தமான ஆட்சேபனைகளைக் கிளப்பி எதிர் அபேட்சகர்கள் அரசாங்கத்திற்குச் செய்து கொண்ட விண்ணப்பத்தால் இரண்டு மாதகாலம் அந்த தேர்தல் முடிவை கிரமப்படி அரசாங்கத்தார் ஒப்புக்கொண்டு கெஜட்டில் பிரசுரம் செய்யாமல் காலம் கடத்தி வந்தார்கள். ஆனாலும் முடி

வாக தேர்தல் செல்லுபடி யானதை சென்ற வாரத்தில் பிரசுரம் செய்துவிட்டசேதி யாவருக்கும் மகிழ்ச்சியை தரும். இதனால் திரு. பன்னீர்செல்வம் அவர்கள் உத்தியோக காலம் மற்றும் சிறிது காலம் வளர்வதற்கு இடமுண்டாகி இரட்டை வெற்றி ஏற்பட்டதே தவிர வேறொரு கெடுதியும் ஏற்பட்டு விடவில்லை. ஆனால் மேற்படி தேர்தலின் மீது அது செல்லத்தக்கதல்லவென்றுஎதிர் அபேக்ஷகர் கோர்ட்டில் ஒரு வியாஜியம் தொடுத்து இருக்கின்றார்கள். அதன் கதிரிம் அனேகமாய் முடிவில் இப்படியே தான் ஆகி மூன்று வெற்றி ஏற்படக்கூடு மென்று இப்போதே முடிவு கட்டி விடலாம்.

எலக்ஷன்கள் நடந்ததும் எதிர் அபேக்ஷகர் தனது திருப்திக்கும் தனது கட்சியார்களின் திருப்திக்கும் இம்மாதிரி ஆக்ஷேபங்கள் கிளப்புவதும்அநேகமாய் எங்கும் இயற்கையாகவே இருந்து வருகின்றது ஆனால் 100 க்கு தொண்ணூருக்கு மேற்பட்ட தேர்தல் ஆக்ஷேபங்கள் தோல்வி அடைந்தே வருவதும் சகஜமாகவும் இயற்கையாகவுமே இருந்து வருகின்றது எனினும் இம்மாதிரி சம்பவங்கள் வெற்றி பெற்றவர்களுக்கு வெற்றி மகிழ்ச்சி அடைய இரண்டு சந்தர்ப்பங்களையும் தோல்வி அடைந்தவர்கள் ஏமாற்றம் அடைய இரண்டு சந்தர்ப்பங்களையும்அளித்து வருவதும் அநுபவத்தில் கண்டதேயாகும். சுகமும் துக்கமும் மாரி மாரியும் தொடர்ந்து தொடர்ந்தும் வருவது இயற்கையேயாகுமன்றோ.

## எம். கே. ரெட்டி

உயர்திருவாளர் திவான்பகதூர் எம். கே. ரெட்டியவர்களும் செங்கல்பட்டு ஜில்லாபோர்டு தலைவராக மூன்றும் முறைதேர்ந்தெடுக்கப்பட்டார். என்கின்ற சேதியைக்கேட்க வாசகர்கள் மிகுதியும் மகிழ்ச்சி அடைவார்கள்.

திரு. எம். கே. ரெட்டி அவர்களின் ஜில்லா போர்ட்டு நிர்வாகமும் திரு பன்னீர்செல்வத்தின் நிர்வாகமும் பார்ப்பனரல்லாதார் சமூக நன்மையையும் சுயமரியாதைக்கொள்கையையே பெரிதும் தழுவி நடத்திவந்த காரணமே அவ்விருபோர்டு தலைவர் தேர்தலுகளும் சற்று எதிர்ப்பும் சூழ்ச்சியும் பலமாய் இருக்கநேரிட்டது ஆனாலும் அவ்விருபோர்ட் தலைவர்களும் மறுபடியும் தேர்ந்தெடுக்கப்பட்டதானது நமது இயக்கத்திற்கு வெற்றி என்றே சொல்லவேண்டும்.

---

கடவுளையோ கடவுள்களையோ வணங்க முற்பட்டது மானிடரது குற்றமாகாது ஏனெனில் ராஜாக்களும் புரோகிதர்களும் கற்பித்த சூழ்ச்சியாகும் அதுவே எல்லா இடங்களிலும் உண்மையை அடியோடு அழித்தது.

டேவிஸ்ரண்ட்

---

## கோவையில்
# மதுவிலக்கு கண்காக்ஷி.

(ஒரு நிருபர்)

30—3—30 தேதி பகல் 12 மணிசுமாருக்கு கோவைஜில்லா மதுவிலக்குக்கமிட்டியாரால் ஏற்படுத்தப்பட்ட மதுவிலக்குக் கண்காட்சியானது விக்டோரியா டவுன் ஹாலில் வெகு சிறப்பாக ராவ் பகதூர் சி. எஸ் ரத்தினசபாபதி முதலியார் எம். எல். சி. அவர்களால் திறந்துவைக்கப்பட்டது. ஸ்ரீமான் முதலியாரை ஸ்ரீமான்கள் எஸ். என். பொன்னே கவுண்டரும், ஜபகரனும் வரவேற்றார்கள். ஸ்ரீமான் குட்டி நாயக்கர் மாலையிட்டார் ஸ்ரீமான் முதலியார் கண்காட்சியைத் திறந்து வைக்கையில் கோவை நகரத்திலும் கோவை ஜில்லாவிலும் குடியை ஒழிக்கும் நிமித்தம் இப்போக்கொத்த கண்காட்சியை ஏற்படுத்தப்பட்டிருக்கிறதென்றும், அதனால் அநேக கெடுதல்கள் தேசத்திற்கும் மூளைக்கும் ஏற்படுகின்றன வென்பதை கண்காட்சியில் வைக்கப்பட்டிருக்கும் படங்களால் அறியலாம் என்றும், இவைகளையெல்லாம் பொது ஜனங்கள் பார்த்து கெடுதல்களை உணர்ந்து அக்கொடிய பழக்கத்தினின்றும் விடுபடவேண்டும் என்றும் கூறினார்; மற்றும் இந்தக் கண்காட்சியானது 3-ந் தேதி வரை டவுன் ஆலில் பொது ஜனங்களின் சௌகரியத்திற்காக வைக்கப்பட்டிருக்கும் என்றும் எல்லா நண்பர்களும் வந்து இதன் பலனை அடையவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டனர்.

நகரத்திலுள்ள சில கள்ளுக்கடைக்காரர்களையும், சாராயக் கடைக்காரர்களையும் ஸ்ரீ. முதலியாரும், மற்றவர்களும் கண்டுபேசி, ஞாயிற்றுக்கிழமை கடைகளை மூடவேண்டும் என கேட்டுக்கொள்ளுவதாகவும் தெரிகிறது. காட்சியைப் பார்க்க வருபவர்களுக்கு நீர்மோர், காப்பி. தேயிலைப்பானம் முதலியவைகள் 3 நாட்களும் கொடுக்கப்படும். இந்தக்கண்காட்சிப் பொருள்கள் சென்ட்ரல் சபையாரால் அனுப்பப்பட்டிருக்கும் ஓர் மோட்டார்வண்டியில் ஏற்றிக்கொண்டு சுற்றுப்பிரயாணம் செய்து கொண்டேயிருக்கும் ஜில்லாவின் பல பாகங்களுக்கும் சென்று கிராம மக்களுக்கு குடியின் கெடுதல்களைப் பற்றி போதிக்கப்படும்.

கண்காட்சியில், கர்ப்பிணிகள் குடிப்பதால் எவ்வாறு கர்ப்பத்தில் இருக்கும் சிசுக்கள் பலவீனமடைந்து நாளடைவில் இறந்து போகின்றன வென்றும், இருதயம் இரப்பை முதலியவைகள் எவ்வாறு க்ஷீண திசையை அடைகின்றன வென்றும் காட்ட திராவகத்தில் போட்டு வைத்திருந்தவைகள் வைக்கப்பட்டிருந்தன. மற்றும் குடித்தவர்கள் எவ்வாறு தரித்திர நிலைமையை அடைகிறார்கள் என்பதற்கு களிமண்ணால் செய்யப்பட்ட சித்திரங்களும், குடியின் கெடு

## பீ. எஸ். ஜி. அண்டு சன்ஸ் அறநிலைய மாணவர் விடுதி பூளைமேடு.

பி. எஸ். ஜி. அண்டு சன்ஸ் அறநிலைய விடுதியில் புதிதாக அலங்காரத்துடன் அமைக்கப்பட்டிருக்கும் கலாநிலையத்தில் சென்ற 29-3-30 தேதி கோயமுத்தூர் நீலகிரியைச் சார்ந்த கல்வி இலாகா அதிகாரியாகிய ஸ்ரீமான் டி. எஸ். கிருஷ்ணமூர்த்தி அய்யர் அவர்களின் தலைமையின் கீழ் மாணவர் சங்கத்தின் ஐந்தாவது ஆண்டு விழா மிகவும் சிறப்புடன் நடைபெற்றது. அவ்வமயம் உள்ளூரிலிருந்தும் கோவையிலிருந்தும் பல பெரியோர்கள் வந்து குழுமி யிருந்தனர். தலைவர் முன்னுரை முடிந்ததும் சங்கத்தின் அமைச்சர் வருஷாந்தர அறிக்கையை வாசித்தார். பிறகு மாணவர்கள் நடித்த "சந்தையிற் கூட்டம்" என்னும் தமிழிலுள்ள நாடகத்தைப் பார்த்தபின்னர், கல்வியிலாகா அதிகாரி அவசர நிமித்தமாக கோவைக்குச்சென்றனர். பின்னர், டெப்டி இன்ஸ்பெக்டர் திரு. டி. ஆர் இராஜரத்தினம்பிள்ளை அவர்கள் களிப்புடன் அக்கிராசனம் வகித்து பந்தயங்களில் வெற்றி பெற்ற விடுதி மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கலாயினர். கோவைத் தமிழ் தொண்டர் திருவாளர் டி. எஸ். பாலடே அவர்களும் லண்டன் மெஷின் உயர்தரக் கலாசாலை தமிழ் ஆசிரியர் திருவாளர் சொக்கலிங்கம் பிள்ளை அவர்களும் விநோதமான புத்திமதியைத் தரக்கூடிய "உண்மையான கல்வியும் அதன் பயனும்" விடுதி வாழ்க்கையும் அதனுடைய உபயோகமும் என்னும் தலைப்புகளைக் கொண்டு முறையே சொற்பொழிவுகள் நடத்தினார்கள்.

இரண்டாவது தடவை தலைமை வகித்த தலைவர் தமது முடிவுரையில் பி. எஸ். ஜி. அண் சன்ஸ் அவர்களையும்அவர்களுடைய உதாரண குணத்திற்கு புகழ்ந்து போசியதும் தவிர பூளைமேட்டிலுள்ள கலாசாலை கூடிய சீக்கிறம் ஒரு சர்வகலாசாலை ஆகலாம் என்று பொழிந்தனர், பிறகு பி. எஸ். ஜி. அண்டு சன்ஸ் அற நிலையக்கைத் தொழில் கலாசாலை அமைச்சர் திரு. வேணுகோபாலசாமி வந்தனம் கூறியவுடன் கூட்டம் கலைந்தது.

---

தல்களை விளக்கும் அநேக படங்களும் பழமொழிகளும் வைக்கப்பட்டிருக்கின்றன. ஏராளமான ஜனங்கள் ஆண்களும், பெண்களும் கண்காட்சியைப் பார்த்தவண்ணமாகவே இருந்து வருகிறார்கள். பிரசாரகர்களால் ஜில்லா சுகாதார உத்தியோகஸ்தருடைய உதவியைக்கொண்டு பிரசங்கங்கள் செய்யப்பட்டு வருகின்றன. ஜில்லாபோர்டு கூட்டத்துக்கு நேற்று வந்திருந்த அங்கத்தினர்கள் இக்காட்சியைப் பார்க்கவந்திருந்தார்கள். இதேமாதிரி ஏனையஜில்லா மதுவிலக்குக்கமிட்டியாரும் கண்காக்ஷிகள் ஏற்படுததினால் மதுவிலக்குப் பிரசாரம் கூடிய விரைவில் பலனளிக்குமென்று நம்புகிறேன,

# மதுவிலக்கு மகாநாடு.

---

ஈரோட்டில் நடக்கும் சுயமரியாதை மகாநாட்டை அனுசரித்து அந்த நாட்களிலேயே ஒரு மதுவிலக்கு மகாநாடு நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் விஷயம் நேயர்கள் தெரிந்திருக்கலாம். அம்மகாநாட்டுக்கு வரவேற்புக் கமிட்டி அக்கிராசனர் தமிழ் நாட்டு மதுவிலக்கு சங்கத் தலைவர் திருவாளர் காரைக்குடி செ. சின்னையா பிள்ளை அவர்களாவார்கள். மகாநாட்டின் தலைமை வகிக்க ராமநாதபுரம் ஜில்லா டெம்பரன்ஸ் பிரோபகாண்டாகமிட்டி (அரசாங்க மதுவிலக்கு பிரசாரக் கமிட்டி) தலைவர் திருவாளர் எஸ் ராமச்சந்திர சேர்வை பி. ஏ. பி. எல்., அவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். மற்றும் நமது மாகாணத்தில் உள்ள டெம்பரன்ஸ் கமிட்டித்தலைவர்கள் எல்லோரும் தங்கள் தங்கள் கமிட்டி பிரசாரகர்களை பிரசாரக கமிட்டியின் சார்பாய் அனுப்பிக் கொடுக்கும்படியாகவும் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள் அனேகமாய் இம்மகாநாட்டை சென்னை அரசாங்க மதுஇலாகா மந்திரி கனம் முத்தையா முதலியார் அவர்களே திறந்துவைக்க கேட்டுக்கொள்ளப்பட்டிருப்பதற்கு இணங்க ஒப்புக்கொள்ளுவார் என்றே கருதுகின்றோம்.

மற்றும் மதுவிலக்கில் முயற்சியுள்ள கனவான்களும் தொண்டர்களும் விஜயம்செய்து குறிப்பிட்ட கொள்கைகளைப்பற்றி பேசி தீர்மானித்து சீக்கிரத்தில் அமுலுக்கு வரத்தக்க காரியங்களை துவக்க உதவிசெய்ய வேண்டுமாய் வேண்டிக்கொள்ளுகின்றோம்.

---

## பார்ப்பன உத்தியோகஸ்தர்

கீழத் தஞ்சாவூர் டிஸ்டிரிக்ட் ரிஜிஸ்டரான, திரு. சீனிவாச வரதாசாரியார் என்பவர் தீ பார்ப்பனரல்லாத கிளார்க்குகள் சேர்ந்து குடி அரசு, திராவிடன், ஜஸ்டிஸ், ரிவோல்ட் பத்திரிகைகளைப் பார்த்து வருவதாகத் தெரிந்தவுடனே யார் பேருக்கு பத்திரிகை வந்ததோ அவரை உடனே வேறு ஒரு ஊருக்கும் மற்ற 3 பேர்களையும் தனித்தனி ஊர்களுக்குமாற்றிவிட்டார். என்ன இவரது மூடத்தனம். பார்ப்பனரல்லாத அதிகார வர்க்கத்தினர்கள் இந்தப் பத்திரிகை படிக்கும் பார்ப்பனர்களை மாற்றுவதில்லையே. ஆங்கிலேயர்கள் அரசாக்ஷிசெய்யும் காலத்திலும் இப்படி பார்ப்பன ராஜ்யமாக இருப்பதால் கீழ்தர அதிகாரவர்க்கத்தினர்கள் படும் துன்பம் சொல்லமுடியவில்லை. பார்ப்பனரல்லாத தலைவர்கள் என்கின்றமுறையில் அதிகாரம்பெற்ற கனவான்கள் இதைப் பற்றி கவனித்து தக்கது செய்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது என நாகை நாராயணசாமி எழுதுகிறார்.

பழநி சி. எம். சாமி,

# குருதாம்பிர பஸ்பம்

இது அபூர்வ சக்தி வாய்ந்தது. திமிர், குஷ்டம், மதமதப்பு குறைநோய், வீக்கம், பெருவயறு, மகோதரம், ஆனைக்கால், பவுத்திரம், கண்டமாலை, பீனிசம் சொரிகள், பத்துகள், தடிப்புகள், பிளவை, ஆராத குழிப்புண் முதலியசகல வியாதிகளையும் நீக்கும். அனுபவத்தில் கைகண்டது.

50 வேளை பஸ்பம் ரூபா 25. ஏழைகளுக்குப் பாதிவிலை.

ஏராளமான நற்சாக்ஷிகளை கேட்லாக்கில் பார்க்கலாம்.

அன்னிய நாட்டார் ரூ. 5 முன் பணம் அனுப்ப வேண்டும்.

சி. மலையப்பசாமி, நித்தியானந்த வைத்திய சாலை, பழநி.

# ஞானசூரியன்.

மக்கள், மூடநம்பிக்கையிலிருந்து விடுபடவேண்டுமானால், மூடப்பழக்க வழக்கங்களை ஒழிக்க வேண்டுமானால், இவற்றிற்கு அடிப்படையாகவுள்ள—கடவுளாலும், கடவுளைக் கண்டவராலும் சொல்லப் பெற்றவை என்னும் வேதம், சாஸ்திரம், புராணம், இதிகாசம், இவைகளிலிருந்து தோன்றிய ஜாதி வித்தியாசம், தீண்டாமை, பெண்பால் அடிமை, கடவுள் பெயரைச்சொல்லிப் பணம்பறிக்க ஏற்பட்ட பார்ப்பனக் கோட்டைகளாகிய கோயில்கள், பார்ப்பன ஆதிக்கமும் செல்வாக்கும் குறையாதிருக்க ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட மதங்கள், இருப்பார்க்கு புண்ணியம் சம்பாதித்துக் கொடுப்பதாயும், இறந்தார்க்கு மோட்சத்திற்கு நேர்வழி காட்டுவதாயும் ஏய்த்து, வயிர் வளர்க்க கையாளப்பெறும் புரோகிதம், முதலியவைகளின் ஆபாசங்களை மக்கள் உணரவேண்டும். உணர்வார்களானால் அஞ்ஞானத்திலிருந்து விடுபட்டு, மூடநம்பிக்கையிலிருந்தும், மூடப்பழக்க வழக்கங்களிலிருந்தும் தாங்களாகவே கரையேறுவார்கள்.

இவ்வுணர்ச்சியை மக்கட்கு உண்டாக்கும் பொருட்டே மூடிமூடி வைக்கப்பட்ட கடவுள் வாமெனப்படும் நூற்களின் ஆபாசங்களை நன்கு ஆராய்ந்த நுண்ணறிவாளர்களது துணைகொண்டு பல அறிவு விளக்க நூற்களாக மிகக் குறைந்த விலைக்கு வெளியிடக் கருதி—"குடிஅரசு பதிப்பகம்" என்னும் பெயரால் ஒரு வெளியீட்டுக்கழகம் நிறுவியுள்ளோம்.

முதலாவதாக "ஞான சூரியன்" என்னும் அரும்பெரும் நூலை 2000 காபிகள் அச்சிட்டு, அதன் முன் விலையின் பாதி விலையாகிய 0—8—0க்குக் கொடுத்தோம் சென்ற ஏழெட்டு மாதங்களுக்குள் அவ்வளவு பிரதிகளும் செலவாய் விட்டமையால் தமிழ்நாட்டில் அப்புத்தகத்திற்குள்ள மதிப்பை உணர்ந்து பொருள் நிலை இடந்தராத ஏழைகளும் வாங்கிப்படித்து பயனடையுமாறு 4000 பிரதிகள் அச்சிட்டு 0—4—0 விலைக்குத்தர முன்வந்துள்ளோம்.

செல்வம் படைத்த சீமான்களும் நமது இயக்கத்தில் நோக்க முள்ள அன்பர்களும் நூற்றுக்கணக்காக இப்புத்தகத்தை வாங்கி ஏழைகளுக்கும் மாணவர்களுக்கும் உதவுவார்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

பிரதி 1-க்கு விலை 0—4—0

தபால் செலவு வேறு.

## இராமாயணத்தின் ஆபாசம் 0—4—0.

முன்பணத்துடன் வரும் 10 புஸ்தக ஆர்டர்க்கு ஒரு புஸ்தகம்இனும்.

ஈ. வே. ராமசாமியின் சீர்திருத்த மகாநாடு சொற்பொழிவு 0—2—0

### கண்ணப்பர் வாசகசாலை இராயபுரம்.

3—3—30 தேதி மேற்படி வாசகசாலையின் பொதுக் கூட்டம் ஒன்று கூடியது வாசகசாலைக்குத் திருவாளர்கள் ஜே. எஸ். கண்ணப்பர், ஸ்ரீமதி டாக்டர் முத்து லட்சுமியம்மாள் திரு. வி. கனக சபை நாடார், பி. வி. சுப்பிரமணிய முதலியார், ஓ. ஜெ. சுந்திர நாயுடு, மிஸ்டர் ராட்டிக் ஸ்துரை, ஆகியவர்களைக்காப்பாளர்களாயும் திருவாளர்கள் பி. என். குருசாமி முதலியார், கொ. முருகேசம் எம். கெ. விஜயரங்கம் பி. எஸ். கதிர்வேலு, நாராயணசாமி, இவர்களை ஆதரவாளர்களாகவும், ஏற்படுத்தப்பட்டதோடு கூட்டத்துக்கு வந்தவர்கள் வாசகசாலைக்கு 'கார்ப்பரேஷனால் அளிக்கப்படுவதாயிருக்கும் நிலத்தைப்பார்த்து ஆனந்தித்து சிற்றுண்டி அருந்திய பின்னர் கூட்டம் இனிது கலைந்ததென வாசகசாலை காரியதரிசி எம். கே. ஆறுமுகம் தெரிவிக்கிறார்.

### புரோகிதமொழிந்த திதிகள்

நன்னிலம் தாலூக்கா 212 நெ. வட்டம் ஆர்ப்பார் திரு. பெ. ரா. பொன்னுசாமிப்படையாச்சி தன் தாயருக்கு 2-2 30 தேதியிலும் ஷை தாலூக்கா கள்ளுக்குடி திரு சோ. நடேசப்பிள்ளை தாயாருக்கு 1-2-30 தேதியிலும் ஆர்பார்வட்டம் வீ. சிவராமவன்னியார் தாயாருக்கு 24.2.30 தேதியிலும் ஷை யூர் ம. நா. சொக்கலிங்கம் படையாச்சி தாயாருக்கு 17 3 30 தேதியிலும் புரோகிதமில்லாமல் சுயமரியாதை இயக்கத்தின்படி திதி நடத்தி பல ஏழைகளுக்குப் உறவினர்களுக்கும் விருந்து நடத்தினார்கள் என்று ஆர்ப்பார், பெ. ரா. பொன்னுச்சாமிப் படையாச்சி எழுதுகிறார்.

## இங்கிலீஷ் ஸ்வபோதினி.

நூதன மாதப் பத்திரிகை-

ஆங்கிலத்தை எளிய நடையில் போதிப்பது. தமிழில் உச்சரிப்பும் அர்த்தமுங்கொண்டது. தேசச் செய்திகள், கதைகள், சம்பாஷணைகள் இலக்கணப் பகுதிகள், வியாபாரப் பகுதிகள், கோர்ட்டு செய்திகள், யாவும் அடங்கியவை. ஆங்கிலத்தை அறிந்து கொள்ள இம்மாத சஞ்சிகை இன்றியமையாதது.

ஆறுமாத சந்தா உள்நாடு ரூ. 1-0-0
,, வெளி நாடு ,, 1-4-0

சந்தாவை மணியார்டர் மூலம் அனுப்பி பத்திரிகையைப் பெறலாம்.

வி. என். ரங்கசாமி அய்யங்கார்
திருநாவுக்கரசு பிரஸ்,
ஆரணி, வட ஆர்க்காடு

## ஸ்ரீமுகம்.

தமிழ் நாட்டின் அஞ்ஞானத்தை அகற்றும் குடியரசுப் பத்திராதிபர் திரு ஈ. வெ. ராமசாமிப்பெரியார் அவர்களின் சமுகத்துக்கு:—

ஐயா!

2—3—1930 தேதி குடியரசுப் பத்திரிகை வரப்பெற்றோம் பக்கம் 10 ல் வெளிவந்த ஸ்ரீ ஜெகத்குரு சங்கராச்சாரியார் ஸ்ரீமுகம் எங்களின் கருத்தைக் கவர்ந்தபடியால் அதன் பொருளை நன்காராய்ந்து தங்களுக்கு எங்களின் பட்சமான பதிலையனுப்பமுன் வந்தோம்.

"ஜகத்குரு பீடத்திலமர்ந்து சமஸ்த மனுக் கோடிகளுக்கும் பிரமாணத்தை அளித்து வரும் பாரத சுவாமிகள் தங்களுக்கு நிருபமனுப்பியது மிகவும் கவனிக்கப்பட வேண்டிய விஷயமாகத்தானிருக்கிறது. பரோபகாரமும் கல்வித்திறனும், சநாதன தரும வழிப்பாடு வழுவாமையும் கால தேச வர்த்தமானங்களுக்கு இசைந்து நடக்குதலுமுடைய பெரியாரான அவர் தங்களின் தற்கால எழுப்பு தலைக் கொண்டாடித் தங்களைக்குடும்ப சமேதராய் இசீர் வதிக்கத் தமது குருபீடமான திருப் பீடத்துக்கு அழைத்திருப்பது சிலாக்கியத்தினுஞ் சிலாக்கியமே. தங்களுடைய பணிவிடைக்கு அருளுடன் "தக்க சகாயமும் அளிக்க வல்லவரான ஸ்ரீ பிரஸ்தா வித்தியானந்தநாதபாரத ஸ்வாமி சங்கராச்சாரியூ என்பவர்களின் இனிய உரையில் மனங்கனிவதும், பூரண நம்பகமுண்டாவதும் எப்படி என்று தான் யோசித்து வருகிறோம். ஒன்று அவர் தங்களுடைய இயக்கத்தில் கலந்து கொள்ள ஆசிக்கிறாரா? அல்லது இனிய உரையாடித் தங்களின் முற்போக்கை தடுத்துமுட்டுக்கட்டை போட முனைந்திருக்கிறாரா? அல்லது தங்கள் இயக்கத்தால் நமது தேச மக்களின் நாட்டுக்கும் வீட்டுச்குரிய நிஜமான விடுதலைக்குரிய பெருமாறுதல் நேரிடும்போது இச்சிறப்பு நம்மால்தான் நிகழ்ந்ததென்றும் பட்டங்கட்டிக் கொள்ள ஆவல் மூண்டு முன்நிற்கவந்தாரா? என்பதுதான் எமது கேள்விகளின் அடிப்படையாகும்.

அவரது குருப்பீடத்தில் தங்களுக்கு அநாதியாய்ச் சொந்தப் பாத்தியமுண்டென்று உயர்த்திக் கூறலும், 'நேரில்பார்க்க உற்சாகமூண்ட தக்க சகாயமளிக்க பரம்பரை குருக்களான இவர், பரம்பரை சிஷ்யரான தங்களை அழைப்பதில் தங்களுக்கு நம்பிக்கையுண்டா? சநாதனதர்மமானது அநாதியான தர்மந்தானு? அல்லது இடையிடையே சொருகப்பட்டு வந்த சூதுள்ள சூட்சிகளா? சநாதன தருமத்தை அடியோடு பெயர்த்தெறிந்து அது இருந்த இடமுந் தெரியாமல் அழிந்து சாம்பலாய்ப் போகவென்று கங்கணங்கட்டி சமர்புரியும் தொண்டர் குடியரசு பத்திரிகாதிபர் அன்னவருக்கு எவ்விதத்தில் நண்பரானூர்? நமது நாட்டைக் கெடுத்துப் பொய்களை மெய்யென்று விளங்கச் சொல்லி நமது தாய்நாட்டின் மக்களை நாய்க்குணம் படைக்கச்செய்து நம்மை நட்டாற்றில்விட்டு, நட்டைக் கொன்று நடுத்தெருவில் அலையச் செய்து தம்மைச் சிம்மாசனதிபதிகளாயிருக்கத் தக்க மாறுபாடும், தாறுமாறும் செய்துவந்தசங்கராச்சாரி மரபினர் எப்படி ஜெகத்குருவானூர்? அவரது பீடம் அமைந்த நாடுதான் மொத்த ஜெகமா? அன்னவர் தங்களின் கருத்தில் "பலமக்களாய் வணங்கிக் கொண்டாடப்படுகிறவராய் அமைந்த காரணம்யாது? சுருமகாண்டத்திலுள்ள அவரது தருமங்களை இனி தங்களுக்குப் பயிற்சிக்கப் போகிறாரோ? இவ்வளவு அநாதிகாலமாக தருமப்பீடத்தை வகித்து வந்ததில் அவர்கள் நமது நாட்டுக்கு ஈட்டிய நன்மைகள்தான் என்ன? இனி அவர்போன்றவர்களால் நேரிடத்தக்க பொது முயற்சிகள் ஏதேனுமுண்டா? உதிர்ந்த மலர்கள் எனனும் தலைப்பின்கீழ் தங்களாலும் பல பெரியோராலும் கூறப்பட்டுவந்தவெந்த மௌடீகத்திற்கு ஷை ஜகத்குரு மருந்து முறை அறிவாரா? அன்னவரின் தரிசனம் தங்களுக்கு ஆபத்தையும், சகல பாவத்தையும் விளைவிக்கக்கூடுமென்று நாங்கள் நம்பினுல் அது தவருகுமா? தற்காலம் எழுச்சியடையுந் தங்களின் இயக்கமானது தளற்சியடையுமேயன்றி வளர்ச்சி யடையாதென்றுல் அது விரோத மாமோ? ஆகமாட்டாதென்றே சர்வ சம்மதத்துடன் சாதிப்போம். ஆதலால் நண்பர்களின் விருப்பத்தை யறிந்து தாங்கள் குடும்ப சமேதராய் தரிசனஞ் செய்துவர விரும்புவது தங்களின் நண்பரான எங்களுக்கு ஆட்சேபனைக்கிடமானதென்றே பதிலனுப்புகின்றோம்.

அன்றி ஆதிமூலானபிராமணீயசூட்சிகளைநாங்கள்நினைவுகூர்ந்து, அதனுல் நமதுநாடு நசிவுற்று வருதலைக்கண்ணுற்று எங்களைக் கண்ணீர்கலக்கத்தக்க நல்லுணர்ச்சியை மூட்டிவரும் நீங்கள அதே சூட்சியின் இனிப்பைச் சுவைத்துப் பார்க்க வென்று விருப்பங் கொண்டது விந்தையிலும் விந்தையே ஆகும். நமது மக்களில் எந்தெந்த நன்மைகள் ஷை குருவால் ஆனவை? இல்லையென்றுல் நசித்துப்போன எந்தெந்த தீமைகள் ஷை குருவால் அகற்றப்படல் ஆகும்? என்பது தான் எங்களின் எளிய புத்திக்குப் புலப்படவில்லை. நமது தேசத்தின் பௌத்தமதம் வெளியேறினதும் சமணர் கழுவேறியதும் காலவறையில் தேய்ந்து உருவற்றுப் போனதும்' காலா காலத்தில் உபநிஷத்துக்களைக் கூட்டியுங் குறைத்தும் கேடு நடப்பித்தவர் யார்? ஆரிய சமாஜக் கோட்பாடுகளைத் தமது இலாபத்தின் பொருட்டு ஆதரித்துப் பதிவு செய்தவர் எவர்? எந்தக் கோயில் சந்நிதி க்ஷேத்திரஸ்தானங்களிலும் தங்களுக்கே தலைமை நிலைக்க உளவுகள் செய்து இன்னுள் வரையில் இனிது புசித்துக் குடித்துப் பூரித்திருப்போர் யாவர்? அன்னவரால் இனி நடைபெறப் போகும் புனிதமான நன்முயற்சிகள் என்னவாகும்? ஆகவே! ஒரு நோக்கமே திரு நோக்கமாய்க்கொண்ட தாங்கள் அன்னவரின்ஸ்ரீமுகதரிசனஞ் செய்ய நினைப்பது தீதென்றும், அது பூவலம் செய்தும் புத்திபுகலவல்ல வீரசிங்கமான தங்களுக்கு அடாதென்றும் யோசனை கூறுவதுடன் அவரைக்குறித்து ஏதேனும் நியாயமான மதிப்புத்தங்களுககுணடேனின் நமது நேயரான திருவாளர் கண்ணப்பர் கைவல்ய சுவாமி ஆகியவர்களையும் பிரதிநிதிகளாயனுப்பித்தல் மேன்மைக்கிடமாகுமென்றும் தெருவிக்கிறோம்.

தாங்கள் இன்னும் நீடியகாலம் ஜீவன், சுகம், பெலத்துடன் வகித்து தங்களாயுளில் கூடுமான சீர்திருத்த தொண்டாற்றி மக்கள் நலம்பெறச் செய்யவேண்டிய பொறுப்பு உங்களைச்சசர்ந்திருப்பதாய் நாஙகள் உணர்வதால் தாங்கள் ஆலோசிக்கும்படி குருப்பீடயாத் திரையை அத்தியந்த விஸ்வாசத்துடன் பகிஷ்கரிக்கின்றோம், என பெரியார் ரெவ்.ஜான் தைரியம், அண்டு., ஜி. ராஜகோபால் எழுதுகிறார்கள்.

---

# பூணூல் அணிவது முட்டாள்தனம்.

# பலபூணூல் கழட்டிசாம்பலாக்கப்பட்டது

## கோஷாமுறை ஒழிக்கப்பட்டது

## நம்பூதரிகளின் சீர்திருத்தம்

திருவாங்கூரிலுள்ள கிடாங்கர் என்ற விடத்தில் நம்பூதிரி வகுப்பினர் சீர்திருத்தத்துக்காக மகாநாடொன்று நடைபெற்றது அம்மகாநாட்டில் பூணூல் தரிப்பது அர்த்த மில்லாத காரியமென்றும் தற்கால நிலைமைக்கு அது ஏற்றதாக இல்லையென்றும், ஆகவே பூணூல் தரிப்பதை விட்டு விட வேணடு மென்றும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்துக்கு வந்திருந்த நம்பூதரிகள் பலர் உடனே தங்கள் பூணூல்களைக் கழற்றி அவ்விடத்திலேயே அவற்றைக் கொளுத்தி அதன் சாம்பலை வைதீகர்களுக்கு அனுப்ப வேண்டுமென முடிவு செய்து விட்டனர். கூட்டத்தில் ஸ்ரீமான் நாராயண நம்பூதரி பாட் அவர்கள் தலைமை வகித்தார்,

நம் பூத்ரீ ஸதிரீகள் அந்தப்புரத்திலிருப்பது வழக்கமானுலும, இக்கூட்டத்திற்கு நம் பூத்ரீ ஸ்திரீகள் ஏராளமாக வந்திருந்தனர். நம் பூத்ரீ ஸதிரீகளுக்கு மேனுட்டுக் கல்வி அளிக்கப்பட வேணடுமென்றும், கோஷா முறை கூடாதென்றும் ஸ்ரீமதி கே. திரௌபதி என்ற ஸ்திரீ ஒரு பிரசங்கம் செய்தார். நம் பூத்திரிகள் ஜேஷ்டர்கள், தவிரமற்றவர்களும் நம் பூத்திரிப் பெண்களை மணக்கலாமெனச் சட்டம் செய்யப்பட வேண்டுமென்று பலர் பேசினூர்கள். வாலிபர்கள் இந்தச் சீர்திருத்தத்தில் மிக்க தீவிரமாக இருக்கிறார்கள்.

---

## விதவைகளுக்கு சொத்துரிமை ஸ்ரீமான சாரதாவின் மசோதா

இந்து விதவைகளுக்குத் தங்களுடைய புருஷர்களுடைய சொத்தில ஒரு பாகம் கிடைக்கும் படி செய்வதற்காக ஸ்ரீமான் அரிவிலாச சாரதா இந்தியா சட்ட சபைக்கு ஒரு மசோதாக் கொண்டுவந்திருக்கிறார். அதன் நோக்கம்:—

இந்துலா வென்னும் இந்துக்கள் சட்டமானது ஸ்திரீகள் சம்பந்தப்பட்ட மட்டில் அதிர்ப்திகரமாகவும் அநியாயமாகவுமிருக்கிறது. இந்தச் சட்டத்தின்படி இந்து விதவைகளின் நிலைமை மிகவும் வருந்தத் தக்கதாயிருக்கிறது யாதொரு இந்து ஸ்திரீயும தன் தன் தகப்பனுருடைய சொத்தில் பங்கு எதுவும் பெருவதற்கில்லை. மேலும் அந்த ஸ்திரீக்குத் தன் புருஷனுடைய சொத்திலும் பங்கு எதுவும் கிடைப்பதில்லை. இந்து விதவைக்கு ஜீவனும்சம் பெற உரிமை இருக்கிறதே ஒழிய வேறே எவ்வித மான உரிமையும் கிடையாது.

அனுபோக முறையில் பார்த்தால் ஒரு விதவையானவள தாயாதைகளின் தயவை எதிர் பார்த்து வாழ வேண்டியிருக்கிறது. குடும்பத்துக்குறிய செல்வத்தையெல்லாம் அந்த விதவையின் புருஷனே சபாதித்து அவன் ஜீவதசையிலிருக்கும் போது அவள் சம்பத்துடனும் விசேஷபோகத்துடனும் வாழ்ந்திருந்த போதிலும் கூட அவன் இறந்துபோனவுடனே அந்தச்சொத்து முழுவதும் அக்தக்குடும்பத்தில் அப்போது ஜீவித்திருக்கும் புருஷர்களுக்குப் போய்விடுவதோடு அதுமுதல் அந்த விதவை ஜீவனும்ஸம் மட்டுமே பெருவதற்கு உரிமையுடையவளாகிறுள். ஜீவனும்ஸம் என்பது ஜீவனத்து அத்யாவசியமாய் வேண்டியிருக்கும் ஆகாரத்தையே குறிப்பதாகப் பொதுஜனங்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

ஆகையால் இனிமேல் இந்துவிதவைகளுக்கு குடும்பச்சொத்தில் ஒருபங்கு கொடுத்தும், இறந்துபோன அவர்களுடைய புருஷர்களுடைய சொந்த சொத்துக்கு அவர்களை மாத்திரமே சொந்தக்காரர்களாக ஏற்படுத்தியும் அவர்களுக்குப் பரிகாரம் செய்துகொடுக்க இந்த மசோதா சட்டம் செய்ய உத்தேசித்திருக்கிறது.

## நாஞ்சி நாட்டு வேளாளர்களின் கொடுமை.

(ஒழுகினசேரி சி. கே. ரா. எழுதுவது)

"தீண்டாமை ஒழிந்தபாடில்லை" என்ற தலையங்கத்துடன் சென்ற மாசி மாதம் 30 ம் தேதி வியாழக்கிழமை திராவிடனில் வெளியான வியாசத்தை நண்பர்களனைவரும் பார்வையிட்டிருப்பார்களென நம்புகிறேன். ஆனால் அவ்வியாசத்தை வரைந்தனுப்பிய நண்பர் எஸ். இராமசாமி என்பவர் எக்காரணம் பற்றியோ சிற்சிலவற்றை விரித்துரையாது விட்டுவிட்டமையால அன்னவரின் வியாசத்தைப் பின்பற்றியே நானும் இதனடியில் சிற்சில சூழ்ச்சிகளை நண்பர்களுக்கு ஞாபக மூட்டுகிறேன்.

பொதுஜன ஐக்கிய நாணய சங்கம் என்றால் நாஞ்சி நாட்டு வேளாள கமிட்டி மெம்பர்கள் தங்களது வீடுகள் என்றும் தங்களது இனத்தவர்களுக்கு மட்டிலும் தான் உரிமையுடையதென்றும் நினைத்துக்கொண்டார்கள் போலும்! என்னே இவர்களின் அறியாமை. பொது ஸ்தாபனமாகிய இச்சங்கத்தில் எல்லா வகுப்பினர்களுக்கும் உரிமையுண்டென்பதை எக்காரணம்பற்றி இவ்வவர்கள் மறந்துவிட்டார்களோ அறிகிலோம்.

இதுவரையிலும் மேல்படி சங்கமானது நாஞ்சி நாட்டு வேளாள மயமாகவிருப்பது போல் எக்காலமும் வேளாள ஆதிக்கமுடனும் செல்வாக்குடனும் நிலைத்திருக்க வேண்டுமென்ற சுயஜாதி வெறி பிடித்த மயக்கத்தால் ஒரு சமூக சகோதரருக்கு சேவக வேலை கொடுப்பதற்கு மறுத்த [illegible] காரணமானது போல் முறை [illegible]. நாஞ்சிநாட்டு வேளாள வகுப்பினர்களே இச்சங்கத்தில் எல்லா அலுவல்களுக்கும் நியமிக்கப்பட்டிருக்கிறது ஜாதி வெறி பிடித்தவர்களாகிய இவ்வவர்களின் சூழ்ச்சிதான் என்னே!

பொது ஜன ஐக்கிய நாணய சங்கமாகிய இந்த சங்கத்தில் தங்களது வகுப்பினர்களு[நாஞ்சிநாட்டு வேளாளர்கள்]க்கு மட்டிலுந்தான் உரிமையுண்டென்றும் வேளாளர்கள் தான் சங்கத்திலுள்ள எல்லா அலுவல்களுக்கும் தகுதியுடையவர்கள் என்றும் கருதி சங்க நிருவாகங்களை நடத்துவிப்பார்களேயானால் அது போல் மோசமான காரியம் வேறொன்றுமில்லையென்றே கூறுவோம். என்ன அழகான பெயர் பாருங்கள் இதுதானா பொது ஜன ஐக்கியம்?

எல்லா வகுப்பினர்களுக்கும் உரிமையுண்டென்று கமிட்டி மெம்பர்கள் கூற முன் வருவார்களேயானால் இதுவரையிலும் இதர வகுப்பைச் சேர்ந்தவர்களில் யார் யாருக்கு என்னென்ன வேலைகள் கொடுத்திருக்கிறார்கள்? என்பதற்கு பதில் கூற கமிட்டி மெம்பர்களாவது அல்லது சங்கத்தைச் சேர்ந்த வேறு யாராவது முன் வருவார்களா? இதர வகுப்பினர்களுக்கு உரிமையில்லையென்றும் நாஞ்சி நாட்டு வேளாள வகுப்பினர்களுக்கு மட்டிலும் தான் உரிமையுண்டென்றும் இப்பொழுதிருப்பது போல நாஞ்சி நாட்டு வேளாளமயமாகவே யிருக்கவேண்டுமென்றும் கூறுவார்களேயானால் இது ஒரு பொது ஜன ஐக்கிய நாணய சங்கம் என்ற முறையில் நடப்பதாக யாராவது கருத முடியுமா? என்று தான் கேட்கிறேன்.

கீழ் தர வகுப்பில் பிறந்தவர்களுக்கு வேலை கொடுக்கக் கூடாதென்று கூறினவர்களில் புத்தேரி திரு. பாண்டியன் பிள்ளை என்பவர் முதன்மையானவராவர்.

பொது ஸ்தாபனங்களில் வேலைக்கு ஆள் நியமிப்பது பாண்டியருக்கும் மற்ற கமிட்டி மெம்பர்களுக்கும் காப்பி, பலகாரம் முதலியவை வாங்கி கொடுப்பதற்கென்று தான் நினைத்து கொண்டார்கள் போலும்.

சுயமரியாதை இயக்கத்தலைவர் வைக்கம் வீரர் உயர் திருவாளர் ஈ. வெ. ராமசாமிப் பெரியார் அவர்களின் சுயநலங்கருதா உழைப்பினாலும் சுயமரியாதை வீரர்களின் அரிய சொற் பொழிவுகளினாலும் "குடி அரசு" 'திராவிடன்', முதலிய பத்திரிகைகளின் பிரசாரத்தினாலும், சமத்துவம் சகோதரத்துவம் என்ற உணர்ச்சியுடன் ஆங்காங்கு சீர் திருத்த மகாநாடுகள் கூட்டி வருவதன் பயனாகவும் தீண்டாமைப்பேயானது இருந்த விடமறியாது சுயமரியாதை வீரர்களாகிய மந்திரவாதிகளால் துரத்தப்பட்டு வருகிற இச்சமயத்தில் கூட தீண்டாமைப் பேயை தங்களது குல தெய்வமென நம் நாஞ்சி நாட்டு வேளாளர்கள் கருதி பொதுஸ்தாபனங்களிலும் தீண்டாமைப் பேயை நடனம் செய்விப்பார்களேயானால் அன்னவர்களின் அறியாமைக்காக நான் வருந்துகிறேன்.

அகில திருவிதாங்கூர் சமூகசீர்திருத்த மகாநாடானது சுயமரியாதை சங்கத்தாரின் ஆதரவின்பேரில் கெ... ன்ற மார்கழிமாதத்தில் அதிவிமரி


## "இராமாயணத்தின் ஆபாசம்."

### பாலகாண்டம்

உலகத்தில் ஒரு சமூகத்தை மற்றொரு சமூகம் ஆழ்த்தி வைப்பதற்குரிய சான்றுகள் ஆழ்த்தும் சமூகத்தால் காணப்படுவது வழக்கம். ஆனால் தமிழ் மக்களை மிருகங்கள் குரங்குகள், பேய்கள், இராக்கதர்கள், கொடியவர்கள், சூதுகாரர்கள் சோரம்புரிபவர்கள், கொலை நிகழ்த்துபவர்கள், அநாகரீகர்கள் வரன் முறை அற்றவர்கள், தாசி மக்கள், அடிமைகள், குருபிகள் என்ற வகையில் திரித்துக் கூற ஆரியர்கள் இராமாயணம் என்னும் ஒரு கட்டுக் கதையை வரைந்து, அது ஒரு மதியின் மிக்க ஆரிய முனிவனால் எழுதப்பட்டதென்று அதனைப் போற்றி, அண்ட முகடு முட்டும் வரையிற் புகழ்ந்து, அதற்கோர் மொழி பெயர்ப்புப் போன்ற கம்ப—இராமாயணத்தையும் வரைந்து இத் தென்னிந்தியாவில் புகுத்தியதும், இத் தென்னிந்திய மக்கள் தம் இழிவையே அடிப் படையாகக் கொண்டு வரையப்பெற்ற அந்த இராமாயணத்தை ஓர் இதிகாசம் என ஏற்று அதனை மெய்யென்று நம்பி அவ்விதிகாசக் கதாநாயக நாயகிகளைத் தெய்வங்களாக ஏற்றதும் வருந்தத் தக்கதோர் உண்மையாகும். அறிவுடைய திராவிட மக்கள் சூழ்ச்சியில் மிகுந்த ஆரியக் கதையாம். இராமாயணத்தை நம்பி பார்ப்பன வலையிற் சிக்கியதற்குக் காரணம், சிந்திக்குந் தோறும் எளிதில் தோற்றக் கூடியதாயில்லை.

என்றாலும் பொருள் காப்பாளன் அறிவிலும் வலியிலும் மற்றுமுள்ள எல்லாத் துறைகளிலும் மிகுந்த ஆற்றல் உடையவனாய் இருப்பினும், அறிவிலும் சீலத்திலும் குன்றிய ஓர் கள்வன், அப்பொருளை ஏகதேசம் கவர்ந்து செல்லுவது போல, அறிவுடைய நம் திராவிட மக்கள் இப் பார்ப்பன ஆபாசக் கதையாகிய இராமாயணக் கதையை ஏற்று மதி மோசம் போயினர். பார்ப்பன ஆட்சியை பத்துக் கோடிமுறை வலியுறுத்தினும், நாம் ஏமாற்றம் அடைந்தது அடைந்தது தான்.

எனவே, நம்மை இப்பார்ப்பனர்கள் இத்துறை வலையில் ஆழ்த்தி அவர் தம்நாகரிகத்தையும், ஒழுக்கத்தையும், கடவுள்களையும் நம்மவை என்று ஏற்று நடக்குமாறு செய்ததற்கு இத்தகைய கதைகளே சிவநாடிகளாய் இருக்கின்றன.

எனவே, நாம் நம்முடைய உண்மை நிலைமையை அறியவும், பார்ப்பனர்கள் நம்மைத் தாழ்மைப்படுத்த இன்றுவரை நம்மை அடார்ந்தரசுபுரியும் சூழ்ச்சி முறையைத்தெரிந்து அதனைக் கத்தரித்து சுயமரியாதை உணர்ச்சி படைக்கவும் இராமாயணத்தில் உள்ள ஆபாசங்களை 'இராமாயணத்தின் ஆபாசம்' என்னும் நூல் நமக்குக்கண்ணாடிக்கும் என்பதில் ஐயமின்று.

இந்நூல் மிக்க ஆராய்ச்சித்திறம் பொருந்திய ஆசிரியர் திரு, சந்திர சேகரப்பாவலர் அவர்களால் எழுதப்பட்டது. இதை வாங்கி வாசித்தா பார்ப்பவர்களுக்கே பார்ப்பனர்களின் இதிகாசப் புரட்டுகள் நன்றாய் விளங்கும்.

ஆதலின் உண்மை திராவிட மக்கள் தொடர்ச்சியாக நம் பதிப்பகத்தால் வெளியிடப்படும் 'இராமாயணத்தின் ஆபாசம்' என்னும் அரிய ஆராய்ச்சி நூலை வாங்கிப்படித்து உண்மை உணர்ந்து எதிரிகட்குத் தக்க ஆப்பிறக்குவது இன்றியமையாததாகும்.

பாலகாண்டம் நல்ல கிளேஸ் காகிதத்தில் சுத்தமான பதிப்பு விலை அணா 0—1—0 தபால் செலவு வேறு.

கிடைக்குமிடம்:— குடி யரசு பதிப்பகம் ஈரோடு.

...யாக நடைபெற்றதும், தீண்டாமையை ஒழிப்பதற்காக பொன்னே போல் போற்றத்தகுந்த பற்பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதும், சுயமரியாதை வீரர்களால் தீண்டாமையை ஒழியுங்கள், ஒழியுங்களென்று தொண்டைவற்ற அரிய சொற்பொழிவுகள் நிகழ்த்தியதும் சுவாமி விவேகானந்தரால் "பயித்தியக்காரர் நாடு" என்று கூறின கேரளநாட்டை சேர்ந்த—அதிலும் விசேஷமான நாஞ்சி நாட்டின் தலைநகராகிய-இந்நாகர் கோவிலில் வைத்துதானே இக்குறிய காலத்துக்குள்ளாக இவர்களது சித்தங்குறுகி விட்டது வியக்கத்தக்கதேயாகும். ஜாதியிரண்டொழிய வேறில்லை என்ற மூதுரையையும், தீண்டாமையென்னும் பேயே நம் தேசத்தின் சீர்குலைவிற்கு காரணமென்பதையும், இன்னவர்கள் உணராது போனது சுயஜாதி வெறிபிடித்த மயக்கத்தினாலும், ராமராஜ்யமாகிய இத்திருவிதாங்கூரில் பார்ப்பன ஆதிக்கமே நிலைத்திருப்பதுபோல் நாஞ்சிநாட்டில் வேளாள ஆதிக்கம் நிலைத்திருக்கவேண்டுமென்ற குறுகிய நோக்கத்தினாலேயுமாம்.

தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களுக்கு பொது ரஸ்தாக்களில் செல்லும் உரிமையளிக்க வேண்டுமென்று திருவிதாங்கூர் சட்டசபையில் கொண்டுவரப்பட்ட மசோதாவிற்கு சாதகமாக நம்பூதிரி ராஜவம்சத்தார் முதலானவர்கள் ஓட்டுச்செய்திருக்கையில் அதற்குப்பாதகமாக ஓட்டுச்செய்தவர்கள் நாஞ்சிநாட்டு வேளாள வகுப்பைச்சேர்ந்த இரு கனவான்களேயாவர் அவர்களில் ஒருவர் திரு. செல்லம்பிள்ளையாவர் என்னே இவர்களின் சூழ்ச்சி கேவலம் நாய். பன்றி, கழுதை, கோழி முதலிய ஜெந்துக்கள் போகக்கூடிய ரஸ்தாக்களில் ஆறறிவுபடைத்த மனிதர்கள் சஞ்சரிக்க உரிமையளிக்கக் கூடாதென்று பாதகமாக ஓட்டுச்செய்த இவ்விருகனவான்களைப்பற்றி என்ன சொல்வதென்பது எனக்கு விளங்கவேயில்லை. (இவர்களைப்பற்றி நண்பர்கள் திராவிடனில் பார்வையிட்டிருப்பார்களென நம்புகிறேன்) இவ்வித நடவடிக்கைகளில் சற்றேனும் மனிதத்தன்மையிருக்கிறதா? என்பதை வாசகர்களே நன்கு யோசித்துப்பாருங்கள். இதைவிட அருவருக்கத்தகுந்ததும் பகுத்தறிவற்றதுமான செயல் வேறொன்று முளதோ? பலகற்றும் அறிவிலாதார் என்பது இன்னவர்களைப்போன்றவர்களுக்கே தகும்.

பாமரமக்களை ஏமாற்றும் கெட்ட எண்ணத்துடன் கதர்துணியணிந்தும் அலங்கார பொம்மைகளைப் போன்று மூக்குக்கண்ணாடியணிந்தும். முற்றிலும் யோக்கியதையுடையவர்போல் நடித்தும், தாழ்த்தப்பட்ட சமூகத்தவர்களுக்கு நன்மை புரிவதே தங்கள் கடமையென்றும் வாய்வீரம் பேசித்திரிந்த இவர்களது ஜாலம் சாயமரியின் சாயம் வெளுத்ததைப்போல் போலி வேடச்சாயம் வெளுத்து உண்மை விளங்கி விட்டது ஆகையினால் இன்னவர்கள் தங்களது இந்திரஜால மகேந்திரஜால வித்தைகளையெல்லாம் ஒரே மூட்டையாக கட்டிக்கொண்டு எங்காவது மூலை முடுக்குகளை பார்த்து ஒதுங்கி வெளிவராமல் மெத்த நலமாயிருக்குமென்று தெரிவருகிறது (பெரும்பாலும் கட்சி நண்பர்கள் இன்னவர்களை சேர்ந்தவர்களாகையினால் இவ்விஷயத்தைப் பற்றி நண்பர்களுக்கு ஞாபகமூட்ட வேண்டியது அவசியமாயிற்று)

இனிமேலாவது நமது நண்பர்கள் வாய்வீரம் பேசும் கனவான்களை நம்பி மோசம் போகாமல், சுயநன்மையைக் கருதாமல், பிறர் நன்மையை பெரிதாக கருதி பாடுபடுகிறவர்களை இவ்வித பொறுப்புள்ள பதவிகளுக்கு தெரிந்தெடுக்குமாறு விநயபூர்வமாக கேட்டுக்கொள்ளுகிறேன்.

---


## முன்னேற்றம்.

இது

சுயமரியாதைக் கொள்கையை ஆதாரமாகக்கொண்டு சிங்கப்பூரிலிருந்து வெளியாகும் ஒரு தமிழ் வாரப் பத்திரிகை.

இதன் ஆசிரியர்-வே.சி.நாராயணசாமி இதன் வருஷசந்தா ரூ. 5-0-0 அல்லது மலாய் நாட்டு டாலர் 3.

விலாசம்:— மானேஜர்,
"முன்னேற்றம்"
152. செலிகிரோட், சிங்கப்பூர்.

## மேலோர் கூற்று

[illegible]!

விலை அணா 4.

சி. எ. அப்பாமுத்து
புஞ்சைப் புளியம்பட்டி,
கோயமுத்தூர் ஜில்லா.

# அசல் தாம்பர பஸ்பம்.

## மூன்றே வேளையில் குணம் தெரியும் குணமில்லாவிடில் பணம் வாபீஸ்

கொடிய ரோகமாயிருந்தபோதிலும் சரியே நமது அசல் தாம்பர பஸ்பத்தை 12 நாள் சாப்பிட்டால் போதுமானது மற்ற மருந்துகளைப் போல் நம்பிக்கையில்லாமல் நினைத்து தருவித்து சாப்பிடாமல் ரோயால் கஷ்டப்படாதீர்கள். நம்பிக்கையுடன் தருவித்து சாப்பிட்டு குணத்தை அடையுங்கள். நிச்சயமாய் குணமுண்டாகும்.

**சாப்பிடுங்கள்; கைகண்ட மருந்து**

குஷ்டம், குறை ரோய், தடிப்பு, திமிர், மதமதப்பு, செம்மேகப் பற்று, கருமேகபபற்றுக நுங் குஷ்டம், வெண்குஷ்டம், அரிப்பு நமைச்சல், கிரந்தி, ஆராத ரணங்கள், குழிப்புண்புரை, கண்டமாலை,பவுத்திரம் கன்னப்புத்து, யோனிப்புத்து குன்மம், சூலை முதலிய கொடிய வியாதிகளும், தீராதென கைவிடப்பட்ட இதரரோய்களும் அவசியம் குணமாகின்றன.

**உங்கள் கவலை தீர்ந்துவிட்டது**

உங்களைப்போலிருந்து கவலை ஒழித்த மனிதன் கூறுவதைக் கவனியுங்கள்

**நற்சாக்ஷி:** கோலாலம்பூர் கண்டங்கர்பு ரோட்டு பஜனை மடம், ஸ்கூல்மாஸ்டர், எஸ். குழந்தைசாமி பிள்ளை 31—10—1928 ல் எழுதுவதை பாருங்கள்..........ஐயா தாங்களனுப்பிய தாம்பர பஸ்பத்தை 12 நாள் என் மகனுக்குக் கொடுத்ததில் வளைந்திருந்த விரல்கள் நிமிர்ந்துவிட்டன. நெருப்புப் பட்டபோதிலும் தெரியாமல் சொரணையற்றிருந்த இடங்களில் சொரணையும் கை விரல்களில் கெட்டியும் உண்டாகி விட்டது.

12-நாள் சாப்பிடக்கூடிய அனுபானம் உள்பட ரூ. 15—0—0

# நீரழிவுக்கு

## 120 புடம் போட்ட கண் அடைக்கும் அப்ரேக் சிந்தூரம்

ஒரு மண்கலசத்தில் ஊசியினால் 7, 8. துவாரங்கள் போட்டு அது நிறைய தண்ணீர் ஊற்றி அதில் நமது அப்ரேக் சிந்தூரம் கொஞ்சம் போட்டால் தண்ணீரை ஒழுக விடாமல் நிறுத்தி விடும் இதைப்போலவே நீரழிவினால் ஜாஸ்தியோகும் நீரை நிறுத்தியும் நீரில் சர்க்கரையிருந்தால் மாற்றியும் நீர்ப்பெருக்கு, நீர்க்கசிவு, பிரமியம், சொட்டு மூத்திரம், தந்தி மேகம், நீடித்த வெள்ளை இந்திரியம் நீருடன் போவது, பவுந்திரம் முதலிய வியாதிகளை அதி சீக்கிரம் குணப்படுத்துவதில் அனுபவமுள்ளது. பரிட்சித்துபார்க்க வேண்டுமானால் 4 அணா ஸ்டாம்பு அனுப்பினால் சாம்பிள் அனுப்பப்படும்.

24 நாள் சாப்பிட்டால் போதுமானது 24 நாள் மருந்து ரூ. 20—0—0 12 நாள் மருந்து ரூ. 10—0—0

**அரண்மனை வைத்தியர் S T மாணிக்கம் பிள்ளை,**

ஆயக்குடி போஸ்டு, (Via.) திண்டுக்கல் S. I. R.

குறிப்பு: நம்மிடம் சகல வியாதிகளுக்கும் உயர்ந்த மருந்துகளிருக்கின்றன. மலாய் நாட்டு வாசிகள் மருந்துக்கு ஆர்டர் செய்யும் போது ரூபா 5 அட்வான்சு அனுப்பவேண்டும்.

## விபூதியின் இழிவு

(பயிந்தலோ, கு. ப. அழகப்பன் எழுதுவது.

இயற்கை யழகு கண்டு இன்புற்றிருந்த பழந் தமிழ் நாட்டிலே பார்ப்பனர்கள் காலடி வைத்த நாள் முதல் தமிழ் மக்களை அடிமைப்படுத்திய வற்றில் விபூதி பூசுதலும் ஒன்றாகும்.

மாட்டுச் சாணத்தைச் சுட்டு நீறாக்கி நெற்றி, கைகள், மார்பு, வயிறு முதலிய அங்கங்களில் பூசினால் மோட்சத்தை யடையலாமென்னும் குருட்டு நம்பிக்கையை தமிழ் மக்கள் இன்னமும் விடாமல் பழமை யென்று சொல்லி [விபூதி பூசியதில்யெத்தனைபேர் மோட்சத்தை யடைந்திருக்கிறார்களென்று யோசிப்பதும் கிடையாது. பார்ப்பனர்கள் யெழுதி வைத்திருக்கும் குருட்டுப் புராணங்களையும், இதிகாசங்களையும், சாஸ்திரங்களையும், வேதங்களையும் நம்பிக்கொண்டு அதில் சொல்லியிருக்கும் பொய்க்கூற்றுகளுக்கு தக்கபடியெல்லாம் ஆடுகிறார்கள்.

விபூதிப் பிரியர்களிடமும் காவி வஸ்திர மணிந்த தாடிப் பிரியர்களிடமும் விபூதி பூசுதல் எதற்கு? என்று கேட்டால் விபூதியானது சமயக் குறியென்றும் உருத்திர மூர்த்திக்குப் பிரியமான திருநீரென்றும் அந்த ஞானசம்பந்தர் அப்படிப் பாடியிருக்கிறார் இந்த மாணிக்கவாசகர் இப்படிப்பாடியிருக்கிறார் என்றும் சொல்லுகிறார்களே தவிர பகுத்தறிவுக்கு ஒத்த விடையைக்காணோம். ஐயா! இவ்வளவு மகிமை வாய்ந்த விபூதியானது மாட்டு மலம்தானே யென்று திருப்பிக்கேட்டால் முகம் ஒரு சுண்டைக்காயளவில் வந்து விடுகிறது. பதில் கிடையாது. நாஸ்திகரென்ற பட்டம் சூட்டுவதற்கு மாத்திரம் வாய் நலிகிறது.

ஒருவர் நோயுற்றிருந்தால் ஏதோ தெய்வப் பிசகாயிருக்குமென்றும் வைதீகக் குடுக்கை ஒருவரைக் கூட்டிவந்து நோயாளியின் நெற்றியில் விபூதியைப் பூசினால் தெய்வப் பிசகு தீர்ந்துவிடுமென்றும் சாமியாடி, கோடாங்கி விபூதி போட்டாலும் நோய் விலகுமென்றும் நம்பி பகுத்தறிவை உபயோகிக்காமல் செய்து கொண்டு வருகிறார்கள். விபூதியால் நோய் முதலியவை நீங்குமென்றால் நோயாளிகளுக்கு ஏன் சர்க்காரில் வைத்தியசாலைகள் யேற்படுத்தியிருக்கிறார்கள்? விபூதியால் நோய் தீருமென்னும் இரகசியத்தை மேல் நாட்டாருககுச்சொன்னால் வைத்தியசாலைகளில் செலவிடும்பொருள் மீதியாவதற்கு எவ்வளவோ நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருப்பார்கள்.

திருடப்போகும்போது போலீசாரிடம் அகப்படாமல் தப்பித்து வரவேணுமென்று தம் குல தெய்வங்களை வணங்கி விபூதி பூசிக்கொண்டு போகிறான் திருடன். தான் கோரிய பெண்ணை ஒருவருக்கும் தெரியாமல் கள்ளத்தனமாகப் புணர்ந்து இன்பந் துய்த்து வரவேணுமென்று விபூதியைப் பூசிக்கொண்டு போகிறான் காமுகன். தினமும் வாலிபர்கள் வந்து தன்னோடு கூடிக்கலந்து இன்பம் தருவதோடு பொருளையும் தரும்படியாக வணங்கி விபூதியைப் பூசிக் கொள்ளுகிறாள். விலைமாது. ஒவ்வொரு நாளும் வியாபாரம் விருத்தியாய் நடந்து நல்ல ஆதாயம் கிடைக்க வேணுமென்று விபூதியைப் பூசிக்கொள்ளுகிறான் வியாபாரி. இவ்விதமே ஒவ்வொருவரும் தம் தம் மனோரதம் நிறைவேறவேணுமென்று விபூதிபூசிக் கொள்ளுகிறார்கள். இவர்களையெல்லாம் பைத்தியக்காரர்களென்று சொல்லுவதைத்தவிர வேறுயென்னவென்று சொல்லுகிறது?

வீட்டில் நடக்கும் சுப, அசுப காரியங்களில் மாட்டுச் சாணத்தை பிள்ளையார் பிடித்து அதன் உச்சியில் அறுகம் புல் வைத்து அதையெல்லோரும் விழுந்து விழுந்து கும்பிடுகிறார்கள். என்னே மடமை! கேவலம் மாட்டுச் சாணத்தில் பிள்ளையார் வந்திருந்து வணங்குவோருக்கு சம்பத்தும் முக்தியும் கொடுப்பாரென்ற மூடத்தனத்தினால் தானே வணங்குகிறார்கள். ஐயோ அறியாமை! அறியாமை!! நாய் தின்னாத மாட்டு மலத்தை உயர் பிறப்பு மக்கள் வணங்குவதென்றால் இதனிலும் அறியாமை வேறுண்டா?

உலகில் உண்டாகிய வஸ்துக்களில் உலோகங்களும், கல்லும், மண்ணும், தவிர மற்ற வஸ்துக்களை நெருப்பில் போட்டு சுட்டால் நீறாகிவிடுகிறது. தண்ணீரை ஊற்றினால் கரியாகிவிடுகிறது. என் அவைகளுக்குகொஞ்சமேனும் மதிப்பில்லாமல்மாட்டுச்சாணத்தின் நீறுக்கு மட்டும் தனி மதிப்புயேற்பட்டிருக்கிறது? மாட்டு மலத்தின் மகிமையே மகிமை! புத்த பகவான், மகம்மது நபி, இயேசு நாதர் முதலியவர்கள் மாட்டுச் சாணத்தை தேகங்களில் பூசக்கூடாதென்ற பகுத்தறிவோடு தான் விளக்கியிருக்கிறார்கள். மகம்மதியர்கள் மாட்டுச் சாணத்தை மலம் என்ற அசங்கியத்தினால் வீடு வாசலைக்கூட மெழுகுவது கிடையாது. சைவ சமயத்தார்கள் என்னும் இந்துக்கள் மாத்திரம் விபூதி பூசினால் வினை தீருமென்ற குருட்டு நம்பிக்கையால் மாட்டு மலத்தாலாகிய விபூதியை குழைத்தும் குழையாமலும் நெற்றி, கைகள், மார்பு, வயிறு முதலிய இடங்களில் பட்டை பட்டையாகப் பூசிக்கொள்ளுகிறார்கள். அவ்விதம் பூசிக்கொண்டவர்களை ஒரு மேல் நாட்டுக் கிறிஸ்துவன் பார்த்தால் பைத்தியக்காரர்களென்று சிரிக்கக் கொஞ்சமும் பின்வாங்கமாட்டான். புலிகளுக்கு வரிக் கோடிருப்பது போல் இவர்கள் விபூதியைப் பூசிக்கொண்டு வருவதைப்பார்த்து தெருவில் விளையாடும் சிறு குழந்தைகள் புலிதானோவென்று நினைத்து அலரிப் பயந்தோடுவதை என் கண்ணால்பார்த்திருக்கிறேன்.

சுயமரியாதை இயக்கத்திலீடு படுவதற்கு முன் நானும் மாட்டுச்சாணத்தினாலாகிய விபூதியைப் பூசிக்கொண்டுதான் வந்தேன். சுயமரியாதையிலீடுபட்டதும் விபூதியைத்தான் முதலில் விலக்கினேன். அறியாமையில் ஆழ்ந்து கிடக்கும் தமிழ் மக்களைத் தட்டி யெழுப்பி சுயமரியாதை உணர்ச்சியை ஊட்டிவரும். நம் மாபெருந்தலைவர் வைக்கம் வீரர் இராமசாமிப் பெரியாருக்கும் அவர் தம் குடி அரசு”க்கும் தமிழ் மக்கள் நன்றி செலுத்த என்னாளும் கடமைப்பட்டிருக்கிறார்கள். மாட்டு மலமும் மூத்திரமும் சொர்கவாசலைத்திறந்துவிடுமென்னும் மூடத்தனம் நம் இந்தியாவை விட்டு யென்றுநீங்குமோ அன்றுதான் நாம்பகுத்தறிவு வாய்ந்த மனிதராவோம். பார்ப்பனீயம் வீழ்க! சுயமரியாதைவாழ்க.

## சாதிப்பட்டமும் சமயக்குறியும்

அறந்தாங்கித் தாலூக்கா இறையோன்பட்டி திரு. அ. நடராஜன் பிள்ளை யென்பவர் 3-3-30 ௳ முதல் மூடக்கொள்கையாகிய ஜாதிப்பட்டத்தையும்சமயக்குறியையும் ஒழித்து தமது பெயரை அ. நடராஜன் என்றே வைத்துக்கொண்டதாகத் தெரிவிக்கிறார்.

---


# குமரன் பிரைஸ் சீட்டு.

## குமரன் சந்தாதாருக்கு 500 ரூபாய் இனாம்

—0—

நாளிது தை 10 ௳ முதல் பங்குனி 30 ௳ வரை சேரும் புதிய சந்தாதாருக்கு மட்டும்

—0—

குறிப்பிட்ட தேதிக்குள் 500 சந்தாதாருக்குக் குறையாமல் சேரக் கூடுமென்றெதிர்பார்க்கப் படுகிறது. இந்த ஐநூறு சந்தாதாரிடம் வரு லாகும் தொகையிலிருந்து எடுக்கப்படும் 500 ரூபாவுக்குப் பின்வருமாறு பிரைஸ் கொடுக்கப்படும்.

| | | | |
|---|---|---|---|
| முதல் | பிரைஸ் | ரூ. | 100 |
| இரண்டாவது | ,, | ,, | 50 |
| மூன்றாவது | ,, | ,, | 25 |
| நான்காவது | ,, | ,, | 15 |
| ஐந்தாவது | ,, | ,, | 10 |
| 6 முதல் 65-வரை ரூ. 5 வீதம் சீட்டு 60. | | ,, | 300 |

நிபந்தனைகள்.

1. சுக்ல-௵ பங்குனி-௴ 30-௳க்குள் ஆபீசுக்குப் பணம் வந்து சேரவேண்டும்.

2. சுக்ல-௵ தை-௴ 10-௳ யிலிருந்து மேற்படி ௵ பங்குனி 30-௳ வரை முன்பணம் செலுத்திச் சேரும் வாரப் பதிப்பு ஜீவிய சந்தாதார்களும், மேற்படி பதிப்பு சாதாரண சந்தாதார்களும் சீட்டிற் சேர்க்கப் பெறுவர். சாதாரண சந்தாதார் ஒரு வருஷ சந்தாவுக்குக் குறையச் செலுத்தினால் சேர்த்துக்கொள்ளப் பெறமாட்டார்.

3. வி. பி. மூலம் சேரும் சந்தாதாரும் ஏற்கனவே இருந்துவரும் சந்தாதார்களும் இதிற் சேர்க்கப் பெற மாட்டார்கள்.

4. பிரமோதூத-௵ சித்திரை-௴ 1-௳ குமரனாபீசில் ஐந்து பிரமுகர்கள் முன்னிலையில் சீட்டுகள் குலுக்கி யெடுக்கப்படும்.

5. பிரைஸ் தொகையை நேரிலும் பெற்றுக்கொள்ளலாம். இல்லாவிட்டால் அவரவருக்கு மணியார்டர் கமிஷன் கழித்தும் பாக்கி நேரே அனுப்பிவிடப்படும்.

6. இந்த ஐந்து பேரிருந்து செய்யும் தீர்ப்பே முடிவானதாகும்.

7. பிரைஸ் கிடைத்தவர்கட்கும் மற்றவர்கட்கும் வழக்கம்போல் பத்திரிகை அனுப்பப்படும்.

8. புதிதாகச் சேரும் சந்தாதார் தொகை 500-க்கு மேற்பட்டால் சந்தா ஒன்றுக்கு ஒரு ரூபா வீதம் சேர்த்து பிரைசில் பணஈவு அதிகப் படுத்தப்படும். குறைந்தாலும் அப்படியே பிரைசில் பணஈவு குறைக்கப் படும். எப்படியானாலும் குறிப்பிட்ட 65-பேருக்குச் சீட்டு விழுதல் கூடும்.

8. பிரைஸ் பெற்றவர் விவரம் சித்திரை மாத முதல் வாரக் குமரனில் வெளியிடப்பெறும்.

மானேஜிங் டைரக்டர்,
தனவைசியன் கம்பெனி லிமிடெட்,
காரைக்குடி.

## குமரன் வாரப் பதிப்பு சந்தா.

| | | |
|---|---|---|
| உள் நாட்டுக்கு | ரூ. | 5—0—0 |
| வெளி நாட்டுக்கு | ,, | 6—0—0 |
| ஜீவிய சந்தா | ,, | 100—0—0 |

9ம் பக்கத் தொடர்ச்சி

ஆசிர்வாதம் தான் என்பார்கள். அப்படியானல் அது சுவாமிகளுடைய தரும சாஸ்திர விதியைத் தள்ளி ராஜாவின் தம்பி சமுத்திர யாத்திரை செய்ததின் பலனே குழந்தை உண்டானதிற்குக் காரணம் என்று யாராவது சொன்னால் பெரியவர்களைக் குற்றம் சொல்லுகிறார்கள் என்னும் குற்றத்தை அவர்கள் மீதுசுமத்துவார்கள்.

சுவாமிகளின் வசைப் பற்றி இவ்விதமான பிரசாரததால் மடத்திற்குப் பொருள் சேரவும் பல ஊர்களிலிருககும் பார்ப்பார்களுக்கு சமாரதனை விருந்து செய்யவும் ஏதுக்களாகிறதே யல்லாமல் நாட்டிற்கு வந்த நன்மையொன்றுமில்லையே. குடித்தனக்காரன் நீர் வசதியுடன் எருவு சேகரித்துக்கொள்ளத்தக்க உழவு வசதியும், பட்டதாரிகளின் வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீர்க்கப்பல தொழில் வசதியும், படிப்பில்லா மக்களுக்குக் கல்வி வசதியும், பட்டினி கிடப்பவர்களுக்குக் கைத்தொழில் வசதியும், திக்கற்ற குழந்தைகளுக்கு ஆதரிப்பு வசதியும், நோய் வாய்ப்பட்டவர்களுக்கு வைத்திய சாலை வசதியும், ஆகாரம் தேட சக்தியற்றவர்களுக்கு தர்ம அன்ன சத்திர வசதியும், அமைப்பதல்லவோ ஒரு நாட்டுக்கு க்ஷேமமான தீர்மானமென்று ஏற்பட்டால் இதற்குச் சுவாமிகளின் தவசு யாதொருவித நன்மையும் செய்ய வில்லை யென்பதை உலகமறியும்.

ஆசாரி சுவாமிகளும் இவருக்கு முன்னிருந்த குருபீடங்களும் நமது தேசம் க்ஷேமப்பட எத்தனையோகால மாக தபசிருந்து வந்ததாகவும் இப்பொழுதுமிருப்பதாகவும் சொல்லுகிறார்கள். நமது ஜனங்களுக்கு அனுபவத்திற்குத் தேவையான அறிவு குன்றியிருப்பதை நீக்க யாதொன்றையும் அவரது தவசு செய்யவில்லை. கையினால் தொழில் செய்வதைக் கண்டு அருவருத்தல் ஜாதியிலும் உள் மதக்கொள்கையிலும் இப்பர்கைக்கு மாறான பிரிவுகளும் வெளிதேச யத்திரை விலக்கல் குழந்தைகளுக்குக் கல்யாணம் செய்தல் பொதுவாக ஸ்திரீகளையெல்லாம் புத்திக் கூர்மை யடைய விடாமலும் அந்தகாரத்திலேயே அழுந்தும்படி வைத்தல் முதலிய ஜன சமூகத் தீங்குகளைப் போக்குவதற்குவேண்டிய உதவியும் சுவாமிகளது தபசு செய்யவில்லை. பழக்கத்தை அல்லது சம்பிரதாயத்தை யொட்டியும் மூட பக்தியை ஒட்டியும் நமது தேசத்தில் பல நூற்றாண்டுகளாகத் தகாத வெருப்புகளும் அவற்றின் கொடியதான உணர்ச்சியற்ற தன்மைகளும் ஒரே மாதிரியாக இருப்பதைப் போக்கவும் சுவாமிகளது தவசு ஒன்றும் செய்யவில்லை. பாமர ஜனங்கள் அறியாமையால் முழுகிக்கிடப்பதற்கும் பெண்கள் பயங்கரமான அந்தகார நிலையில் இருப்பதற்கும் அவரது தவசு ஒன்றும் செய்யவில்லை. மற்றும் "ஞான ஒளி எனக்கே சொந்தம்" "என் மூதாதையுடையது" எனக்கே உரித்தாக வேண்டும்" என்பதாக உயர்ந்த சாதிக்காரர்கள் கூறிக்கொண்டு எல்லா வழியையும் சாஸ்திரமென்னும் கட்டுப்பாட்டில் அடைத்துஞான ஒளியைத் தங்களுக்கேசொந்தமாக்கிக் கொள்ளும் பிரயத்தினத்தில் தத்துவமசியென்னும் சுருதியின் உயர்ந்த வார்த்தையான ஒன்றுபட்ட தன்மை என்னும் உணர்ச்சியை வாழ்க்கையில் சேர்த்துக்கொள்ளுவதை மறந்து கடவுள் யெல்லாருக்கும் பொது அவர் சொன்னவேதம் எல்லாருக்கும் உரித்தானது அதன் பயனை அடைவதற்கு எல்லாருக்கும் பாத்தியதையுண்டு என்னும் மேலான தருமங்களைக் கெடுத்து அதற்கு ஆசிகூறிக்கொண்டு பாமரமக்களை ஏமாற்றி அடிமைப் படுத்தவும் பணம் பறிக்கவும் தபசென்னும் வார்த்தை உபயோகப்பட்டதேயல்லாமல் தபசுவேறு என்ன நன்மையைச் செய்திருக்கிறது? தன்னயம் பொருந்திய உரிமைகளைக் காப்பதில் அதிகம் கருத்துச்செலுத்தி தமது குழந்தைகளுக்கு சமமான தாழ்ந்த வகுப்பினர்களிடம் காட்டவேண்டிய கடமைகளை விட்டுத் துஷ்ட மிருகங்களை வேட்டையாடித் துலைப்பது போல அவர்களைப் பலவித கொடுமைகளால் துன்புறுத்தி அன்னிய மதத்திற்கு ஓட்டி மீதமானவர்களையும் அடித்துத் துரத்தத் தபசு உபயோகப்பட்டு வருகிறதே யல்லாமல் சுருதி பலனற்றுப் போனது போல மறைந்து ஸ்மிருதியின் கொடுங்கோலைப் போக்கவும் விதிகளும் கர்ம காண்டங்களும் சேர்ந்த கர்ம காண்டமானது நமது சமூகத்தின் சக்தியை சப்பி விட்டதைத் தபசு தடுக்கவில்லையே? முன்னே செல்லவேண்டியவன் எப்போதும் பின்னால் பார்த்தபடியே நடந்து சென்றால் துக்கத்திற்கே ஆளாவான் என்பதையும் தவசு உணர்த்தவில்லை. நமது தேசத்தின் ஆகாயத்தை நிரப்பி யிருக்கின்ற தாழ்மை. தரித்திரம் துன்பம், துக்கம் இவற்றால் நமது ஜனங்களின் அழகு குன்றிப்போயிருப்பதைக்கவனிக்கத்தவசுக்குக்கண்ணில்லையே? உலகில் ஒரு மதமும் மானிட வர்க்கத்தின் பெருமையை இந்து மதத்தைப் போல அவ்வளவு உயர்ந்த படியில் போதிப்பில்லை. "உலகில் ஒரு மதமும் தாழ்ந்தோர் எளியோர் இவர்களுடைய கழுத்தில் இந்து மதத்தைப் போல ஏறி மிதிப்பதில்லை." என்று சுவாமி விவேகானந்தர் சொன்னதற்கு தவசு மௌனம்தானே சாதிக்கிறது. நம் தேசமான அழகிய பூமியில் ஊர்ந்துகொண்டு ஒருவரை ஒருவர் சமயத்தாலும் ஜாதியாலும் உயர்வு தாழ்வு கற்பித்துக் கொண்டு ஒருவரை ஒருவர் இம்சை செய்வதற்கே முயற்சி செய்துகொண்டிருக்கிற முப்பதுகோடி ஜனங்களையும் உலக முழுவதும் சிந்தனையுடன் பார்க்கின்றதென்பதைத் தவசு அறியவில்லை. என்பவைகளை யெல்லாம் சுவாமிகளிடம் தெரியப்படுத்துங்கள்.

எளியவர்கள்போஷிக்கப்படுவதற்கு வழிகளை உண்டுபண்ண வேண்டும். கல்வி பரப்பப்பட வேண்டும், வைதீகக்கொடுமை மூழ்கப்படவேண்டும் வைதீகக் கொடுமை மகூடாது. சன சமூகத்தில் கொடுமை கூடாது.வைதீகக் கொடுமையாலும் நிஷ்டூரத்தினாலும் பலமாய்ப் பீடிக்கப்பட்டு கீழே விழுந்து கிடக்கும் நமது தேசத்து லட்சக் கணக்கான ஜனங்கள் மேலெழும்பி வருவதற்கு அவர்களிடத்தில் இரக்கம், அவர்களது பசித்த வயிற்றிற்கு ஆகாரத்தை உண்டுபண்ண வழிகள் இவைகளில் சுவாமிகளின் புத்தி செல்லவேண்டுமென்றும் பொது ஜனங்களுக்கு அறிவை அளிக்கவுக்கு நமது நாட்டு உயர்ந்த ஜாதிகளின் முன்னோர்களின் கொடுமையினால் மிருகப் பிராயத்திற்கு வந்திருக்கப்பட்டவர்களை மனித ராக்குவதற்கும் சுவாமிகளின் தவசு உபயோகப்பட வேண்டுமென்றும ஆச்சாரி சுவாமிகளிடம் சொல்லி வாருங்கள்.

இப்பொழுதிருக்கும் ஆச்சாரி சுவாமிகளும இதற்கு முன்னிருந்த ஆச்சாரி சுவாமிகளும் செய்த தவசும், பூசையும், வழங்கின காணிக்கையும் குரு பீடத்திற்கும் அந்த சிஷ்யர்களுக்கும் மற்றெல்லா நமது ஜனங்களுக்கும் உபயோகமாயிருந்தால் உபயோகப்படுமென்று நினைத்தால் சுவாமிகளைப் போஷித்து மடத்திற்கு மானியம்விட்டு சுவாமிகளின் கூட்டமான பார்ப்பார்களுககு பூரி தெட்சிணை தானதருமம முதலியவைகளை தினமும் ஏதேஷ்டமாகச் செய்து சங்கரர் மடத்தைக் குரு பீடமாகக் கொண்ட மைசூர்மகாராஜாஜதர் அலி படை எடுப்பில் அலங்கோலப்பட்டு அடிமையானதும் அவர் மகன் டிப்பு சுல்தான் அவர்களுடைய ஆதிக்கத்தில் எல்லாம் வந்துவிட்டதற்குக் காரணம் என்ன? குருகடாக்ஷ மெங்கே? சாரதா அம்மன் சக்தி என்னவாயிற்று? பார்ப்பானுக்கே கொடுக்க வேண்டுமென்ற வேதக் கடவுள் வாக்கின் புண்ணியம் பலித்ததா? கடவுள் பார்ப்பாருக்கே மந்திரம் செபிக்க வேண்டுமென்று கொடுத்த சக்தியும் தவசின் மகத்துவமும் ஒரு சோல்ஜரின், [சிப்பாயின] மன வலிவிற்கு முன்னால் ஏன் மண்டிபோட்டுவிட்டது? உண்மையான மந்திரம், சக்தியமான தபசு சனசமூகததினிடம் அன்பான இரக்கம், கடமையான தேவபூஜை ஆகியவைகள் மக்களுக்குப் பயனளிக்காமல் வீணாய்ப் போய் தோல்வியடையுமா? தோல்வியடைந்ததற்குத்தான் காரணமென்ன? சமயத்தில் ஆஷாடபூதி வேஷம், மதத்தில் அந்தரங்கச் சுபாவம், பித்தலாட்டம், தவசில் வெறும் ஏமாற்றப் புரட்டு, இவைகளும் இவைகளால் செய்த கொடுமைகளும் தான் காரணம் என்று சொல்லுவது உண்மையல்லவா?

சுவாமிகளின் பூசையையும் தவசையும் அவருக்கு அளிக்கும் காணிக்கைகளையும் நமது தெய்வங்கள் ஏற்றுக்கொண்டிருந்தால் அந்தத் தெய்வங்கள் சுவாமிகளையும் சிஷ்ய கோடிகளையும் கைவிடுமோ? அதற்குப்பின் வெள்ளைக்காரர்களான அன்னியமதஸ்தர்களும் அவர்கள் தபசும் கைகொடுத்து தூக்கிவிட்டு சுதந்திரத்தை உண்டுபண்ணும் படியாகச் செய்திருக்கிறது என்பது உண்மைதானே. இந்த நிலைமையிலிருக்கும் இந்த இருபதாம் நூற்றாண்டின் நூதன சாஸ்திரீகர்களுடனும் வேலையாளருடனும் ஐரோப்பா அமெரிக்கா முதலிய கண்டங்களுடனும் தற்காலம் போராட்டம் செய்வதினின்றும் நமது தேசமும் நாமும் தப்பவேண்டுமானால் சுவாமிகளின் தபசு உபயோகப்படாதென்றும் இந்த மாதிரி சந்தர்ப்பங்களுக்குத் தகுந்தபடி நடந்து கொள்ள சுவாமிகளின் சிஷ்யகோடிகளை வற்புறுத்த வேண்டுமென்றும் சுவாமிகளிடம் தெரியப் படுத்தும்படியாய் கேட்டுக் கொள்ளுகிறேன்.

---

## ஆதிதிராவிடர் மஹாநாடு.

இம்மஹாநாடு ஏப்ரல் மாதம் 16, 17, தேதிகளில் ரங்கூன் ஹந்தவாடி ஜில்லா, தையானில் திரு ஆர். வி. சுவாமிநாதன் அவர்கள் தலைமையின் கீழ் நடைபெறும்.

சுவாமி சோமசுந்திரம் அவர்கள் மஹாநாட்டைத் திறந்துவைப்பார் திரு. சு. நா. சுந்திரமுதலியார், வறவேற்புக்கழகத் தலைவராகவும், திருவாளர்கள், கருப்பன். வீரப்பன். கந்தன், மாயன், கரடி, நெரிஞ்சிக்குழியான், நடுப்பன் பரிக்கூடத்தான், பொன்னுசாமி ஆகியவர்கள் வரவேற்புக்கழக அங்கத்தினர்களாவார்களென்று காரியதரிசி எம். கருப்பையா தெரிவிக்கிறார்.


## பொம்மையா

வாசனைகளில் சிறந்தது எது பொம்மையா செண்ட்டே இது அதிக வாசனையுள்ளது உலகமெங்கும் புகழ் பெற்றது. பரீக்ஷை செய்து பாருங்கள் குணம் இல்லாவிட்டால் பணம் வாபீஸ் இதைப்பற்றி நாம் அதிகமாக கூறவேண்டியதில்லை ஆர்டர் செய்து பாருங்கள்.

வெளிநாட்டினர் 10 அணு தபால் செலவுடன் முன் பணம் அனுப்பவும்

3-அவுன்ஸ் செண்ட் பாட்டில்

1-க்கு ரூ. 2—4—0

தலைக்குப்போடும் வாஸலீன்

பாட்டில் 3-க்கு ரூ. 2—4—0

மு. கன்னார்

ராலிவதிகனி நிலையம்

மவுண்ரோட் போஸ்டு

சென்னை

---

SIVARAMA VILASPRESS, ERODE

திரு. ஈ. வெ. ராமசாமிப்பெரியாரின் உருவப்படம் போட்ட டிம்மி 1/8 சைஸ் லெட்டர் பேப்பர் 100 கொண்ட புக் ஒன்றுக்கு,

உள் நாட்டிற்கு ரூ. 1—8—0

வெளிநாட்டிற்கு ரூ. 2—8—0

முன்பணம் தேவை,

விலாசம்:— தபால்செலவு இம்ரும்.

சிவராமவிலாஸ் பிரஸ் ஈரோடு S. I.

# தாது புஷ்டிக்கு

## தங்கபஸ்பம் மகாமன்மத காமகேசரி சாலாமிசிரி அல்வா.

### இழந்துபோன ஆண்மையைத் திரும்பக்கொடுக்கும் இல்லற வாழ்க்கையில் இன்பத்தைக் கொடுத்து தாதுபுஷ்டியை உண்டாக்குவதில் இதற்கு மிஞ்சின ஒளஷதமில்லை.

மேக ரோகம் கொடிய வியாதி இல்லாதவர்கள் தாதுபுஷ்டி, சரீரநிடம் அடைய தங்க பஸ்பத்தையும் அனுபானம் மகாமன்மத காமகேசரி அல்வாவில் சாப்பிடவும். காமகேசரி அல்வாவும், தங்கபஸ்பமும் 100-நாள் மருந்து ரூபாய் 50. 50-நாளைக்கு ரூபாய் 25. 26-நாளைக்கு ரூபாய் 12—8—0

## கிருஷ்ணலீலா காமகேசரி குளிகை

### தாதைக்கட்ட இதற்கிடு ஒன்றுமில்லை.

பிரபுக்களுக்கு 100 குளிகை ரூபாய் 20. மற்றவர்களுக்கு 100 குளிகை ரூபாய் 10.

### ஒரு அஸிஸ்டென்ட் ஸர்ஜன் புகழ்வதைக் கவனியுங்கள்

தங்களின் அருமையும் பெருமையுமான தங்கபஸ்பமும் சாலாமிசிரி லேகியமும் எனது நோயாளி ஒருவருக்குக் கொடுத்தேன். அவரின் எத்தனையோ விதமான நோய்கள் பஞ்சு போல் பறந்து போய் விட்டது. இப்பொழுது அவர் நல்ல திடதேகியாய் இருக்கிறார். ஆகையால் அடியிற் கண்ட மருந்துகளை அனுப்பவும். தாம்பர பஸ்பம் 802 வேளை ரூ. 40. தாளிசபத்திரி சூரணம் 40-வேளை ரூ. 5. நரசிங்க லேகியம் தங்கபஸ்பம் ரூ. 50. தபால் செலவு ரூ. 2 ஆக ரூ. 97-க்கு வி. பி. செய்யவும்.
19—1—25

ம ள-ள-ஸ்ரீ வைத்திய ஆசிரியரவர்களுக்கு தங்களின் மருந்துகள் யாவும் நோயாளர் யாபேருக்கும் சுகத்தையும் மனதிருப்தியையும் கொடுத்திருக்கின்றது. தங்கள் மருந்துகளின் அருமையையும், பெருமையையும் நான் அநேகக்கு அனுபோக அத்தாட்சியுடன் எடுத்துக்காட்டியிருக்கிறேன் தங்கள் மருந்துகளுக்கு சர்டிபிகேட் தேவையில்லை. மருந்துகள் தாமே தங்கள் பெயரை எங்கும்விளங்கச் செய்கின்றது. ஆகையால் தாம்பர பஸ்பம், நரசிங்க லேகியம், பவள பஸ்பம், தங்க பஸ்பம் இவைகளை வி. பி. செய்யவும். (ரூ. 238—0—0-க்கு) வி. பி. பார்சலில் அனுப்பியிருக்கிறது

P. Nagalingam Hospital, C/o District Hospital, Kualaselenger.

## புத்திர சந்தான மகிமை

ஐயா, எனது நண்பர்களில் ஒருவர் ஆண் சந்தானம் சிறிதுமின்றி மனவருத்தத்துடனிருந்தார். அநேக வைத்தியர்களால் கொடுக்கப்பட்ட பல மேல்பூச்சு மருந்துகள் உபயோகித்தும், அநேக மருந்துகள் சாப்பிட்டும், கொஞ்சம்கூட குணமாகவில்லை. தங்கள் மேன்மை பொருந்தியதும், உயர்ந்த பலனைக் கொடுக்கக்கூடியதும், மதிப்பிட முடியாதது மான தங்க பஸ்பம், மகாமன்மத காமகேசரி சாலாமிசிரி அல்வா 50-நாள் மருந்தும், கிருஷ்ணலீலா காமகேசரி குளிகை 100-ம் தருவித்து 15 நாள் சாப்பிட்டதில் பெருமை பாராட்டத்தக்க புதிய சக்தியையும் 10 மடங்கு ஆண்மையையும் கொடுத்து விட்டது. மேற்படி வியாதியஸ்தர் பூரா மருந்தையும் சாப்பிட்டதில் தனது இழந்துபோன ஆண்மைத்தனம் பூராவையும் பெற்றுவிட்டார். இப்பொழுது ஒரு ஆண் குழந்தையை அடைந்திருக்கிறார். தங்கள் ஞாபகச்சின்னமாக அக் குழந்தைக்கு "வேலுசாமி" என்கிற தங்கள் நாமத்தையே சூட்டி அழைத்து வருகிறார்.

10—1—29 V. S. NATANAM, Sub Inspector of Police, South Arcot Dt.

## வைத்திய ஆசிரியர்:

## ஆர். எம். கே. வேலுசாமி பிள்ளை,

தந்தி விலாசம் "வேலுசாமி" பழனி. சித்த வைத்தியசாலை, பழனி. S I Ry

## குடி அரசு புத்தகாலயம்.

| | |
|---|---|
| மேயோ கூற்று மெய்யா பொய்யா | 0—4—0 |
| ஞானசூரியன் ... | 0—4—0 |
| இராமாயணத்தின் ஆபாசம் பாலகாண்டம் | 0—4—0 |
| மனு நீதி மருமம் ... | 0—2—0 |
| இராமலிங்க சுவாமி பாடல் திரட்டு. ... | 0—2—0 |
| சுயமரியாதைத் தாலாட்டு. ... | 0—2—0 |
| சோதிடப் புரட்டு. ... | 0—2—0 |
| திருக்குறள் 1330 குறளுக்கு உரையுடன் ... | 0—8—0 |
| திரு ஈ. வெ ராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டு சொற்பொழிவு ... | 0—2—0 |

8 அணுவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது, 5 ரூபாய்க்கு மேற்பட்ட ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.


**மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,**

ஈரோடு



இதுவரையில் தமிழில் வெளிவராத புஸ்தகம்

"மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும் அதன்



அநுபோகப்பயிற்சிமுறையும்.

விலை ரூபா 1--8--0

(தபால் சார்ஜ் -வேறு)

வெளிநாட்டு ஆர்டர்களுக்கு

முன் பணம் அனுப்ப வேண்டும்.

மோட்டார் ஸ்கூல் (1916-ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது)

இங்கு 3 மாதத்தில் மோட்டார் டிரைவிங் அண்டு மெக்கானிஸம் கற்றுக் கொடுத்து கவர்ன்மெண்ட் லைசென்ஸ் வாங்கிக் கொடுக்கப்படும்.

தென் இந்தியா மோட்டார் இஞ்ஜினீரிங் ஒர்க்ஸ்,

(11) மைலாப்பூர், சென்னை



நிமிஷ க்ஷணத்தில் குணமடைவதைவிட்டு ஏன் கவலைப்படுகிறாய்?

அபூர்வ சிகிச்சை! இதை—சாதனை செய் ஆச்சரிய நிவர்த்தி!

## சுவாச காச நிவாரணி.

ஆயிரக்கணக்கான பேர்கள் குணமடைந்திருக்கின்றனர். சுவாச காச ரோகத்தினால் நுரையீரல், சுவாசக்குழல், மார்பு இவைகளில் உண்டாகும் கபம், இருமல், இளைப்பு, சீதளம், மார்ச்சளி, நெஞ்சுவலி, கஷ்டசுவாசம், மூக்கடைப்பு தொண்டையில் உண்டாகும் இரைச்சல், அடைப்பு, கரகரப்பு, எரிச்சல், வலி, புண் முதலியவற்றையும், சாதாரண ஜலதோஷம், தும்மல், பீனிசம், வாயிலும் நாசியிலும் நீர்வடிதல், குழந்தைகள் மார்ச்சளி முதலியவைகளையும் நமது ஆஸ்தமா பௌடர் உபயோகித்த அந்த நிமிஷத்திலேயே நிவர்த்திசெய்வதுடன் இரத்தத்தை சுத்திசெய்தும் கெட்டியான கபத்தை இளகச் செய்தும், கபத்தை வெளியில் தள்ளியும், சுலபமாய் மூச்சு விடும்படியாயும், தாராளமாய்ப் பேசும்படியாயும், பசி தீபனத்துடன் ஆகாரம் உட்கொள்ளும்படியாயும் இராத்திரியில் நன்றாய் அயர்ந்து சுகமாய் நித்திரை செய்யும்படியாயும் செய்கிறது. 48 நாள் ஒரு மண்டலம் உபயோகிக்கக் கூடிய டின் 1க்கு 1-4-0. தபால் கூலி அணா. 4. ஒரு டஜன் டின் விலை ரூ. 9—0—0

6 டின் விலை ரூ. 5—4—0 3 டின் விலை ரூ. 3—0—0.

*F. M. S.* முதலிய ஊர்களுக்கு முன்பணம் ரூ. 2—8...0.

இல்லாத ஆர்டர்களை கவனிக்கப்படமாட்டாது.

புரொப்ரைட்டர், திருநாவுக்கரசு மேடிகல் ஹால்,

அங்காளம்மன் கோவில் தெருவு, செவ்வாய்ப்பேட்டை, சேலம். S.



## நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்

(1919-ல் பம்பாயில் ஸ்தாபிக்கப்பட்டது)

சேர்மன்:—

**சர்: டோராப் ஜே டாட்டா. Kt.**

மூலதனம்:

| | |
|---|---|
| அனுமதிக்கப்பட்ட மூலதனம் | ...ரூ. 6,00,00,000. |
| பதிவு செய்யப்பெற்ற ,, | ... ரூ. 3,56,05,275, |
| வசூலான ,, | ... ரூ. 71,21,055. |

இதைப்பற்றி 1929 ஜூன் மாதம் வெளிவந்த "இந்தியன் இன்ஷியூரன்ஸ்" பத்திரிகை பின் வருமாறு கூறுகிறது: "நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி இந்தியாவிலே மிகவும் பெரிய ஜெனரல் இன்ஷியூரன்ஸ் கம்பெனியென்று ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. மூலதனத்தை கவனித்தால் அது உலகத்திலுள்ள பெரிய இன்ஷியூரன்ஸ் கம்பெனிகளில் ஒன்றென்று கூறிக்கொள்ள அதற்கு உரிமை உண்டு."

ஏஜெண்டுகள் இல்லாத இடங்களில் உயிர், நெருப்பு, மேரைன், மோட்டார்கார், விபத்து முதலிய பலவித அஷ்யூரன்ஸ்களுக்கும் ஏஜென்சிகள் கிடைக்கும்.

பிராஞ்சு மானேஜர்,

4, முதல் லைன்பீச், சென்னை.



## தமிழரசு.

### ஒரு புதிய அரிய வாரப் பத்திரிகை.

(சித்திர வர்ணப்படங்களுடன்)

உலக முழுவதும் நடைபெறும் அரிய இனிய நிகழ்ச்சிகளை உள்ளபடி உணர்த்தும்; அறிவை வளர்க்கும். பெரிய உண்மைகளை அழகிய முறையில் தெள்ளிய செந்தமிழ் நடையில் நன்கு புகட்டும். அரசியல் துறையில் தனக்குத் தோன்றியவற்றை அவா அச்சமின்றி எடுத்து உரைக்கும்; வியாபார நுணுக்கங்களை அவ்வப்போது விவரிக்கும்; வைத்திய நுட்பதிட்டங்களை வகுத்துக்காட்டித்தெரிவிக்கும். இதனைப் படிப்போர் தமிழறிவு, சமயசாத்திர ஞானம், ஆசார சீர்திருத்த உண்மைகள், அரசியல் முறை, உலக நடை முதலியவற்றை ஒழுங்காக உணரலாம்.

மாதிரி பிரதி இனாம்.

| | | | |
|---|---|---|---|
| வருட சந்தா | உள்நாடு | ரூ. | 3—0—0 |
| | வெளிநாடு | ரூ. | 4—0—0 |

ஆசிரியர்:—மணி திருநாவுக்கரசு முதலியார்.

உபபத்திராதிபர்:—திரிசிரபுரம் நடராஜன்.

தமிழரசு காரிய நிலயம்,

31 வைத்தியநாத முதலி வீதி, சென்னை.


அடுத்த ஜென்மம் என்பது

முடிச்சுமாறிகள் பேச்சு.

"உண்மைவிளக்கம் பதிப்பகத்தில்" அச்சிடப்பட்டு திருமதி நாகம்மாளால் வெளியிடப்பட்டது.